தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com


MLM SOFTWARE Company
• Binary MLM Plan
• Single Leg MLM Plan
• Autopool MLM Plan
• Unilevel MLM Plan
• Matrix MLM Plan
• Stairstep MLM Plan
• Party MLM Plan
• Board MLM Plan
• Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:235 | 11-03-2026 | புதன்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

புதன்கிழமை
(11–03–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–27

சூரிய உதயம் 6.26

நட்சத்திரம்:
கேட்டை இரவு 9.49 வரை
பிறகு மூலம்

யோகம் :
இன்று காலை 8.37 வரை
ஹர்ஷனம் பின்பு வஜ்ரம்.

கரணம்
இன்று பிற்பகல் 1.00 வரை
பத்திரை பின்பு பவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
பரணி கார்த்திகை

நல்ல நேரம்
காலை 6–7 மணி.
மாலை 4 –5 மணி.

இராகு காலம்
பிற்பகல் 12.00 – 1.30.

எமகண்டம்
காலை 7.30 – 9.00.

குளிகை
பிற்பகல் 10.30 –12.00.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# எரிவாயு தட்டுப்பாடு: பெட்ரோலியத்துறை மந்திரியுடன் பிரதமர் மோடி ஆலோசனை

**பிரதமர் மோடி**

**புதுடெல்லி, மார்ச் 11:**

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் நடத்தும் தாக்குதலும் அதற்கு பதிலடியாக மேற்காசிய நாடுகள் மீது ஈரான் நடத்தும் தாக்குதலும் உலகம் முழுவதும் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளன. வளைகுடா நாடுகளில் இருந்து உலக நாடுகளுக்கு கச்சா எண்ணெய் கொண்டு செல்வது தடைப்பட்டுள்ளது.

இதன்பாதிப்பு உலகம் முழுவதும் தென்பட தொடங்கி உள்ளது. இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பெட்ரோல் பங்குகளில் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர். பெட்ரோல் விலையும் கூடியுள்ளது. அதேபோல வங்காள தேசத்திலும் பெட்ரோல் - டீசலுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இந்தநிலையில் நாடு முழுவதும் எரிவாயு சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தென்மாநிலங்களில் ஓட்டல்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. பெங்களூரு, புதுச்சேரியில் உள்ள உணவகங்கள் மூடப்பட்டுள்ளன. தமிழகத்தில் ஹோட்டல் உரிமையாளர் சங்கத்தினர், வணிக சிலிண்டர் வினியோகத்தை தடை செய்யக்கூடாது என்று அரசை வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நாடு முழுவதும் நிலவும் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக நாடாளுமன்றத்தில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் மோடி, மத்திய பெட்ரோலியம், இயற்கை எரிவாயு துறை மந்திரி ஹர்தீப் பூரி உடன் ஆலோசனை மேற்கொண்டார். உள்நாட்டில் சமையல் எரிவாயு மற்றும் பெட்ரோலிய பொருட்களின் இருப்பு குறித்து மத்திய மந்திரியிடம் பிரதமர் மோடி கேட்டறிந்தார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க, எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்தாலும் மக்களுக்கு பாதிப்பு இல்லாமல் விலையை கட்டுக்குள் வைக்க வேண்டும் என பிரதமர் மோடி ஆலோசனை வழங்கி உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் இறக்குமதி பாதிக்கப்படாமல் இருக்க, மாற்று வழிகள், பிற நாடுகளிடமிருந்து எரிபொருளை பெறுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### வங்கதேசத்துக்கு 5,000 டன் டீசல் வழங்குகிறது இந்தியா!

வங்கதேச பெட்ரோலியக் கழகத்தின் (பிபிசி) தலைவர் முகமது ரெசானூர் ரஹ்மான்,"இந்தியாவுடன் எங்களுக்கு ஒரு ஒப்பந்தம் உள்ளது, அந்த ஒப்பந்தத்தின்படி, ஒவ்வொரு ஆண்டும் குழாய் வழியாக இந்தியா வங்கதேசத்திற்கு 1,80,000 டன் டீசலை வழங்கும். இப்போது வழங்கப்படும் 5,000 டன் டீசல் அந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும்.

இந்த ஒப்பந்தத்தின்படி, ஆறு மாதங்களுக்குள் குறைந்தது 90,000 டன் டீசல் வங்கதேசத்திற்கு இறக்குமதி செய்யப்பட வேண்டும். இன்று 5,000 டன் டீசல் வந்து சேருகிறது. அடுத்த இரண்டு மாதங்களுக்குள், முழு ஆறு மாதங்களுக்குமான மொத்த டீசலை நாங்கள் பெறுவோம்" என்று கூறினார்.

நாட்டில் தற்போதைய எரிபொருள் நிலைமை குறித்து வங்கதேச எரிசக்தி அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'தற்போதைய நெருக்கடி சூழ்நிலையில், சந்தையில் செயற்கையான பற்றாக்குறையை உருவாக்கும் முயற்சியில் சில நேர்மையற்ற வர்த்தகர்கள் சட்டவிரோதமாக எரிபொருளை சேமித்து வைத்திருப்பதாக பல்வேறு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# 'எரிவாயு தட்டுப்பாடுக்கு மாற்று ஏற்பாடு செய்வீர்'

## பிரதமருக்கு முதல்வர் கடிதம்

**சென்னை, மார்ச் 11:**

'அமெரிக்கா - ஈரான் போரினால் தமிழ்நாட்டுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், இது குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இன்று விரிவாக ஆய்வு செய்தேன்.

தற்போது பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு வளைகுடா நாடுகளில் வாழும் தமிழர்களின் பாதுகாப்பையும் அப்பகுதியில் சிக்கியுள்ள தமிழ்நாட்டு மீனவர்களின் நலனையும் உறுதி செய்திடத் தேவையான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுத்திட வேண்டும் என்று பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.

இந்தப் போரால் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாட்டினால் பொதுமக்களும் வணிக நிறுவனங்களும், தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளும் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும்.

குறிப்பாக, வணிக எரிவாயு தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள உணவகங்களுக்குத் தேவையான அனைத்து மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும் என்றும், தேவைப்படும் கூடுதல் மின்சாரத்தைப் பெற்று வழங்கிட வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளேன்' எனத் தெரிவித்துள்ளார்.

மத்திய, மாநில அரசுகளுக்கு இபிஎஸ் வலியுறுத்தல்:

இதனிடையே, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "ஈரான் - இஸ்ரேல், வளைகுடா நாடுகளுக்கு இடையே நடைபெற்று வரும் போர் காரணமாக பெட்ரோலிய பொருட்களை இந்தியாவுக்கு கொண்டுவருவதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக வணிக மற்றும் தொழிற்சாலை பயன்பாட்டுக்கான சிலிண்டர் விநியோகத்தைத் தற்காலிகமாக நிறுத்துவதாக இந்தியன் ஆயில் நிறுவனம் அறிவித்துள்ளது. எல்பிஜி-க்கு மாற்றாக வேறு எரிபொருளை பயன்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழகத்தில் ஏற்கெனவே சில மாவட்டங்களில் சிலிண்டர்கள் கிடைக்காததால் உணவகங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை மேலும் தீவிரமடையாமல் இருக்க, உரிய நடவடிக்கைகளை எடுத்து, தக்க நேரத்தில் சிலிண்டர்கள் கிடைக்க ஆவண செய்ய வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துகிறேன்.

அதேபோல், மக்களிடையே இதை வைத்து தேவையற்ற அச்ச உணர்வை ஏற்படுத்தும் வேலைகளை விடுத்து, தமிழகத்தில் உணவகங்கள் தொடர்ந்து இயங்குவதற்கான எரிவாயு ஏற்பாடுகள் மற்றும் சலுகைகளை பொறுப்புள்ள மாநில அரசாக செய்து தர வேண்டும் எனவும், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க, அம்மா உணவகங்களை மேலும் முழுவீச்சில் இயங்கவைத்து, எவ்வித தடையுமின்றி தொடர்ந்து உணவு வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் எனவும் திமுக அரசை வலியுறுத்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# அத்தியாவசியத் துறைகளுக்கு சிலிண்டர் முன்னுரிமை!

## எண்ணெய் நிறுவனங்கள் அறிவிப்பு

**புதுடெல்லி, மார்ச் 11:**

மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் போன்ற அத்தியாவசியத் துறைகளுக்கு எல்பிஜி சிலிண்டர் விநியோகம் செய்ய முன்னுரிமை வழங்கப்படும் என எண்ணெய் நிறுவனங்கள் கூட்டாக அறிவித்துள்ளன.

இஸ்ரேல் - ஈரான் இடையேயான போரால் வளைகுடா நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு கிடைக்கும் கச்சா எண்ணெய் தடைபட்டுள்ளதால் இந்தியாவின் பல்வேறு பகுதிகளால் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் வீட்டு உபயோக சிலிண்டருக்கு முன்னுரிமை கொடுக்கவும் சமையல் எரிவாயு சிலிண்டர் உற்பத்தியை அதிகரிக்கவும் நிறுவனங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

வணிக சிலிண்டர் விற்பனை நிறுத்தப்படுவதாக இந்தியன் ஆயில் நிறுவனம் அறிவித்தது. தொடர்ந்து உணவகங்கள், தொழிற்சாலைகள் என வணிக நிறுவனங்கள் இதுபற்றி கவலை தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில் இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து கூட்டாக ஒரு அறிவிப்பு வெளியிட்டுள்ளன.

"தற்போதைய போர்ச் சூழலால் உலகளவில் எரிபொருள் விநியோகம் பாதிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளதால் எல்பிஜி சிலிண்டர் உற்பத்தியை மேம்படுத்தவும் வீட்டு உபயோகத்திற்கு சிலிண்டர் வழங்கவும் முன்னுரிமை வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

அதேபோல, மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் போன்ற வீட்டு உபயோகம் அல்லாத அத்தியாவசியத் துறைகளுக்கு கேஸ் சிலிண்டர் வழங்க முன்னுரிமை வழங்கப்படும்.

பிற அத்தியாவசியத் துறைகளின் கோரிக்கைகள் எண்ணெய் நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர்கள் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, தகுதி, தேவை மற்றும் தயாரிப்பு அடிப்படையில் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

இதற்காக எண்ணெய் நிறுவனங்களின் இயக்குநர்கள் 3 பேர் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்களின் இ-மெயில் முகவரியும் வழங்கப்பட்டுள்ளது. பிற அத்தியாவசியத்துறைகளைச் சேர்ந்தவர்கள் இந்த முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். அவர்களின் தேவை, தகுதி, சிலிண்டர் இருப்பு ஆகியவற்றின் அடிப்படையில் முடிவு செய்து விநியோகம் செய்யப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வணிக சிலிண்டர் நிறுத்தம்: புதுச்சேரியில் ஹோட்டல்கள் மூடப்படுவதாக அறிவிப்பு

**புதுச்சேரி, மார்ச் 11:**

வணிக சிலிண்டர் நிறுத்தத்தால் புதுச்சேரியில் ஹோட்டல்கள் மூடப்படும் என ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

ஈரான் மீதான அமெரிக்க, இஸ்ரேல் போர் காரணமாக புதுச்சேரியில் வர்த்தக ரீதியிலான சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. கையிருப்பில் உள்ள சிலிண்டர்கள் இன்னும் ஒரிரு நாட்கள் மட்டுமே வரும் என்பதால் ஹோட்டல்களுக்கு வர்த்தக ரீதியிலான சிலிண்டர்கள் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.

சுற்றுலா நகரான புதுவையில் 700-க்கும் மேற்பட்ட ஹோட்டல்கள் உள்ளன. அத்துடன் ஏராளமான சாலையோர உணவகங்களும் இயங்குகின்றன.

சுற்றுலா பயணிகள் பெரிய ஹோட்டல்கள் தொடங்கி சிறிய ஹோட்டல்களை நம்பி புதுச்சேரி வருகின்றனர்.

தற்போது வணிக சிலிண்டர் நிறுத்தம் தொடர்பாக ஹோட்டல் உரிமையாளர் சங்கம் தலைவர் பாஸ்கரனிடம் கேட்டதற்கு, "புதுச்சேரியிலுள்ள 700-க்கும் மேற்பட்ட ஹோட்டல்களுக்கு நாள்தோறும் 1000-க்கும் மேற்பட்ட வணிக சிலிண்டர்கள் தேவை.

சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டாதால் (மார்ச் 11) முதல் படிப்படியாக ஹோட்டல்கள் மூடப்படும்" என தெரிவித்தார்.

# தகுதியுள்ள வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்படாது: தலைமைத் தேர்தல் ஆணையர்!

**சென்னை, மார்ச் 11:**

தகுதிவாய்ந்த எந்தவொரு வாக்காளரின் பெயரும் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படாது என தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. இதுதொடர்பாக இன்று செய்தியாளர்களிடம் பேசிய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், "மேற்கு வங்க மக்கள் ஜனநாயகத்தின் மீது எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இங்கு நம்பிக்கையான, சுதந்திரமான மற்றும் அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதே எங்களின் இலக்கு. தகுதியுள்ள வாக்காளர் ஒவ்வொருவரும் அவர்களின் வாக்குகளைப் பதிவு செய்வதற்கான உரிமை உள்ளது. தகுதிவாய்ந்தவர்கள் எவரின் வாக்குகளும் நீக்கப்படாது.

மேற்கு வங்கத்தில் 80,000 வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள நிலையில் அவற்றில் 61,000 வாக்குச்சாவடிகள் கிராமப் புறங்களில் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் விதமாக அனைத்து வாக்குச்சாவடிகளிலும் 100 சதவீத நேரடி இணைய ஒளிபரப்பை தேர்தல் ஆணையம் செயல்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், தலைமைத் தேர்தல் ஆணையரை நீக்க எதிர்க்கட்சிகள் முன்மொழிவு ஒன்றை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
➢ Public Notice
➢ Legal Notice
➢ Tender Notice
➢ Society Notice
➢ Loss of Share
➢ Merger
➢ Acquisition
➢ AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
✆ : 9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

# திருக்குறள் குறள்-555

அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

(முறை செய்யாதவனுடைய)
செல்வத்தைத் தேய்த்து
அழிக்க வல்ல படை
அவனால் பலர் துன்பப்பட்டுத்
துன்பம் பொறுக்க முடியாமல்
அழுத கண்ணீர் அன்றோ.

## சிந்திக்க ஒரு நொடி

நம்பிக்கை வைத்தவன்
துரோகம் செய்து
விட்டான் என்று
புலம்பாதே....
நீ வைத்த நம்பிக்கை
தான் துரோகியை
உனக்கு அடையாளம்
காட்டி இருக்கு

உஷா முத்துராமன்

## செங்கரைப்பாளையத்தில் பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், குளூர் ஊராட்சி, செங்கரைப்பாளையம் மனவளக்கலை மன்ற அறிவுத்திருக்கோவில் சார்பில் மகளிருக்கு தையல் பயிற்சி கொடுத்து வருகின்றனர். பெண்கள் சுயதொழில் செய்து குடும்ப வருமானம் பெருக்கிக் கொள்ள உதவும் பொருட்டு, தையல் பயிற்சியில் சிறந்த வல்லுனரைக் கொண்டு பெண்களுக்கு அறிவுத்திருக்கோயிலில் இலவசமாக தையல் பயிற்சி அளிக்கப்பட்டு,தையல் பயிற்சி சான்றிதழும் வழங்கப்படுகிறது. இந்த சான்றிதழைப் பயன்படுத்தி அரசு வழங்கும் இலவச தையல் மிஷின் பெறலாம். 09.03.2026 அன்று பெண்கள் தாங்கள் தைத்த துணிகளை மகிழ்வுடன் காண்பிக்கின்றனர். புதிதாக பயிற்சி பெற விரும்பும் பெண்கள் செங்கரைப்பாளையம் அறிவுத்திருக்கோவிலுக்கு வாருங்கள். நன்றி! வணக்கம்! வாழ்க வளமுடன்

## பேரணாம்பட்டு நகர ஒன்றிய விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செயலாளர்களாக எ. ராஜேஷ்குமார், டி.தம்பிசேகர் நியமனம்!

**வேலூர், மார்ச் 11:**
வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செயலாளராக பேரணாம்பட்டு கள்ளிப்பேட்டையைச் சேர்ந்த ஏ. ராஜேஷ்குமார், பேரணாம்பட்டு நகர விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செயலாளராக டி. தம்பிசேகர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வேலூர் மாவட்ட செயலாளர் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செயலாளர் குமரேசன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செயலாளர் வேதாச்சலம் (எ) மறைமலை ஆகியோரின் சிபாரிசின் பேரில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் ,நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் நியமனம் செய்து அறிவித்துள்ளார்.

## அங்கன்வாடி மையம் கட்டிடம் திறப்பு விழா

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் ஒன்றியம் பாலியப்பட்டு ஊராட்சியில் புதியதாக கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி மைய கட்டிடத்தை செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு. பெ. கிரி அவர்கள் அங்கன்வாடி மைய கட்டிடத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். ஒன்றிய கழகச் செயலாளர் த. செந்தில்குமார் அவர்கள், உடன் கழகத் தோழர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மற்றும் பள்ளி குழந்தைகள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சர்வதேச மகளிர் தின விழாவில் சாதனை மகளிர் விருது வழங்கி பாராட்டு!

**வேலூர், மார்ச் 11:**
சேவகன் பொதுநல அறக்கட்டளை, தமிழ்நாடு அறிவியல் இயக்கம், காட்பாடி லயன் சங்கம், பாத் பைன்டர்ஸ் அறக்கட்டளை, தோழி பெண்கள் கூட்டமைப்பு, இந்தியன் ரெட் கிராஸ் சங்கம் காட்பாடி கிளை இணைந்து காட்பாடி சித்தூர் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள நாராயணா திருமண மண்டபத்தில் உள்ள சேவகன் அறக்கட்டளை வளாகத்தில் சர்வதேச மகளிர் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் எம்.ஈஸ்வரி, வகிதாக்கான், கவிதா, வினோதினி, மகாலட்சுமி, வாலாஜா தையல் ஆசிரியை கவிதா, திவ்யபாரதி, பேபி, ஷாலினி, குமாரி திலகா, அருட்செல்வி ஆகியோருக்கு சிறந்த பெண்மணிக்கான சாதனை மகளிர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ராணிப்பேட்டை மாவட்ட மகளிர் தொழில் முனைவோர் சங்க தையல் பயிற்சி ஆரி ஒர்க் மாணவிகள் மகளிர் முன்னேற்ற ஓவிய ஆவணங்களுக்கு சிறப்பு பரிசுகளை காட்பாடி வட்ட ரெட் கிராஸ் சங்கத்தின் அவைத்தலைவர் முனைவர் செ. நா.ஜனார்த்தனன் பரிசுகளை வழங்கி பாராட்டி பேசினார்.

சேவகன் அறக்கட்டளையின் இயக்குனர் ஆர்.ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். காட்பாடி லயன் சங்க தலைவர் சுரேஷ்குமார் வரவேற்றுப் பேசினார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க காட்பாடி கிளை தலைவர் ஆர்.சுதாகர், லயன் சங்க சோக்கராமன், தோழி பெண்கள் கூட்டமைப்பின் தலைவி எம். ஈஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். லயன்ஸ் சங்க நிர்வாகிகள் பெல்.ரத்தினம், திருமகள் செல்வமணி, சரசி, மண்டல தலைவர் திலகர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று பேசினர்.

தமிழ்நாடு அரசின் மகளிர் நலன் மற்றும் மகளிர் உரிமைத் தொகை துறையின் சார்பாக குழந்தை திருமணம் தடுத்தல் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இலவச தையல் இயந்திரம் பெற தேவையான ஆவணங்கள் குறித்து சமூக நல அலுவலர் அருட்செல்வி கருத்துரை வழங்கினார். மகளிர் கூட்டமைப்பின் நிர்வாகிகள் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தனர்.

## மண்டபத்தில் முன்னாள் மாணவர்கள் சார்பில் இப்தார் நிகழ்ச்சி

**மண்டபம், மார்ச்.11 :**
மண்டபத்தில் அரசு மேல்நிலைப் பள்ளி முன்னாள் மாணவர்கள் சார்பில் இப்தார் என்னும் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் முகாம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 1985-ம் ஆண்டு முதல் 2000-ம் ஆண்டு வரை பயின்ற முன்னாள் மாணவர்கள் கூட்டமைப்பு சார்பில் மண்டபம் வடக்கு கடற்கரைப் பகுதியில் இப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதை தொடர்ந்து மார்ச் மாதத்திற்க்கான கூட்டம் தலைவர் தில்லைராஜன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பழுதடைந்த நிலையில் உள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் குடிநீர் குழாய்களை மறுசீரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவதன என தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தலைவர் தில்லைராஜன், துணைத் தலைவர் முனைவர் ஜெயக்குமார், செயலாளர் முஜிபுர் ரஹ்மான், பொருளாளர் சூரியநாராயண மூர்த்தி, இணை பொருளாளர் செய்யது காசிம் மற்றும் இதர நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## மக்கள் குறைத்தீர்வு நாள் கூட்டம்

**திருவண்ணாமலை, மார்ச் 11:**
திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மக்கள் குறைதீர்வு கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைத்தீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. இராம்பிரதீபன் அவர்கள் மக்கள் குறைத்தீர்வு நாள் கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். உடன் அனைத்துதுறை அரசு அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## பாறையை நேரடியாக குடைந்து உருவாக்கப்பட்ட இந்த கோவில்

தமிழ்நாட்டின் கோவில் கட்டிடக்கலையில் புதிய பாதையைத் திறந்த வரலாற்றுச் சின்னமாக விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மண்டகப்பட்டு குடைவரைக் கோவில் பார்க்கப்படுகிறது. மரம், செங்கல், சுதை போன்ற பொருட்களை பயன்படுத்தாமல் பாறையை நேரடியாக குடைந்து உருவாக்கப்பட்ட இந்த கோவில், தமிழகத்தின் முதல் குடைவரைக் கோவிலாக வரலாற்றில் குறிப்பிடப்படுகிறது.

## உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் மகா ஆரத்தி தரிசனம்

**செய்யாறு, மார்ச் .11:**
செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் மகா ஆரத்தி தரிசனம் நேற்று சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக யாக வேள்வி பூஜையை ஆலய குரு சங்கர் குருஜி நடத்தினார் . நிகழ்வில் பால சன்னியாசி லோகேஸ்வர சரஸ்வதி சுவாமிகள் கலந்து கொண்டார்.பின்னர் கலச புறப்பாடு நிகழ்வும், அதனைத் தொடர்ந்து மூலவரான அம்பாளுக்கு அபிஷேகம், ஆராதனையும் நடைபெற்றது.

பின்னர் சிறப்பு அலங்காரத்தில் அம்பாள் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## மங்கள வாரம் நன்னாளில் நம் வாசவி அம்மன் சிறப்பு அலங்காரத்தில்

**திருப்பூர், மார்ச் 11:**
திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் மங்கள வாரம் நன்னாளில் நம் வாசவி அம்மன் அபிஷேகம், அலங்காரத்துடன், செவ்வரளி மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## சீர்காழியில் திருக்குறள் பண்பாட்டு பேரவை சார்பில் 34 ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாள் நிறைவு விழா

**சீர்காழி, மார்ச் ,11:**
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி எல்.எம். சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் சீர்காழியில் செயல்பட்டு வரும் திருக்குறள் பண்பாட்டு பேரவையின் சார்பில் 34 ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாள் நிறைவு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் ஆண்டு முழுவதும் சீர்காழி வட்டாரத்தில் அமைந்துள்ள அனைத்து வகை பள்ளிகளிலும் திருக்குறள் சார்ந்த போட்டிகளை மாணவ மாணவிகளுக்கு பள்ளிகளில் நடத்தப்பட்டு அவர்களுக்கு பரிசுகளும், நற்சான்றிதழும் வழங்கப்பட்டது.

இவ்விழாவிற்கு பேரவையின் தலைவர் வே. சக்கரபாணி மற்றும் மருத்துவர் ப.முத்துகுமார் ஆகியோர் தலைமை வகித்தனர். சீர்காழி சபாநாயக முதலியார் இந்து மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் எஸ். முரளிதரன், நூலக வாசகர் வட்ட தலைவர் எல். பாபு நேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.சிறப்பு விருந்தினராக செம்பனார்கோயில் கலைமகள் கல்லூரியின் தமிழ் உதவி பேராசிரியர் கு.பவதாரணி " குரல் வழி வாழ்வியல் நெறியும் சமுதாயமும் "என்ற தலைப்பில் விழா பேருரை ஆற்றினார். முன்னதாக பேரவையின் ஆண்டு அறிக்கையினை நந்த. ராஜேந்திரன் இணை செயலாளர் வாசித்தளித்தார்.

திருக்குறள் பண்பாட்டு பேரவையின் பொருளாளர் மு.முத்துக் கருப்பன் மற்றும் பேரவையின் செயலர் சிவ. அன்பழகன், மயிலாடுதுறை தமிழ் வளர்ச்சி துறையின் உதவி இயக்குனர் நீ. குறளரசர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். வெ.அகோர மூர்த்தி தமிழ் ஆசிரியர் நிகழ்ச்சியினை ஒருங்கிணைக்க நிகழ்ச்சியில் புத்தூர் அரசு கல்லூரி விரிவுரையாளர் சசிகுமார் ச. மு.இந்து மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியர்கள் புலவேந்திரன்,திருநாவுக்கரசு, மங்கையர்க்கரசி, ராஜேஸ்வரி, கவிதா, பொறியாளர் சுப்ரமணியன் பொறியாளர் விக்னோத்குமார், சென்னை உயர் நீதி மன்ற வழக்கறிஞர் இராம. சிவசங்கர் மேலும் 500க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்களும் 200க்கும் மேற்பட்ட பெற்றோர்களும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் சான்றோர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிறைவாக ஓய்வு பெற்ற தமிழாசிரியர் காழி. கோ. வைத்தியநாத சுவாமி நன்றி கூறினார்.

## மக்கள் செல்வன் விஜய் சேதுபதி ரசிகர் நற்பணி இயக்கம் சார்பில் மனிதம் போற்றும் உணவு திட்டம் துவக்க விழா

**செஞ்சி, மார்ச் 11:**
விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வெள்ளக்குளம் பகுதியில் இயங்கி வரும் ஏபில் மழலையர் பள்ளியில் நடிகர் விஜய் சேதுபதியின் விழுப்புரம் மாவட்ட மக்கள் செல்வன் விஜய் சேதுபதி ரசிகர் நற்பணி இயக்கம் சார்பில் தினம்தோறும் மதிய உணவு வழங்கும் மனிதம் போற்றும் உணவு திட்டம் துவக்க விழா நடைபெற்றது.

மக்கள் செல்வன் விஜய் சேதுபதி ரசிகர் நற்பணி மன்ற இயக்கத்தின் மாவட்ட நிர்வாகி வல்லரசு சரவணன் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் புகழேந்தி முன்னிலை வகித்தார் . ஏபில் மழலையர் பள்ளியின் தாளாளர் ஜான் வில்லியம்ஸ் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் ஏபில் பள்ளிக்கு 50 கிலோ அரிசி மளிகை பொருட்கள் வழங்கி மனிதம் போற்றும் உணவு திட்டத்தினை துவக்கி வைத்தனர். தொடர்ந்து மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது

நிகழ்ச்சியில் மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் எழில் பானுப்பிரியன் சல்மான் பிரகாஷ் கோகுல் மாயக்கண்ணன் இர்ஃபான் அசோக் புவனேஷ் வழக்கறிஞர் கமலக்கண்ணன் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்

## இவர்கள் கூறுவதென்ன?

### சொந்த நலனுக்காக எடப்பாடி பழனிசாமி அடிமையாக இருக்கிறார்: மு.க.ஸ்டாலின் கடும் தாக்கு

திருச்சி திமுக மாநில மாநாட்டில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:-

தந்தை பெரியாரால் கொள்கை உரம் பெற்று, பேரறிஞர் அண்ணாவால் பக்குவப்படுத்தப்பட்டு, தமிழினத் தலைவர் கலைஞரால் வழிநடத்தப்பட்ட நாம்தான் தமிழ்நாட்டை தொடர்ந்து ஆளவேண்டும் என்று உறுதியேற்போம்.

திராவிட மாடல் ஆட்சியில் அனைத்து துறைகளும் இரட்டிப்பு மடங்கிற்கும் அதிகமான வளர்ச்சியை அடைந்து, சாதனை படைத்துள்ளது. அதனால்தான், வரலாற்றிலேயே இல்லாத வகையில், 14 ஆண்டுகளுக்கு பிறகு நம் ஆட்சியில் 11.19 விழுக்காடு பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்திருக்கிறது. அ.தி.மு.க கூட்டணி என்றால் மோடியும் அமித்ஷாவும் கோபப்படுவார்கள். என்.டி.ஏ. கூட்டணி என்றுதான் சொல்ல வேண்டும். அப்படி, கூட்டணிக்கு பெயர் கூட வைக்க முடியாத நிலையில்தான் அ.தி.மு.க இருக்கிறது. தமிழ்நாட்டிற்கான திட்டங்களை தேர்தலுக்காக கூட அறிவிக்க மத்திய பா.ஜ.க ஆட்சியாளர்களுக்கு மனமில்லை. நாம் கேட்பதை எல்லாம் 'நோ' என்று சொல்லும் என்.டி.ஏ.விற்கு தமிழ்நாடு எப்போதும் 'நோ' தான் சொல்லும். டப்பா இஞ்சினுக்கு இங்கே எப்போதும் அனுமதி இல்லை. தன் சொந்த நலனுக்காக எடப்பாடி பழனிசாமி அடிமையாக இருக்கிறார். இப்போது கூட பீகாரில் என்ன நடக்கிறது என்று பாருங்கள். நிதிஷ் குமாரின் தேவை முடிந்ததும், அவரை கழற்றிவிட்டு பா.ஜ.க ஆட்சி செய்யப் பார்க்கிறது. தமிழ்நாட்டிலும் அதையே செய்ய முயற்சிக்கிறது. ஆனால் தமிழ்நாடு எப்போதும் டெல்லிக்கு 'அவுட் ஆப் கண்ட்ரோல்' தான்.

### பெண்ணியம் பேசும் உங்களிடம் கண்ணியம் உள்ளதா? தவெக பெண் நிர்வாகி

தவெக பெண் நிர்வாகி ரஞ்சனா நாச்சியார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:- அனைவருக்கும் மகளிர் தின நல்வாழ்த்துகள். முக்கியமாக எங்கள் தலைவர், விஜய்க்கும் என் மகளிர் தின வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். பெண்ணியம் பேசும் உங்களிடம் கண்ணியம் உள்ளதா?"

தமிழக வெற்றி கழகம் சார்பாக மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. அந்த மேடையில் தலைவர் பல கருத்துகளை பகிர்ந்தார். அதில் குறிப்பிடத்தக்க ஒன்று அவருக்கும் அவரது மனைவிக்கும் இடையே நிலவிவரும் பிரச்சினையை நேரடியாகச் சொல்லாமல், கோடிட்டு காட்டும் விதத்தில் குறிப்பிட்டிருந்தது. "அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் பார்த்துக்கொள்கிறேன். அது வொர்தே இல்லை" என்று கூறினீர்கள். அந்த ஒரு வாக்கியம் தான் இன்று பல கேள்விகளை எழுப்புகிறது. எது வொர்த் இல்லை தலைவா? உங்கள் மனைவியா? அல்லது உங்கள் திருமண வாழ்க்கையா?. ஒரு அரசியல் தலைவர் பேசும் ஒவ்வொரு சொல்லும் ஒரு குடும்பத்தில் மட்டும் ஒலிக்காது. அது ஒரு சமூகத்தின் மனதிலும் ஒலிக்கும். உங்கள் மனைவி அவர்கள் உங்கள் வீட்டுக்குள் அவர்களை அனுமதிக்கப்பட வேண்டுமென்று நீதிமன்றத்தை நாடியிருக்கிறார் என்று செய்திகள் வெளிவருகின்றன. உங்கள் மனைவியை உங்கள் வீட்டினுள் அனுமதிக்காமல் இருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டுகள் பேசப்படும் நேரத்தில், "வீட்டிற்கு ஆறு சிலிண்டர் இலவசமாக தருகிறேன்" என்று மேடையில் பேசுவது ஒரு கடுமையான முரண்பாடாக தெரியவில்லையா?. ஒரு பக்கம் பெண்கள் உயர்வு பற்றி பேசுகிறீர்கள். மற்றொரு பக்கம் பெண்களின் மரியாதையை காக்கும் மொழி கூட உங்கள் வார்த்தைகளில் காணப்படவில்லை என்றால், அந்த அரசியல் எதற்காக? உங்கள் உண்மை முகம்தான் என்ன ? என்று தெரிவித்துள்ளார்.

### மீண்டும் சேப்பாக்கம் தொகுதியா? வேறு தொகுதியா?-உதயநிதி ஸ்டாலின் பதில்

தமிழக துணை முதல் அமைச்சரும் சேப்பாக்கம் தொகுதி எம்.எல்.ஏவுமான உதயநிதி ஸ்டாலின், வரும் சட்டசபைத் தேர்தலில் தொகுதி மாறி போட்டியிட இருப்பதாக அரசியல் வட்டாரத்தில் பேச்சு எழுந்தது. உதயநிதி ஸ்டாலின் திருவாரூர் தொகுதியில் போட்டியிட அதிகம் பேச்சு எழுந்த நிலையில், இன்று செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த உதயநிதி ஸ்டாலினிடம் இது பற்றி செய்தியாளர்கள் கேட்டனர்.

இதுகுறித்து உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது: "சட்டசபைத் தேர்தலில் மீண்டும் சேப்பாக்கம் தொகுதியில் போட்டியிடுவது குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் தலைமை முடிவு செய்யும்" என்று கூறினார். கடந்த சட்டமன்ற தேர்தலில் சேப்பாக்கம் தொகுதியில் போட்டியிட்ட உதயநிதி ஸ்டாலின் 93,285 வாக்குகள் பெற்று வென்றார். அவரை எதிர்த்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிட்டது. பாமக சார்பில் போட்டியிட்ட ஏ.வி.ஏ. கஸ்ஸாலி 23,930 வாக்குகள் மட்டுமே பெற்றார். இதன் மூலம் 69,355 வாக்குகள் வித்தியாசத்தில் உதயநிதி ஸ்டாலின் வெற்றி பெற்றார்.

## 50 தொகுதிகள்... துணை முதல்வர் பதவி! - பாஜக நிபந்தனைக்கு பணிகிறாரா விஜய்?

ஆளும் கட்சியான திமுக ஆரம்பம் முதலே தனது கூட்டணியைப் பலப்படுத்திக் கொண்டேவருகிறது. ஆனால், கூட்டணி விஷயத்தில் அதிமுக, பாஜக, தவெக போட்ட கணக்குகள் எல்லாம் சொதப்பலாகி வருகிறது. இதையடுத்து நேரடியாகவே களத்தில் இறங்கி இருக்கும் அமித் ஷா, விஜய்யை கூட்டணிக்குள் கொண்டு வருவதற்கான வேலைகளை வேகப்படுத்தி இருப்பதாகச் சொல்கிறார்கள்.

இதுகுறித்து பாஜக தரப்பில் நம்மிடம் பேசியவர்கள், "இம்முறை எப்படியாவது திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என்பதில் பாஜக மேலிடம் உறுதியாக இருக்கிறது. ஆனால், பழனிசாமியின் பிடிவாதத்தால் சசிகலா, ஓபிஎஸ், தேமுதிக உள்ளிட்ட சக்திகளை நழுவவிட்டு விட்டோம். நாங்களே இறங்கிப் பேசி இருக்காவிட்டால் தினகரனும் திசை மாறிப் போயிருப்பார்.

பழனிசாமி இப்படி கூட்டணி விஷயத்தில் அஜாக்கிரதையாக இருக்கும் அதேசமயம், சின்னச் சின்னக் கட்சிகளைக் கூட தேடிப்பிடித்து அழைத்து வந்து கூட்டணியைப் பலப்படுத்திக் கொண்டிருக்கிறார் ஸ்டாலின். இதனால், திமுக அணி தான் ஜெயிக்குமோ என்ற தோற்றம் மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டு வருகிறது. இப்படி நிலைமை கைமீறிப் போவதை உணர்ந்து தான் அமித் ஷாவே நேரடியாக களத்தில் இறங்கிவிட்டார். முதல் கட்டமாக சசிகலா மற்றும் ராமதாஸ் தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இதற்கு நடுவே, தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தையில், 'பாஜக-வுக்கு 55 தொகுதிகளைக் கொடுங்கள். கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகளுக்கான இடங்களையும் எங்களிடமே கொடுத்துவிடுங்கள்; நாங்கள் பிரித்துக் கொடுக்கிறோம்' என பியூஷ் கோயல் கேட்டுள்ளார். ஆனால் பழனிசாமியோ, 'பாஜக-வுக்கு 25 தொகுதிகளுக்கு மேல் தரவாய்ப்பில்லை' என்று சொல்லி இருக்கிறார். மக்களவைத் தேர்தல் வாக்கு சதவீதத்தைச் சொல்லி கோயல் விடாப்பிடியாக வாதாடவும், பேச்சுவார்த்தையை பாதியிலேயே முறித்துக் கொண்டு வெளியேறி இருக்கிறார் பழனிசாமி.

இதையெல்லாம் அறிந்த அமித் ஷா உடனடியாக பழனிசாமியை டெல்லிக்கு அழைத்துப் பேசினார். அவரிடமும் பழனிசாமி பிடி கொடுக்காததால் தான், தற்போது 'டார்கெட் விஜய்' ஆபரேஷனில் இறங்கி இருக்கிறார் அமித் ஷா. அதன்படி விஜய்யின் நண்பர் விஷ்ணு ரெட்டி, ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண், பியூஷ் கோயல் மூலமாக அமித் ஷா விஜய் தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். 'திமுக-வை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும் என்பது தான் நம்முடைய இலக்கு.

எனவே, நீங்கள் என்டிஏ-வுக்கு வந்து விடுங்கள். உங்களுக்கு 50 சீட், துணை முதல்வர் பதவி தருகிறோம். நீங்கள் தனித்து நின்றால் அது திமுக-வுக்குத்தான் வாய்ப்பாக அமையும்' என பாஜக தரப்பில் பேசப்பட்டிருக்கிறது. இதனைத் தொடர்ந்து நேரடியாகவே விஜய்யிடம் அமித் ஷா தரப்பு பேசியதாகவும் சொல்கிறார்கள்.

இது குறித்து தமிழக பாஜக தலைமை செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதியிடம் கேட்டதற்கு, "தேஜ கூட்டணிக்கு விஜய்யை கொண்டுவருவதற்கு அமித் ஷா முயற்சிப்பதாக வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை" என்று மட்டும் சொன்னார். விஜய்யுடன் இனி யார் கூட்டணிக்கு செல்வார் எனத் தெரியவில்லை.

இப்படியான சூழலில் விஜய்யிடம் ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் பேசியிருப்பதாக தகவல். அப்போது தேஜ கூட்டணியில் இணைந்தால் நல்லது என ஆலோசனை வழங்கியதாவும் தகவல். என்றார்.

## "தவெகவுடன் கூட்டணி பேச்சை பாஜக நடத்தவில்லை" - நயினார் நாகேந்திரன் தகவல்

தவெக-வுடன் கூட்டணி பேச்சை பாஜக நடத்தவில்லை என பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

கும்பகோணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தவெகவுடன் பாஜக கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவில்லை. திருச்சியில் நடைபெற உள்ள பாஜக பொதுக்கூட்டத்தில் தவெகவுடன் கூட்டணி குறித்து அறிவிக்கப்படும் என்பது வதந்தி. கரூர் விவகாரத்தில் தவெக தலைவர் விஜய்-க்கு தற்போது 3-வது முறையாக சிபிஐ சம்மன் கொடுத்துள்ளது. இதற்கும், பாஜகவுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. தேசிய ஜனநாயக கூட்டணியில் இதுவரை தொகுதிப் பங்கீடு தொடர்பாக பேச்சுவார்த்தை தொடங்கவில்லை.

தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரம் குறித்து பிரதமர் மோடி இங்கு மட்டுமல்ல, பல்வேறு நாடுகளிலும் பேசியுள்ளார் என்பதை எதிரணியினர் மறந்து விட்டார்கள். தமிழுக்காகவும், தமிழ் வளர்ச்சிக்காகவும் திமுக என்ன செய்துள்ளது என்பதை முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம் யாரும் கேட்பது இல்லை. சொத்து வரியை உயர்த்த மாட்டோம் என்றார்கள், 300 சதவீதம் உயர்த்தி உள்ளார்கள்.

மின் கட்டணம் மாதம் ஒருமுறை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று சொன்னதையும் நிறைவேற்றவில்லை. சிலிண்டருக்கு ரூ.100, பெட்ரோலுக்கு ரூ.10, டீசலுக்கு ரூ.5 குறைப்பதாக சொன்னார்கள், அதையும் செய்யவில்லை. ஆயிரம் தடுப்பணைகள் கட்டுவோம் என்றார்கள், ஆனால் ஒரு தடுப்பணை கூட கட்டவில்லை. இதனால், ஆண்டுக்கு 200 டிஎம்சி தண்ணீர் கடலில் வீணாக கலக்கிறது.

தமிழகத்தில் திமுக ஆட்சியில் 34 லாக் அப் மரணங்கள் நடந்துள்ளன. தினமும் படுகொலைகள் நடக்கின்றன. அதேபோன்று கஞ்சா போதையில் சாலையில் செல் பவர்களை, விரட்டி விரட்டி வெட்டுகிறார்கள். முதல்வர் ஸ்டாலின் ஆட்சியில், அந்த அளவுக்கு சட்டம் ஒழுங்கு படுமோசமாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## தேர்தல் அறிக்கை: பணிகளை வேகப்படுத்த மு.க.ஸ்டாலின் உத்தரவு

தற்போது தி.மு.க. தேர்தல் அறிக்கை அச்சிடும் பணியில் உள்ளது. அடுத்த வாரம் 18-ந் தேதிக்கு மேல் எந்த நேரமும் தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியாகும் என்று அண்ணா அறிவாலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் கடந்த 2021-ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலின்போது, தி.மு.க. கூட்டணியில் 13 கட்சிகள் இடம்பெற்றிருந்தன. இதில் தி.மு.க. 173, காங்கிரஸ் 25, ம.தி.மு.க. 6, இந்திய கம்யூனிஸ்டு 6, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு 6, விடுதலை சிறுத்தைகள் கட்சி 6, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 3, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி 3, மனிதநேய மக்கள் கட்சி 2, அகில இந்திய பார்வர்டு பிளாக் 1, தமிழக வாழ்வுரிமை கட்சி 1, மக்கள் விடுதலை கட்சி 1, ஆதிதமிழர் பேரவை 1 என போட்டியிட்டன. இதில் காங்கிரஸ், இரு கம்யூனிஸ்டு கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகளை தவிர ஏனைய கட்சிகள் தி.மு.க.வின் சின்னமான உதயசூரியன் சின்னத்திலேயே போட்டியிட்டன.

தி.மு.க. கூட்டணியில் 26 கட்சிகள்: 2026 சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் 26 கட்சிகள் இடம்பெற்றுள்ளன. அதாவது, கடந்த தேர்தலைவிட இருமடங்கு அதிகம். ஆனால், தி.மு.க. கூட்டணியில் இத்தனை கட்சிகள் இடம்பெற்றிருந்தாலும், காங்கிரஸ் (28), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (2), மனிதநேய மக்கள் கட்சி (2) உள்ளிட்டவைகளுடன் மட்டுமே தொகுதி பங்கீடு முடிவடைந்துள்ளது. ஏனைய கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. அதிகாரப்பூர்வமாக அண்ணா அறிவாலயத்தில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றாலும், கூட்டணி கட்சிகளுடன் போன் மூலமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அந்த வகையில், தே.மு.தி.க.வுக்கு 8, ம.தி.மு.க.வுக்கு 6, இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு 6, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கு 6, விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு 6 தொகுதிகள் ஒதுக்கபேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதில் ம.தி.மு.க. தனிச் சின்னத்தில் போட்டியிட முடிவு செய்தால், தொகுதிகள் எண்ணிக்கை குறைக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. இரு கம்யூனிஸ்டு கட்சிகளுக்கும் தலா ஒரு தொகுதிகளை குறைக்கலாமா? என்றும் தி.மு.க. தலைமை யோசித்து வருகிறது. மேலும் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிக்கு 2, மக்கள் நீதி மய்யத்துக்கு 2, மனிதநேய ஜனநாயக கட்சிக்கு 1, முக்குலத்தோர் புலிப்படைக்கு 1, தமிழக வாழ்வுரிமைக் கட்சிக்கு 1, தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவைக்கு 1, எஸ்.டி.பி.ஐ.க்கு 1, ஆதி தமிழர் பேரவைக்கு 1 என தொகுதிகள் ஒதுக்கப்பட இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## "விஜயகாந்தின் பல வருட கனவு நனவாகியிருக்கிறது" - எல்.கே.சுதீஷ் நெகிழ்ச்சி

விஜயகாந்தின் பல வருட கனவு நனவாகியிருப்பதாக மாநிலங்களவை உறுப்பினராக தேர்வான எல்.கே சுதீஷ் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

மாநிலங்களவை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டதற்கான சான்றிதழை நேற்று பெற்றுக் கொண்ட தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்த நேரத்தில் எங்களின் பொதுச்செயலாளர் பிரேமலதா, முதல்வர் ஸ்டாலினுக்கு எனது நன்றிகள்.

கண்டிப்பாக பாராளுமன்றத்திற்கு சென்று என்னால் முடிந்தவரை மக்களுக்கு நல்லது செய்வேன், மக்களுக்காக பாடுபடுவேன். விரைவில் திமுக தொகுதிப்பங்கீடு பேச்சுவார்த்தை குழுவுடன் பேசி எத்தனை தொகுதிகள் மற்றும் எந்தெந்த தொகுதிகள் என்பதனை முடிவு செய்வோம்.

அதன் பிறகு அறிவிப்பு வெளியாகும். தேமுதிக நாடாளுமன்றத்துக்கு செல்ல வேண்டும் என்பது விஜயகாந்த் கனவு. விஜயகாந்த்தின் இருபது வருட கனவு தற்போது நனவாகி இருக்கின்றது. தொடர்ந்து நான்கு முறை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு இருக்கின்றோம்.

தற்போது தான் முதல்முறையாக பாராளுமன்றத்திற்கு நாங்கள் செல்கின்றோம். மக்களுக்கு தேவையான விஷயங்களை நான் செய்து காட்டுவேன். 2006-ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டேன். அதனைத் தொடர்ந்து 2009 தேர்தல், 2014 மற்றும் 2019 ஆகிய தேர்தல்களில் போட்டியிட்டுளேன். பல தேர்தல்களை சந்தித்து இருக்கின்றேன்.

கண்டிப்பாக இம்முறை எங்களுடைய கூட்டணி மிகப்பெரிய வெற்றியைப் பெரும். எங்கள் கூட்டணியின் தலைவர் ஸ்டாலின் தான் மீண்டும் முதல்வராவார். இவ்வாறு அவர் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, மாநிலங்களவை உறுப்பினராக தேர்வானதற்கான சான்றிதழை விஜயகாந்த் நினைவிடத்தில் வைத்து ஆசி பெற்ற சுதீஷ், தொடர்ந்து அங்கிருந்த அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்.

## 'மருத்துவக் காரணங்களால் ராமதாஸ் கட்சி நிர்வாக முடிவுகளை எடுக்க இயலாது' - அன்புமணி மனு தாக்கல்

'87 வயதாகும் ராமதாஸ் மருத்துவ காரணங்களால் பாமகவின் நிர்வாக முடிவுகளை எடுக்கும் நிலையில் இல்லை. இதை பயன்படுத்தி சிலர் அவரை தவறாக வழி நடத்துகின்றனர்' என்று உரிமையியல் நீதிமன்றத்தில் அன்புமணி பதில் மனு தாக்கல் செய்துள்ளார்.

பாமகவில் தந்தை - மகன் இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக கட்சி இரண்டு அணியாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், பாமகவின் பெயர், கொடி மற்றும் சின்னத்தை பயன்படுத்த அன்புமணிக்கு தடை விதிக்கக் கோரியும், கட்சியின் தலைவராக தம்மை அறிவிக்கக் கோரியும் ராமதாஸ் சார்பில் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நீதிபதி எம். தர்மபிரபு முன்பு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அன்புமணி தரப்பில் பதில் மனு மற்றும் ராமதாஸ் மனுவை நிராகரிக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யபட்டது.

அதில், 'ராமதாஸுக்கு தற்போது 87 வயது ஆகிவிட்டது. வயது மற்றும் மருத்துவ காரணங்களால் அவரால் கட்சியின் நிர்வாக முடிவுகளை எடுக்கும் நிலையில் இல்லை.

இதைப் பயன்படுத்தி சிலர் ராமதாஸை தவறாக வழி நடத்துகிறார்கள். சில தனி நபர்கள் பாமக கட்சிக்கு எதிராக செயல்பட்டு வருகின்றனர்.

ராமதாஸ் தன்னைத்தானே பா.ம.கவின் தலைவர் என அறிவித்துக் கொண்டது கட்சியின் சட்ட விதிகளுக்கு உட்பட்டது அல்ல. பா.ம.கவின் நிறுவனர் என்ற அடிப்படையில் பாமக கட்சியில் ஆலோசனை வழங்கவும் கட்சியின் வழிகாட்டுதல் மட்டுமே மேற்கொள்ள முடியும். ஆனால், கட்சியின் முடிவுகளை எடுக்க பாமகவின் பொதுக்குழு தான் உச்சபட்ச அதிகாரம் கொண்டது. பொதுக்குழு மட்டுமே அனைத்து முடிவுகளையும் எடுக்க உரிமை உள்ளது. ராமதாஸ் தொடர்ந்த இந்த உரிமையியல் வழக்கு விசாரணைக்கு உகந்தது அல்ல. பாமக கட்சியில் உரிமை கோரி வழக்கு தொடர நிறுவனருக்கு உரிமை, அதிகாரம் இல்லை.

தன்னைத் தானே தலைவர் என ராமதாஸ் அறிவித்துக் கொண்டு விதிகளை திருத்தி தேர்தல் ஆணையத்திற்கு தெரியப்படுத்தவில்லை. எனவே, இந்த வழக்கு விசாரணைக்கு உகந்தது அல்ல என்று கூறி ராமதாஸ் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்' என்று அன்புமணி தரப்பில் தாக்கல் செய்த மனுவில் தெரிவிக்கபட்டுள்ளது.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி, அன்புமணி தாக்கல் செய்த மனுவுக்கு மார்ச் 11-ம் தேதிக்குள் ராமதாஸ் தரப்பில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணை தள்ளிவைத்து உத்தரவிட்டார்.

## வணிக சிலிண்டர் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தம்

**புதுடெல்லி, மார்ச் 11:**

சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஓட்டல் சேவைகள் பெருமளவில் முடங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

பல முன்னணி ஓட்டல்களும் ஒரு நாளைக்கு மட்டுமே கையிருப்பு உள்ளதால், உடனடியாக விநியோகம் சீரடையாவிட்டால், இன்றுடன் கடையை மூட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என அச்சம் தெரிவித்துள்ளனர்.

பலஷேர்களும்உணவகங்களுக்கான விநியோகத்தை நிறுத்திவிட்டதாக ஓட்டல் உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி பிரதமர் மோடி மற்றும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு சென்னை ஓட்டல்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. முன்னதாக கர்நாடகாவில் ஏற்கனவே ஓட்டல்கள் இயங்காது என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சென்னையில் வணிக சிலிண்டர் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக இந்தியன் ஆயில் நிறுவனம் அறிவித்துள்ளது. வளைகுடா போரால் உலக அளவில் கியாஸ் சிலிண்டர் விநியோக சங்கிலி பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கியாஸ் சிலிண்டர் விநியோகத்தில் முன்னேற்றம் ஏற்படுமா என்பதை கண்காணித்து வருவதாகவும், தங்கள் தேவைக்கான மாற்று ஏற்பாடுகளை அனைவரும் செய்து கொள்ளுமாறும் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் அறிவுறுத்தி உள்ளது.

## தமிழ்நாட்டிற்கு 5 புதிய ரெயில் சேவைகள்

**புதுடெல்லி, மார்ச் 11:**

தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரசார பொதுக்கூட்டம் திருச்சியில் இன்று நடைபெறுகிறது.

இதில் கலந்துகொள்வதற்காக பிரதமர் மோடி நாளை தமிழகம் வருகிறார். இந்த பொதுக்கூட்டத்தில் கூட்டணி கட்சி தலைவர்களும் பங்கேற்கிறார்கள்.

இதற்காக திருச்சி பஞ்சப்பூரில் இடம் தேர்வு செய்யப்பட்டு 30 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்ட மேடை மற்றும் திடல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பிரசார பொதுக் கூட்டத்திற்கு முன்பாக அதே பகுதியில் மத்திய அரசு விழா நடக்கிறது. மத்திய அரசு விழாவில் பங்கேற்கும் பிரதமர் மோடி, தமிழ்நாட்டிற்கான 5 புதிய ரெயில் சேவைகளை தொடங்கி வைக்க உள்ளார்.

அந்த வகையில் இன்று நெல்லை- மங்களூரு எக்ஸ்பிரஸ், ராமேஸ்வரம்- மங்களூரு எக்ஸ்பிரஸ், மயிலாடுதுறை- காரைக்குடி, நாகர்கோவில்- சாரளப்பள்ளி அம்ரித் பாரத், கோவை- தன்பாத் அம்ரித் பாரத் ரெயில் ஆகிய ரெயில் சேவைகளை பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்.

# திருப்பதி ஏழுமலையான் கோயிலில் மார்ச் 13ல் ஆழ்வார் திருமஞ்சனம்!

**திருப்பதி, மார்ச் 11:**

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் மார்ச் 13ல் ஆழ்வார் திருமஞ்சனம் நடைபெற உள்ளதாக திருப்பதி தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தேவஸ்தானம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

பூலோகவைகுண்டம் என்று அழைக்கப்படும் ஏழுமலையான் கோயிலில் ஆண்டுதோறும் கோதண்டராமர் கோயிலில் பிரம்மோற்சவ விழா நடைபெறுகிறது. அதன்படி, கோதண்டராமர் கோயிலில் வருடாந்திர பிரம்மோற்சவ விழா வரும் 17 முதல் 25 வரை நடைபெறுகிறது.

அதற்கு முன்னதாக பாரம்பரிய முறையில் வரும் 13-ஆம் தேதி ஆழ்வார் திருமஞ்சனம் எனப்படும் தூய்மைப்பணி நடத்தப்படுகிறது. அன்றைய தினம் காலை 6.30 மணி முதல் 9 மணி வரை கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் எனப்படும் தூய்மைப் பணி நடக்கிறது. அப்போது கோயிலின் மூலவர் அறை, சுவர்கள், மேற்கூரைகள், மாடங்கள், தூண்கள், பூஜைகளுக்கு பயன்படுத்தக்கூடிய பாத்திரங்கள் உள்பட கோயில் வளாகம் முழுவதும் சுத்தம் செய்யப்படுகிறது.

அதன்பிறகு, நறுமணப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட புனித நீர் கலவையைக் கோயில் வளாகம் முழுவதும் தெளிக்கப்படுகிறது. அதன்பிறகு மூலவருக்குப் பூஜைகள் முடிந்ததும் சுவாமி தரிசனத்திற்குப் பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில் திருவிழா.. சந்தன குடம் பவனி

**கன்னியாகுமரி, மார்ச் 11:**

மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில் மாசிக் கொடைவிழா கடந்த 1ம் கொடியேற்றத்துடன் துவங்கி நடந்து வருகிறது. விழாவின் மூன்றாம் நாள் முதல் காலை மற்றும் இரவு அம்மன் வெள்ளிப் பல்லக்கில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

தினசரி மாலையில் சந்தனகுடம் பவனி, காலை, மதியம், மாலை மற்றும் இரவு நேரங்களில் சிறப்பு தீபாராதனை நடைபெற்றது.

ஆறாம் நாள் இரவு 12.30 மணிக்கு வலிய படுக்கை என்னும் மகாபூஜை நடந்தது. ஒன்பதாம் நாளான நேற்று பகல் 12 மணிக்கு உண்ணாமலை கடை கீழத்தெருபட்டாரியார் சமுதாயம் சார்பில் சந்தன குடம் பவனி புறப்பட்டு இரணியல், திங்கள்நகர், கல்லுக்கூட்டம், லெட்சுமிபுரம் வழியாக கோயிலை அடைந்தது.

இரவு 10 மணிக்கு பெரிய சக்கர தீவெட்டியுடன் அம்மன் வெள்ளிப் பல்லக்கில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

விழாவின் பத்தாம் நாளான இன்று காலை 4.30 மணிக்கு அடியந்திர பூஜையுடன் திருநடை அடைக்கப்பட்டது. மாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு, 6.30 மணிக்கு சாயரட்சை தீபாராதனை, இரவு 9 மணிக்கு அத்தாழபூஜை நடைபெறுகிறது. இரவு 10 மணிக்கு அம்மன் வெள்ளிப்பல்லக்கில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

பின்னர் நள்ளிரவு 12 மணிக்கு ஸ்ரீகண்டன் சாஸ்தா கோவிலில் இருந்து ஒடுக்கு பூஜைக்கு அம்மனுக்கு படைக்கப்படும் உணவு பதார்த்தங்கள் பவனியாக எடுத்து வரப்பட்டு, 12.30 மணிக்கு மேல் 1 மணிக்குள் ஒடுக்கு பூஜை நடக்கிறது. தொடர்ந்து திருக்கொடி இறக்கப்பட்டு விழா நிறைவு பெறுகிறது.

# திருவள்ளூர் தீர்த்தீஸ்வரர் கோவிலில் பங்குனி பிரம்மோற்சவ விழா.. 14-ம் தேதி கொடியேற்றம்

**திருவள்ளூர், மார்ச் 11:**

திருவள்ளூரில் அமைந்துள்ள ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ தீர்த்தீஸ்வரர் கோவிலில் பங்குனிமாத பிரம்மோற்சவ விழா வரும் 13ம் தேதி விக்னேஸ்வரர் உற்சவத்துடன் தொடங்குகிறது. 14ம் தேதி காலை 6.30 மணி அளவில் கொடியேற்றம் நடைபெறுகிறது.

12 நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் நாள்தோறும் காலை, மாலை நேரத்தில் பல்வேறு வாகனங்களில் உற்சவர் வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி அளிப்பார். சிறப்பு உற்சவங்களும் விமரிசையாக நடைபெறும்.

முக்கிய நிகழ்ச்சியாக 18ம் தேதி மாலை ரிஷப வாகன வீதியுலா மற்றும் பஞ்சமூர்த்தி தரிசனம் நடைபெறும். 20-ம் தேதி காலையில் ரத உற்சவம் நடைபெறும். 21ஆம் தேதி இரவு ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ தீர்த்தீஸ்வரர் திருக்கல்யாணம், 23-ம் தேதி தீர்த்தவாரி நடைபெறுகிறது.

பிரம்மோற்சவ விழாவிற்கான ஏற்பாடுகளை பரம்பரை தர்மகர்த்தா ரா.ரவி குருக்கள் மற்றும் கோவில் நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## நலம் தரும் மருத்துவம்

### உங்க குழந்தைக்கு ஊட்டச்சத்து குறைபாடா? வீட்டில் இருக்கட்டும் இந்த பொடி!

இன்றைய நவீன உலகில், வெள்ளைச் சர்க்கரை ஒரு மெதுவான நச்சாகக் கருதப்படுகிறது. இது உடல் பருமன், நீரிழிவு மற்றும் இதய நோய்களுக்கு முக்கியக் காரணமாகிறது. இந்த சர்க்கரைக்கு மாற்றாக, இயற்கையான ஒரு தீர்வைத் தேடுபவர்களுக்கு பேரிச்சை பொடி (DRY DATES POWDER) ஒரு வரப்பிரசாதமாகும். இது இயற்கையான இனிப்பாகவும், ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஒன்றாகவும் உள்ளது.

பேரிச்சம்பழம் உலர்த்தப்பட்டு பொடிக்கப்படும்போது, அதன் நீர்ச்சத்து குறைகிறது. ஆனால் அதில் நார்ச்சத்து மற்றும் தாதுக்கள் உள்ளன. வெள்ளைச் சர்க்கரை என்பது வெறும் கலோரிகளை மட்டுமே கொண்டுள்ளது. ஆனால், பேரிச்சை பொடியில் பொட்டாசியம், மெக்னீசியம் மற்றும் ஆன்டி-ஆக்சிடன்ட்கள் நிறைந்துள்ளன.

இதன் ஆரோக்கிய நன்மைகள்:

வெள்ளைச் சர்க்கரையை விட பேரிச்சை பொடியின் கிளைசெமிக் குறியீடு குறைவு. இது இரத்தத்தில் சர்க்கரை அளவை சட்டென்று உயர்த்தாமல், சீராக வைக்க உதவுகிறது. இதில் உள்ள நார்ச்சத்து செரிமான மண்டலத்தை சீராக்குகிறது. மலச்சிக்கலைத் தடுப்பதோடு, குடலில் உள்ள நல்ல பாக்டீரியாக்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. பேரிச்சை பொடியில் இரும்புச்சத்து அதிக அளவில் இருப்பதால், இரத்த சோகையினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இது மிகச்சிறந்த ஊட்டச்சத்தாகும். இதில் உள்ள பாஸ்பரஸ், கால்சியம் மற்றும் மெக்னீசியம் எலும்புகளின் அடர்த்தியை அதிகரிக்க உதவுகின்றன. பேரிச்சை பொடியிலுள்ள ஃபிளாவனாய்டுகள் மற்றும் பீனாலிக் அமிலம் உடலில் ஏற்படும் அழற்சியைக் குறைத்து, இதய நோய் மற்றும் புற்றுநோய் அபாயத்தைத் தடுக்கின்றன.

வெள்ளைச் சர்க்கரை சுத்திகரிக்கப்படும்போது அதிலுள்ள சத்துக்கள் அனைத்தும் நீக்கப்பட்டு, வெறும் ரசாயனங்கள் மட்டுமே மிஞ்சுகின்றன. ஆனால் பேரிச்சை பொடி என்பது முழுமையான பழத்தின் வடிவம். சுவை மற்றும் மணம் இரண்டிலும் இது சர்க்கரையை விட மேலானது. குறிப்பாக குழந்தைகளுக்கு வழங்கும் பால் மற்றும் கேக் வகைகளில் இதனைச் சேர்ப்பது மிகவும் பாதுகாப்பானது. குழந்தைகளுக்கான பால் மற்றும் தானியக் கஞ்சிகளில் ஒரு ஸ்பூன் சேர்க்கலாம். கேக், குக்கீஸ் மற்றும் இனிப்புப் பலகாரங்கள் செய்யும்போது சர்க்கரைக்கு பதில் சம அளவு பேரிச்சை பொடியைப் பயன்படுத்தலாம். காலை நேர ஸ்மூத்திகளில், காபி, டீயில் இயற்கை இனிப்புக்காகச் சேர்க்கலாம். ஆரோக்கியமான வாழ்வு என்பது நாம் எடுக்கும் சிறிய மாற்றங்களில்தான் உள்ளது. வெள்ளைச் சர்க்கரையைத் தவிர்த்து, இயற்கையான பேரிச்சை பொடியைப் பயன்படுத்துவது, நீண்ட கால ஆரோக்கியத்திற்கு உதவும்.

# ஐடி துறையில் அதிரவைக்கும் AI... இதை ஸ்கில்ஸ் கற்று கொண்டால் மாசம் பல லட்சம் நிச்சயம்!

சில வருஷங்களுக்கு முன்னாடி வரைக்கும் ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் அப்படின்னு சொன்னாலே, அது நம்ம வேலையை எல்லாம் பிடுங்கிடும் அபாயம் இருக்குனு ஒரு பயம் எல்லோருக்குமே இருந்தது. முக்கியமாக டிஜிட்டல் மீடியாவில் கன்டென்ட் எழுதுபவர்கள், ஒரு டீமை அல்லது ஒரு வெப்சைட்டை நிர்வகிக்கும் பொறுப்பில் இருக்கும் பலருக்கும் இந்த கலக்கம் இருக்கத்தான் செய்தது.

ஆனால் நிஜம் அதுவல்ல. செயற்கை நுண்ணறிவு பல பழைய வேலைகளின் ஸ்டைலை மாற்றியமைத்து, கற்பனை செய்ய முடியாத அளவுக்குச் சம்பளம் தரும் பல புதிய வேலைகளை உருவாக்கியுள்ளது. உலகத்தையே ஆட்டிப்படைக்கப் போகும் சில மாஸான வேலை வாய்ப்புகளைப் பற்றி இந்த பதிவில் தெரிந்துகொள்வோம்.

PROMPT & டேட்டா துறைகள்!

ஏஐ மாடல்களுக்கு நாம் என்ன கட்டளை கொடுக்கிறோம் என்பதைப் பொறுத்துதான் அதன் அவுட்புட் இருக்கும். இதை மிகத் துல்லியமாகச் செய்யும் நிபுணர்களை 'ப்ராம்ப்ட் இன்ஜினியர்கள்' என்று அழைப்பார்கள். ஒரு வார்த்தை மாறினாலும் மொத்த கன்டென்ட்டும் மாறிவிடும் என்பதால் இவர்களுக்கு இப்போது செம டிமாண்ட்.

அதேபோல, ஏஐ-க்கு சரியான தகவல்களைப் பயிற்றுவிக்க லட்சக்கணக்கான டேட்டாக்களை வகைப்படுத்தும் 'ஏஐ டேட்டா அனொடேட்டர்ஸ்' வேலைக்கும் எக்கச்சக்கமான தேவை இருக்கிறது. இந்தத் துறைகளில்




இந்தியாவிலேயே வருடத்திற்குப் பல லட்சங்களில் பேக்கேஜ் கிடைக்கிறது.

நிர்வாகம் & ஆப்பரேஷன்ஸ்!

ஒரு புதிய ஏஐ ப்ராடக்ட்டை சந்தையில் எப்படி இறக்குவது, வாடிக்கையாளர்களின் தேவைகளை எப்படிப் பூர்த்தி செய்வது என்று திட்டமிடும் 'ஏஐ ப்ராடக்ட் மேனேஜர்கள்' மற்றும் AI OPS ENGINEERS இன்று ஐடி கம்பெனிகளின் செல்லப்பிள்ளைகளாக மாறிவிட்டார்கள். பெரிய பெரிய கிளவுட் சர்வர்களில் எந்த ஒரு டெக்னிக்கல் பிரச்சனையும் இல்லாமல் ஏஐ-யை இயங்க வைப்பது இவர்களின் முக்கிய பொறுப்பாகும்.

அதேபோல, தானியங்கியாக வேலை செய்யும் பாட்களைக் கண்காணித்து, அவை தடம் மாறாமல் பிசினஸ் நோக்கத்தோடு செயல்பட வைக்கும் 'ஏஐ ஏஜென்ட் மேனேஜர்கள்' பதவிக்கும் அமெரிக்காபோன்றநாடுகளில் கோடிகளில் சம்பளம் கொட்டிக் கொடுக்கப்படுகிறது.

சட்டம், அறம் மற்றும் மனிதத் தொடர்பு!

தொழில்நுட்பம் வளரும்போது அதில் எந்த ஒரு சார்புத்தன்மையும் இருக்கக்கூடாது என்பதை உறுதி செய்ய 'ஏஐ எதிக்ஸ் நிபுணர்கள்' மற்றும் 'ஏஐ கவர்னன்ஸ் நிபுணர்கள்' பெருநிறுவனங்களால் அதிக அளவில் வேலைக்கு எடுக்கப்படுகிறார்கள். ஏஐ எடுக்கும் முடிவுகள் சமூகத்திற்குப் பாதுகாப்பானதா, மக்களின் பிரைவசி பாதிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதே இவர்களின் வேலை.

இதைத் தவிர்த்து, மனிதர்களும் ஏஐ-யும் எப்படி இணைந்து வேலை

பார்க்கலாம் என்பதை வடிவமைக்கும் 'ஹியூமன்-ஏஐ கொலாபரேஷன் எக்ஸ்பர்ட்ஸ்' மற்றும் மனிதர்களிடம் இயல்பாகப் பேசும் சாட்பாட்களை உருவாக்கும் 'இன்டராக்ஷன் டிசைனர்கள்' போன்ற வேலைகளும் தற்போது ட்ரெண்டிங்கில் உள்ளன. இந்த வேலைகளுக்கும் பல லட்சங்களில் ஆரம்ப சம்பளம் வழங்கப்படுகிறது.

காலமாற்றத்திற்கு ஏற்ப நம்மை நாமே அப்டேட் செய்துகொள்வது மட்டுமே வெற்றிக்கான ஒரே ரகசியம். ஏஐ என்பது ஒரு போட்டியாளர் கிடையாது, அது நம்முடைய திறமையை அடுத்த லெவலுக்குக் கொண்டு செல்லும் ஒரு சூப்பரான டூல். இந்த புதிய தொழில்நுட்பங்களைச் சரியாகக் கற்றுக்கொண்டால், எதிர்காலம் கட்டாயம் நம் கையில்தான்.

# "விதை விதைத்தவள்"

சீதாவின் வீட்டிற்கு வந்திருந்த உறவுக்காரப் பெண்,"உனக்கென்ன சீதா.. உன் தம்பி பாலுவோட மகன் ஸ்ரீதர் ரெடியாயிருக்கான்... மாப்பிள்ளை தேடி அலைய வேண்டியதில்லை... நெனச்சா உடனே கல்யாணத்தை முடிச்சிடலாம்"என்று சொல்ல, அந்தப் பேச்சில் விருப்பமில்லாதவள் போல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். ஆனால் சீதாவுக்கு தம்பி மகன் ஸ்ரீதருக்கு மகள் சந்தியாவைத் தர விருப்பமில்லை.

காரணம், பொருளாதர நிலையில் தம்பி பாலு இவர்களை விட ரொம்பக் கீழே. சீதாவுக்கு மகளை வசதியான இடத்தில் கட்டிக் கொடுக்க ஆசை. உறவுக்காரர்கள் எல்லோருமே சொல்லி வைத்தாற் போல் ஸ்ரீதருக்கே சந்தியாவைத் திருமணம் செய்து வைக்கச் சொல்லி வற்புறுத்த ஒரு நாள் பாலுவை தனியாக அழைத்தாள் சீதா, "பாலு... நீ என் தம்பி என்பதால் ஒரு உண்மையை மறக்காமல் உன் கிட்டே சொல்றேன்... என் மகளுக்கு கர்ப்பப்பையில் ஒரு கட்டி இருக்காம்... டாக்டர் சொன்னார்... அதை ஆபரேஷன் பண்ணினா சந்தியா உசுருக்கே ஆபத்தாம்... அவளுக்குக் குழந்தை பிறக்கவும் வாய்ப்பு குறைவாம்" "அக்கா..." கதறி விட்டான் பாலு.

"அதனால... நீ நல்ல... ஆரோக்கியமான பெண்ணைப் பார்த்து உன் மகனுக்கு கல்யாணம் பண்ணி வை. அப்பத்தான் உன் சந்ததி வளரும்." பாலு அதிர்ந்தான். "அக்கா... இதை மறைக்காம நேர்மையா சொன்னதுக்கு ரொம்ப நன்றி அக்கா.... உன்னைப் போல ஒரு அக்கா கிடைச்சது என் பாக்கியம்" என்றான் உண்மையாய். அக்கா சொன்னதை நம்பி, சில மாதங்களில் தன் மகனுக்கு வேறொரு பெண்ணை மணம் முடித்தான் பாலு. காலம் சென்றது. சில மாதங்களுக்குப் பிறகு சீதாவும் தன் மகளுக்கு வசதியான இடத்தில் திருமணம் செய்து வைத்தாள். ஒரு வருடம்... இரண்டு வருடம்... சந்தியாவிற்கு குழந்தை உருவாகவில்லை. கவலைப்பட்ட சீதா மகளையும் மருமகனையும் டாக்டரிடம் அழைத்துச் சென்றாள்.

சோதனைகள் முடிந்ததும் டாக்டர் அமைதியாகச் சொன்னார், "உங்கள் மகளின் கர்ப்பப்பையில் ஒரு கட்டி இருக்கு... அதை ஆபரேட் பண்ணினா ரொம்ப ரிஸ்க்... ஸாரி டு ஸே திஸ்.. உங்க மகளுக்கு குழந்தை பிறக்க வாய்ப்பேயில்லை!" அந்த ஒரு வார்த்தைகள் சீதாவை மின்னல் போலத் தாக்கியது. அந்த வினாடியில் அவள் மனதில் அந்தக் கசப்பான உண்மை உதித்தது. "விதைத்துச் சென்ற யாவும் ஒரு நாள் அறுவடைக்கு வந்தே தீரும். அது விதை ஆனாலும் சரி... வினை ஆனாலும் சரி...."

**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

# கடன்காரன்...

அன்றைய வேலையை முடித்துக் கொண்டு வீடு திரும்பி கொண்டு இருந்தான் குமரேசன். சிக்கல் ஒரு நடுத்தர நகரம்தான் அதன் கடைவீதி மிகவும் பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. காலையில் வீட்டை விட்டு கிளம்பும்போதே குமரேசனின் மனைவி மைதிலி கொடுத்தனுப்பிய மளிகைச்சரக்கு சாமான் சிட்டையை எடுத்து பார்த்துக் கொண்டான் குமரேசன். தன் மனைவி எழுதி கொடுத்த அத்தனை சாமானையும் வாங்குவதற்கான சாத்தியம் இல்லை என்று அவனுக்கு தெரியும் இருந்தபோதிலும் அன்றைக்கு கிடைத்த வருமானமான ஐநூறுரூபாய்க்குள் ஒன்றுக்கு பாதியாக வாங்கி சென்றுவிடலாம் என்று முடிவெடுத்து அண்ணாச்சியின் கடையை நோக்கி நடந்தான். எல்லாம் முடிந்து விட்டிற்க்குள் நுழைந்தபோது மாலைச்சூரியன் முழுவதுமாய் அடங்கிப் போயிருந்தது.

"என்னங்க இன்னைக்கும் நான் சொன்ன எந்த சாமானும் முழுமையாக வந்து சேரவில்லை போலிருக்கிறதே" என்று தன் கணவனை கேள்வி எழுப்பினாள் மைதிலி. "என்னம்மா பண்றது இன்னைக்கு கிடைத்த வருமானத்தில் என்ன முடியுமோ அதை வாங்கி வந்திருக்கிறேன் வைத்து சமாளித்துக் கொள் என்று மனைவியை சமாதானப் படுத்தினான். குமரேசனைப்பற்றி மைதிலிக்கு நன்றாகவே தெரியும் யாராவது பசியென்று வந்து அவன் முன் நின்று விட்டால், வாங்கிய சம்பளத்தில் பாதியை கூட செலவு செய்ய தயங்க மாட்டான் அப்படி ஒரு பரோபகாரி அவன். குமரேசனுக்கும் மைதிலிக்கும் கல்யாணமாகி பத்தாண்டுகள் உருண்டோடி விட்டன. ஒன்பது வயதில் ஒரு பையனும், ஏழு வயதில் ஒரு பையனும், என்று சற்றே வறுமையில் தான் நகர்ந்து கொண்டிருந்தது குடும்பம். சிக்கல் நகருக்குள் குமரேசனை தெரியாத ஆட்களே இருக்க மாட்டார்கள். ஏனென்றால் குமரேசன் ஒரு இளம் எழுத்தாளன். அதை விடவும் மிகவும் இளகிய மனதுக்குச் சொந்தக்காரன் தீபாவளி பொங்கல் என்று வந்துவிட்டால் அந்த சமயங்களில் நடக்கும் விழாக்களில் குமரேசனே முதன்மையான கதாநாயகனாகத் தெரிவான். ஏனென்றால் மைக்கை பிடித்துவிட்டால் தமிழை பொலபொலவென்று அருவி போல கொட்டுவான். விளையாட்டுப் போட்டிகள் பட்டிமன்றங்கள் என்று சகல விழாக்களிலும் முன் நின்று நடத்துவான் தானும் பங்கேப்பான். குமரேசனின் இலக்கிய ஆர்வத்தை போற்றும் விதமாகவும் அவனுக்கு இருக்கும் மொழிப்பற்றை பாராட்டும் விதமாகவும் அவனுடைய நண்பர்கள் பலரும் அவ்வப்போது சிறு சிறு உதவிகளை செய்து வருவார்கள் இருந்த போதிலும் அவனுடைய வருமானம் என்பது மிகவும் சிறியதாய் இருந்ததால் அவன் பல நேரங்களில் கடன் வாங்கித்தான் பல விடயங்களை சமாளித்துக் கொண்டு வந்தான். குமரேசனுக்கென்று சொத்துபத்து என்று எதுவும் இல்லாத போதிலும், தன் கையே தனக்கு உதவி என்கிற சூழலிலும் கூட அவன் பிறருக்கு உதவுகின்ற தன்மையை ஒருபோதும் குறைத்துக் கொள்ள மாட்டான். பள்ளியில் படிக்கின்ற குழந்தைகளுக்கு தாமே முன்வந்து பல நேரங்களில் நோட்டு பேனா பென்சில் என்று வாங்கி அன்பாய் கொடுப்பான் அதில் மட்டற்ற மகிழ்ச்சி அவனுக்கு.

கொத்தனார் வேலை என்பது மழைக்காலங்களில் பாதி நாட்கள் கூட வேலை இருக்காது அந்த சமயங்களில் குடும்பத்தை நகர்த்துவது மிகச் சிரமமான ஒன்று. குழந்தைகளோ, மனைவியோ, ஆசைப்பட்டதை கூட வாங்கிக் கொடுக்க இயலாதவனாக தடுமாறினான் குமரேசன். பல சமயங்களில் அறிவாளிகளாய் இருக்கின்ற மனிதர்கள் இப்படியான இக்கட்டில் சிக்கித் தவிப்பதுண்டு. இது காலம் காலமாய் உலக நடப்பாய் இருந்து வருகிறது. கடன் பட்டார் நெஞ்சம் கலங்கினாற்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்.என்று ஒரு வழக்கு மொழியும் உண்டு. இதையெல்லாம் அறிந்திருந்த போதும் எப்படியோ கடன் தொல்லைக்கு தானும் ஆளாகிப்போனான். ஒரு கடனை அடைக்க மறுகடனும் அந்தக் கடனை அடைக்க இன்னொரு கடனுமென்று வாங்கினான். விளைவு வட்டிக்கு வட்டி என்று வட்டிகள் குட்டி போடத் தொடங்கின தடுமாற்றத்தின் எல்லைக்கே தள்ளப்பட்டான் குமரேசனை மதித்த பலரும் அவனைக் கண்டாலே ஒதுங்கி நடக்க ஆரம்பித்தார்கள். இது குமரேசனுக்கு மிகவும் அவமானமாகவும் ஒருவித கேவல தன்மையை உண்டாக்குவதாகவும் இருந்தது. மனைவி மக்களின் முகத்தை நேருக்கு நேர் பார்க்கவே கூச்சமாய் இருந்தது அவனுக்கு ஏற்பட்ட சிக்கலை எப்படி தீர்ப்பது என்று தெரியாமல் தவித்தான்

அன்று இரவு முழுவதும் மழை பெய்து கொண்டிருந்தது. மைதிலியும் குழந்தைகளும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். குமரேசன் உறக்கம் வராமல் உயிரை விட்டு விடலாமா என்கிற ஆழ்ந்த யோசனையில் திளைத்திருந்தான். அவனுக்கு வேறு எதுவும் யோசிக்க தோன்றவே இல்லை. விடிந்தும் விடியாமலும்,மெல்ல எழுந்து பணித் தூரலாய் விழுந்து கொண்டிருந்த மழை துளிகளில் நனைந்தவாறு,விளைந்து கிடந்த நெல்வயல் வெளிகளுக்கு மத்தியில் சென்று அமர்ந்தான். சாவது ஒன்றுதான் வழி என்று உட்கார்ந்திருந்த குமரேசனை, இரவெல்லாம் மழையில் நனைந்து கவிழ்ந்துகிடந்த நெற்கதிர்கள் நிமிர்ந்து நின்று கேள்விக்கணைகளால் துலைதெடுத்தன... "நீ பட்ட கடன் இன்னும் தீரவில்லை அதற்குள் சாகவேண்டும் என்று ஏன் வந்தாய்"என்று "என்னது நான் பட்ட கடன் இன்னும் தீரவில்லையா? உண்மைதான் நான் வாங்கிய கடன்கள் இன்னும் அடைத்து முடித்த பாடில்லை பிறகு ஏன் நான் வாழ வேண்டும் "என்று கண்ணீர் மல்கினான் "தம்பி கதிரேசா நீ அறிவாளி படிக்காத அறிவாளி நீ சாதிக்க வேண்டியது நிறைய இருக்கிறது உன்னால் பலனடைய இந்த ஊர் காத்திருக்கிறது நீ சாவதென்பதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று உரக்க கூறின நெற்கதிர்கள். குமரேசனுக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் தன்னிடம் விதண்டாவாதம் பேசிக் கொண்டிருந்த நெற்கதிர்களை முறைத்தபடி அமர்ந்திருந்தான். மேலும் நெற்கதிர்கள் பேச ஆரம்பித்தன."தம்பி கதிரேசா நீ ஒரு எழுத்தாளன் இந்த ஊரில் உன்னால் நடக்க வேண்டிய காரியங்கள் நிறைய இருக்கின்றன எனவே நீ சாவது என்பதை கைவிட்டுவிடு மாறாக வாழ்வது எப்படி என்று யோசி" என்றென. சுற்றும் முற்றும் பார்த்தான் மழை தூரிக்கொண்டுதான் இருந்தன. பூமி எங்கும் ஈரம் சூழ்ந்திருந்தது மழை நீர் தேங்கி கிடந்தன இப்போது மெல்ல குமரேசனுக்குள்ளும் ஈரங்கள் தொற்றிக்கொள்ள வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான் வாழ்ந்து சாதிப்பது என்று.

**- முத்தையாமோகன்**
கோவை.18.

# உளர்மிளையின் உளமைமனம்

மூன்றாம் பாகம்.. 3

■கே.பானுமதி நாச்சியார்
சிவகிரி

## 3.விடை கொடுத்து அனுப்புதல்

பட்டாபிஷேகத்தில் கலந்தவர்களில், வானரங்கள் மட்டுமே 67 கோடியினர் சுக்ரீவனுடன் வந்தனர். ராமனை வணங்கி விடை பெறுவதற்காக விபீஷணன் வாள்அரக்கரோடு வந்து வணங்கினான். அடுத்து கடுந்திரள் மடங்கல் அன்னவன் நாவாய்க்கு இறை குகன் தன் வெற்றி பெற்ற சேனைகளோடு வந்து தொழுது சூழ்ந்தனர்.

"ஈண்டு இனிது இருத்தீர்!" என்று சொல்ல எல்லோரும் அயோத்தியில் தங்கினர்.

இதோ இப்பொழுது விடை கொடுத்து அனுப்புகிறான் ராமன்.

மறையவர் தங்களுக்கு எல்லாம் மனையோடு பொன்னும் நிறைவளம் பெருகு பூவும் சுரபியும் நிறைத்து குறை இது என்று இரந்தார்க்கு எல்லாம் கொடுத்துப் பின்னர் அணிகழல் அரசர் தம்மை வருக என அருள அவர்களும் வந்தனர்.

ராமனும் அவர்களுக்கு மனமகிழ்ச்சியுடன் வையம், சிவிகை, தொங்கல், மாமணி மகுடம், பொன்பூண், கொய்உளைப் புரவி, திண்தேர், குஞ்சரம், ஆடை மெய் உறக் கொடுத்து விடையும் கொடுத்தான்.

ராமபிரான் சுக்ரீவனுக்கு தன்னை ஈன்ற காலத்தில் பார்க்க வந்த இந்திரன் பரிசாகக் கொடுத்த ஒலிமணிக் கடகத்தோடும் கொம்புடைய மணியையும் யானையையும் தேரும் குதிரை கூட்டத்தையும் தூசும் (பட்டாடைகளும்) கொடுத்து விடை கொடுத்தான்.

அங்கதனக்கு இட்சுவாகு மன்னனுக்குப் பிரம்மன் கொடுத்த அங்கதம் என்னும் தோள்வளையைக் கொடுத்தான். தோள்வளையின் பெருமையை மண்மேல் ஆர் அறிவாரே!

பின்னரும் அவனுக்கு முத்துமாலை, பட்டாடை, குதிரை, யானை அளித்து "உன்னை நீ இன்றி இந்த உலகில் ஒப்பு இலாதாய்! கதிரவன் மைந்தன் தன்னோடும் பொருந்த வாழ்க!" என்றான்.

அனுமனை மகிழ்ச்சியாக, இனிமையாக அருட்பார்வை பார்த்து "பைம்பூண் போர் உதவிய திண்தோளாய்! நீ அல்லால் யார் உதவிடுவதற்கு ஒவ்வார்? அன்று செய்த போர் உதவிக்கு யான் செய்கொல் பிறிது இல்லை! அதற்குக் கைம்மாறாக என்னை இறுகத் தழுவிக் கொள்வாயாக!" என்றான்.

இந்திரன் அணிவதற்குப் பொருத்தமாகிய முத்து மாலையோடு, கந்தசுடு களிறு, வாசி, குதிரை, தூசு (பட்டாடை), அணிகலன்கள் மற்றும் பிறவும் எண்கின் வேந்தன் சாம்பனுக்குத் தந்தான்.

நீலனுக்கு நவமணியால் ஆன முத்துமாலையும் நலங்கொள் தூசும் (பட்டாடையும்) குதிரையும் யானையும் ஈந்தான்.

சதவலி என்னும் தலைவனுக்கும் அனுமனின் தந்தையாகிய கேசரிக்கும் யானை மற்றும் குதிரையும் ஈந்தான்.

உளம் மகிழ்வெய்தும் வண்ணம் எல்லோருக்கும் அவரவர் மனமகிழ் பொருட்கள் யாவையும் ஈந்து விடை கொடுத்துக் கொண்டே இருந்தான் ராமன். இதனால் அவன் கைகள் கொடுத்துக் கொடுத்துச் சிவந்தன.

அடுத்து விபீடணனை அன்பொழகப் பார்த்து "ஐய! சராசரம் சுமந்த சால்பின் நின்னையே ஒப்பர்; நினை அலது இவர் உளரே எனில் பொன்னையே இரும்பு நேரும் ஆயினும் உனக்கு ஒப்பில்லை!" என்றான். அவனுக்கும் பொன்னும் மணியும் களிறும் மாவும் கொடுத்து விடை கொடுத்தான்.

ராமனை முதலாகக் கொண்டு சந்தித்த இவர்கள் விடைபெறும்போது பரதனை முதலாகக் கொண்டு ராமனை இறுதியாகக் கொண்டு வலம் வந்து விடை பெற்றனர்.

அவர்களுடன் அவர்களை வழியனுப்பச் சென்றான் ராமன்.

சீதாவின் பார்வை ஊர்மிளையிடம் சென்றது. இதனை எல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். மெதுவாக அவளது பார்வையும் சீதையின் பார்வையைச் சந்தித்தது. உடன் கண்களாலேயே அருகில் வரும்படி அழைத்தாள் ஊர்மிளாவைச் சீதை.

அருகில் வந்தவுடன் "ஊர்மிளா! உன்னை இங்கு விட்டுவிட்டு சென்றிருக்கக் கூடாது. இது என் தவறு தான்!" என்றாள்.

"இதற்காக எதற்கு வருத்தப் படுகிறாய்? நடந்ததை நினைத்து! நடந்தவையாகவே இருக்கட்டும்! முடிந்தபோன செயலுக்கு இப்போது வருந்தினால் அதற்கு முடிவே இல்லாமல் போய்விடும் அக்கா!"

"இல்லை ஊர்மிளா! ராமனைப் பிரிந்த போது தான் எனக்கு என் தவறு தெரிந்தது!" என்றாள் சோகமாக.

"அக்கா! காலம் தான் எல்லாவற்றிற்கும் காரணத்தைக் கற்பிக்கும். அதனிடத்தில் விட்டுவிடாமல், நீ ஏன் தேவையில்லாமல் வருந்துகிறாய்? இப்போது எத்தனை சந்தோஷமாக இருக்கிறோம். நீ ஏன் முன்னை நடந்த நிகழ்ச்சியை மனதில் சுமக்கிறாய்?" என்றாள்.

அவளுடைய அறிவுத்திறனும், தெளிந்த மனமும் நமக்கு இல்லை எனத் தெளிந்தாள் சீதை.

இருவரும் அரண்மனை நோக்கி நகர, உடனே இரு காவலர்கள் அவர்களுக்குப் பாதுகாப்பு தருவதற்கு வந்தார்கள். உடனே ஊர்மிளா "அக்கா! இனி நீ எங்கு நடந்தாலும் உனக்குப் பாதுகாப்பு அதிகம் தான்! சரி! இப்போது உன்னுடன் நான் உன் அரண்மனைக்கு வரலாமா?" என்றாள்.

"ஏன் இவ்வாறு கேட்கிறாய்? காவலர்கள் எதாவது சொல்வார்கள் என்று நினைக்கிறாயா?" என்றாள் சீதை. "இல்லை! இல்லை! இவர்களை நான் சமாளித்துக் கொள்வேன். உன்னைத் தான் சமாளிக்க முடியாது."

"ஏன் அப்படி? "

"ஏனென்றால் நீ தானே சொன்னாய். உன் எல்லைக்குள் நீ இரு; என் எல்லைக்குள் நான் இருக்கிறேன்!" என்று.. இழுத்தாள்.

இதைக் கேட்ட சீதையின் முகம் சிறுத்தது. வருத்தம் ஒட்டிக் கொண்டது.



இதனைக் கவனித்த ஊர்மிளை " சீதாக்கா! நான் உங்களை வருத்தும்படிச் சொல்லவில்லை! சும்மா விளையாட்டுக்குத் தான் சொன்னேன்!" என்றாள்.

பேச்சை மாற்றுவது போல் "ஆமாம்! அது சரி, நீங்கள் அமைச்சர் சுமந்தரரிடம், கிளியையும் பூச்செடியையும் பாதுகாக்க சொன்னீர்களே! அவைகளை இப்போது போய்ப் பார்ப்போமா!" என்றாள்.

"ஆமாம் ஊர்மிளா! இதன் ஞாபகம்"... என்று இழுத்தவளை..

"தெரியும் அக்கா தெரியும்! உன்னைச் சிறைப்பிடித்து ஒரு சோலையில் வைத்திருக்கும் பொழுது, அனுமன் கணையாழியை அடையாளம் காட்டி ராமதூதர் என்றாரே! அப்போது அவரிடத்தில் ராமனின் நினைவுகளைக் கூறும்போது இக்கிளி பற்றிக் கூறினாய் தானே!"

"இது எப்படி உனக்குத் தெரியும்?" வியந்து கேட்டாள் சீதை.

" அக்கா! ஆழ்உறக்கத்தில் உயிர்கள் உறங்கும் பொழுது, மனம் லேசாகி, தான் யாரை நினைத்துக் கொண்டிருக்கிறோமோ அவர்களிடத்தில் சென்று, அங்கு நடப்பவைகளைத் தானும் காணும்; நிஜம் போலவே தோன்றும்; ஆனால் அந்நிகழ்ச்சிகள் யாவிலுமே சாட்சியாக இருக்கலாமே தவிர நம்மால் அதனை மாற்றி அமைக்க முடியாது. சில நேரங்களில் நம் ஆழ்மனதில் தோன்றிய நிகழ்வுகளே மறந்து போகும்; கனவு போல!"

"ஆம் ஊர்மிளா! ஒரு முறை அன்னை திரிசடை... என்றவுடன், அவள் ஒருமுறை இல்லை மூன்று முறை அன்னை என்றாய் அக்கா!" என்றாள். உடனே உறவின் முறையில் அன்னை என்று அழைக்காமல் அத்தை என்று அழைத்தாயே என்ற எண்ணமும் வந்தது.

"ஆம்! உனக்கு நல்லது நடக்கும் என்று கனவு கண்டு சொன்னாள். நான் எழுப்பியதால் கனவு பாதியிலேயே நின்று விட்டது!" என்றாள்.

உடனே நீயும் அவளைத் "தொடர்க!" என்று சொல்லி உறங்க வைத்தாயே!" என்றாள் ஊர்மிளை.

ஊர்மிளையின் வார்த்தைகள் சீதையை வியப்படையச் செய்தன.

"இங்கு இவள் என்ன செய்தாள்? இவளுக்கு நடந்தது என்ன? எல்லாமே புதிராக இருக்கிறது! இதனை யாரிடம் கேட்பது?" என்பதற்குள்,

ராமன் சீதைக்கு அளித்த கிளி "கைகேயி கைகேயி" என அழைத்தது.

உடனே ஊர்மிளை "வைதேகி வைதேகி" என்று உன்னை அழைக்கிறது பார்!" என்றாள்.

இல்லை அது "கைகேயி கைகேயி!" என்று தான் அழைக்கிறது என்றாள் சீதா.

"தன் தாயின் பெயரை யாரும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று அன்று பரதன் சொன்னான் அக்கா!" என்றாள். விழிப்பற்ற நிலையில் ஊர்மிளையின் வார்த்தைகள் பிறழ்கின்றன. தன்னை ஒருமையில் அழைத்தவள் பரதனையும் ஒருமையில் அழைக்கிறாள்.

ஆனால் ராமன் சீதையினிடத்தில், கிளிக்கு யாது பெயர் வைக்க என்று கேட்க, தன் தெய்வத்தின் பெயராகிய கைகேயி என்று வை என்று சொன்னான். இதில் சீதைக்குக் கொஞ்சம் வருத்தம் தான்.

அதற்குள் காவலர்கள் "அரசியாரே! நீங்கள் இங்கு ரொம்ப நேரமாக நின்று கொண்டிருக்கிறீர்கள். ஓய்வெடுக்கும் நேரம் வந்தாயிற்று!" என்றனர்.

ஊர்மிளாவும் சிரித்துக் கொண்டே "கைகேயி அன்னையின் வரத்தால், ராமனிடத்தில் ஒரு கணம் கூடப் பிரியாது இருந்தாய், ஆனால், அப்போதே பட்டாபிஷேகம் நடந்திருந்தால் அப்படி எல்லாம் இருந்திருக்க முடியுமா? என்றாள்.

"ஆம் ஊர்மிளா! அன்னையின் வரத்தினால் தான் நான் ராமனை விட்டுப் பிரியாமல், ஒரு கணம் கூடப் பிரியாது சாதாரணமாக வனத்தில் திரிந்து, இயற்கையின் அழகை ரசித்து, புனலாடி, தேனும் திணையும் கிழங்கும் தின்று இருந்ததை நினைத்தால் இப்பொழுதும் ஆச்சரியமாக இருக்கிறது. இப்பொழுதும் மறக்க முடியாத நிகழ்வாக மாற்றிய அன்னைக்கு ஆயிரம் நமஸ்காரங்கள் செய்ய வேண்டும்!" என்றாள்.

இதே நாளில் நமக்கு நம் மனதில் இருந்த எண்ணங்களும், இப்பொழுது உள்ள எண்ணங்களும் எவ்வாறு மாறியிருக்கிறது. இதற்குக் காரணம் காலம்தானே என்று நினைத்தாள் ஊர்மிளா. சீதையின் மனமாற்றத்திற்குக் காலமே மருந்தாக அமைந்தது வியப்பாக இருந்தது ஊர்மிளைக்கு.

"சரி சரி! இனி உன்னை அவர்கள் விடமாட்டார்கள். எனவே நான் என் அரண்மனை எல்லைக்குச் செல்கிறேன் அக்கா! நாளையும் இதே போல் ஓய்வு கிடைத்தால் நாம் பரிமாறிக் கொள்வோம் விஷயங்களை!" என்ற அவள் துள்ளிக் குதித்து வேகநடை போட்டாள்.

ஆனால் சீதையின் மனதில் ஆயிரம் கேள்விகள் உதயமாயிற்று.

ஊர்மிளைக்கு என்ன நடந்தது? அவள் ஏன் வனத்திற்கு வர மாட்டேன் என்று சொன்னாள்? 14 ஆண்டுகள் இமை மூடாமல் லக்குவனன் எவ்வாறு வாழ்ந்தான்? உறக்கத்தில் இருக்கும் இலக்குவனன் விழித்தால் மட்டுமே இதற்கான விடைகள் கிடைக்கலாம் என்று நினைத்தாள்.

ஊர்மிளையை நாளைக்கும் வரச் சொல்லி விஷயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

ராமனை அழைத்து வரக் காவலர்களுக்குக் கட்டளை இடச் சென்றாள்.

- தொடரும்

# சியமந்தக நகை கதை

இந்த கதை விஷ்ணு
புராணத்தில் வருகிறது
சூரிய பகவானுக்கு உரிய
நகை அதை அவர் கழுத்தில்
அணிந்து இருந்தார்

இது எங்கு இருக்கிறதோ
அந்த நாட்டு மன்னன்
இதனை அணிந்தால்
அந்த நாடு செழிப்புற்று
இருக்குமாம்

மேலும் தினமும்
தோராயமாக 170 பவுண்டு
தங்கத்தை உற்பத்தி
செய்யுமாம்

யாதவ பிரபு சத்ராஜித் சூரிய
கடவுளின் பக்தர் ஒருநாள்
அவர் முன் தோன்றிய
சூரியனின் தேஜஸ்ஸில்
மயங்கிய சத்ராஜித்
சூரியனைத் தெளிவாக
காணும் வகையில் வர
வேண்டுமென வேண்ட
சூரியன் தன் கழுத்தில்
அணிந்திருந்த சியமந்தக
மணியைக் கழற்றி எடுத்தார்

சூரிய வழிபாட்டை
முடித்துக்கொண்ட சத்ராஜித்
சூரிய பகவானிடம் அந்த
மணியை கேட்க அவரும்
உவந்து கொடுத்தார்

தன் கழுத்தில் அணிந்து
கொண்டு துவாரகை
நோக்கி நடந்தார் சத்ராஜித்
சூரியன் போலவே திகழ
துவாரகை மக்கள் அவரைச்
சூரியக்கடவுள் எனத் தவறாக
புரிந்து கொண்டனர்

சத்ராஜித் துவாரகை
ஆட்சிக்கு உட்பட்ட
குறுநில மன்னன்
என்பதால் கிருஷ்ணனும்
அவரிடம் இதனை
யாதவர்களின் தலைவனான
உக்கிரசேனரிடம்
காணிக்கையாக கொடுங்கள்
என்றார்

அதற்குச் சத்ராஜித்
இணங்கவில்லை அங்கிருந்து
சென்ற சத்ராஜித் அதனைத்
தன் சகோதரர் பிரசேனனிடம்
வழங்கினார்

பிரசேனன் அதனை
அணிந்து கொண்டபின்
கர்வம் கொண்டான்
ஒருமுறை காட்டில்
வேட்டையாடும் போது
சிங்கத்தால் தாக்கப்பட்டு
உயிரிழந்தார் அங்கு
சிங்கத்திடமிருந்து
ஜாம்பவான் என்ற கரடி
(இவர்தான் அனுமனுக்கு
தன் பலத்தை
சுட்டிக்காட்டி இலங்கை
செல்ல தகுதியானவன்
அனுமன் என்று சொன்ன
சிரஞ்சீவி) அந்த நகையை
கைப்பற்றியது

பிரசேனன் வெகு நாள்
ஆகியும் வராமல் போகவே
அவன் காணாமல்
போனதற்குக் கிருஷ்ணன்
தான் காரணம் என்று
நினைத்தான் சத்ராஜித்

கிருஷ்ணன் அந்த சியமந்தக
மணிக்கு ஆசைப்பட்டு
கொலை செய்துவிட்டு
மணியைத் திருடிச்
சென்றிருப்பாரோ என்ற
சந்தேகம் பகிரப்பட்டது

தான் குற்றமற்றவன்
என்பதை நிரூபிக்க
வேண்டிய சூழல்
ஏற்பட்டதால் கிருஷ்ணன்
உண்மை குற்றவாளியைக்
கண்டுபிடித்து நகையுடன்
வருவதாகச் சொல்லி
கிளம்பினார்

இறந்த பிரசேனனின்
விட்டுச்சென்ற எச்சங்கள்
அடையாளங்கள் சிங்கத்தின்
பற்கள் நகங்கள் குதிரையின்
சடலங்கள் இவற்றைக்
கொண்டு தொடரலானார்
கிருஷ்ணர்

இறந்தது ஒரு சிங்கத்தால்
என்ற கண்ட கிருஷ்ணர்
பின்னும் தொடர்ந்தார் அது
ஒரு கரடியின் காலடித்
தடங்களாக இருந்தது பின்
அது அவரை இறுதியில்
ஜாம்பவானின் குகைக்கு
அழைத்துச் சென்றது

ஜாம்பவானுடன் இருபத்தி
எட்டு நாட்கள் ஆவேசமாக
போரிட்டபின் கடைசியாக
ஜாம்பவான் சோர்வுற்று பின்
கிருஷ்ணனும் ராமனும் வேறு
இல்லை என்பதை உணர்ந்து
நகையைக் கொடுத்தார்

ஜாம்பவானின் மகள்
ஜாம்பவதி யையும் மணந்து
துவாரகை நோக்கி
திரும்பினார் கிருஷ்ணர்

சத்ராஜித்தை அழைத்து
நடந்த உண்மைகளைக்
கூறி அந்த நகையையும்
திருப்பிக் கொடுத்தார்
கிருஷ்ணன்

பெற்றுக்கொண்ட சத்ராஜித்
மிகவும் அவமானத்துடனும்
வருத்தத்துடனும் வீடு
திரும்பினார்

தான் கிருஷ்ணரைக் குற்றம்
சுமத்தியது தவறு என்று
எண்ணிய சத்ராஜித் தனது
மகளான எல்லா தெய்வீக
குணங்களும் பெற்ற
சத்தியபாமாவைத் திருமணம்
செய்து கொடுத்தார்
சியமந்தக நகையையும்
கொடுத்தார்

சத்தியபாமாவை
ஏற்றுக்கொண்ட கிருஷ்ணர்
சியமந்தகநகையைச்
சத்ராஜித்திடமே
கொடுத்தார்...

**BHANUMATI NACHIYAR**

தினம் ஒரு தலைவர்கள்

# ஏக்நாத் ராமகிருஷ்ணா ரானடே வரலாறு

பிரிட்டிஷ் இந்திய மாநிலமான மகாராஷ்டிராவில் அமராவதி மாவட்டத்தில் உள்ள திம்தலாவில் ரானடே நவம்பர் 19, 1914 அன்று பிறந்தார் . 1920 ஆம் ஆண்டில், அவரது குடும்பம் நாக்பூருக்கு குடிபெயர்ந்தது , அங்கு அவர் தனது ஆரம்பக் கல்விக்காக பிரதானவிஸ்புரா பள்ளியில் பயின்றார். 1932 ஆம் ஆண்டு, நாக்பூரில் உள்ள நியூ இங்கிலீஷ் உயர்நிலைப் பள்ளியில் மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றார். தத்துவத்தில் கௌரவ முதுகலைப் பட்டம் பெற்ற பிறகு , 1945 ஆம் ஆண்டு ஜபல்பூரில் உள்ள சாகர் பல்கலைக்கழகத்தில் எல்.எல்.பி. பட்டம் பெற்றார்.

ராஷ்டிரிய ஸ்வயம்சேவக் சங்கத்தில் பங்கு
ரானடே , ஒரு இந்து தேசியவாத தன்னார்வ அமைப்பான ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்கத்தின் ஆர்வலர், சித்தாந்தவாதி மற்றும் தலைவராக பணியாற்றினார்.
1925 ஆம் ஆண்டு ஆர்.எஸ். எஸ். அமைப்பை நிறுவிய கே.பி. ஹெட்கேவரால் அவர் பள்ளிப் பருவத்தில் ஈர்க்கப்பட்டார் . ரானடே 1926 ஆம் ஆண்டு சுயம்சேவக் (தன்னார்வலராக) சேர்ந்தார். நாக்பூரில் ஆர்.எஸ்.எஸ்.-இல் பணியாற்றிய பிறகு, ரானடே 1938 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேசத்தின் மகாகோஷலுக்கு பிராந்த் பிரச்சாரக் ( மாகாண அமைப்பாளர்) ஆகச் சென்றார்.

மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து , ஆர்.எஸ்.எஸ் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ரானடே நிறுவன முயற்சிகளை வழிநடத்த தலைமறைவாகச் சென்றார், இதனால் அவர் "சர்சங்கசாலக்" என்ற புனைப்பெயரைப் பெற்றார். அதே நேரத்தில் , தடையை நீக்குவதற்காக எம்.எஸ். கோல்வால்கர் தலைமையில் ஆர்.எஸ்.எஸ் ஒரு சத்தியாக்கிரகத்தைத் தொடங்கியது. கோல்வால்கர் கைது செய்யப்பட்ட பிறகு, ரானடே சத்தியாக்கிரகத்திற்கு தலைமை தாங்கினார் மற்றும் நாட்டின் உள்துறை அமைச்சர் சர்தார் படேலுடன் ரகசிய பேச்சுவார்த்தைகளில் பங்கேற்றார் . ஆர்.எஸ்.எஸ் தடையை ரத்து செய்வதற்கான நிபந்தனையாக, ஆர். எஸ்.எஸ் எழுதப்பட்ட அரசியலமைப்புடன் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்று படேல் வலியுறுத்தினார் .

ரானடே, சக ஆர்.எஸ். எஸ் உறுப்பினர்களான பிரபாகர் பல்வந்த் தானி மற்றும் மதுகர் தத்தாத்ரயா தியோரஸ் ஆகியோருடன் இணைந்து ஒரு அரசியலமைப்பை உருவாக்கினார் , ஆனால் அது அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை. இதன் விளைவாக, இந்திய அரசியலமைப்பு மற்றும் கொடிக்கு விசுவாசமாக இருத்தல், வன்முறையைத் தவிர்ப்பது, பெற்றோரின் அனுமதியுடன் சிறார்களை மட்டுமே இயக்கத்தில் சேர்ப்பது, சர்சங்கசாலக் தேர்தலுக்கான நடைமுறைகளை அமைத்தல் போன்ற பிரிவுகளைச் சேர்க்க மறுவடிவமைப்பு செய்யப்பட்டது . ஜூன் 1949 இல் அரசாங்கம் மறுவடிவமைப்பு செய்யப்பட்ட அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டது. ஆர்.எஸ். எஸ் மீது விதிக்கப்பட்ட தடை ஜூலை 11, 1949 அன்று ரத்து செய்யப்பட்டது.

1950 ஆம் ஆண்டில், வங்காளம் , ஒடிசா மற்றும் அசாம் ஆகியவற்றை உள்ளடக்கிய பூர்வாஞ்சல் க்ஷேத்திரத்திற்கான க்ஷேத்திர பிரச்சாரகராக அவர் பணியாற்றினார் . கல்கத்தாவில் , இந்தியப் பிரிவினையைத் தொடர்ந்து பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு உதவுவதற்காக வாஸ்துஹார சஹாயத சமிதியை (வஸ்துஹார சஹாயத சமிதியை) நிறுவினார் . 1953 ஆம் ஆண்டில், ரானடே அகில பாரதிய பிரச்சார பிரமுக் (வஸ்துஹார பிரச்சார பிரமுக்) ஆனார். 1956 முதல் 1962 வரை, ரானடே ஆர்எஸ்எஸ்ஸின் பொதுச் செயலாளராகப் பணியாற்றினார் . இந்தக் காலகட்டத்தில், இணைந்த அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து அதிக செயல்பாட்டாளர் நிலைப்பாட்டைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, குணநலன்களை உருவாக்குவதில் ஆர்எஸ்எஸ்ஸை மீண்டும் கவனம் செலுத்த முயன்றார். 1962 ஆம் ஆண்டில், அவர் ஆர்எஸ்எஸ்ஸின் அகில இந்திய பௌதிக் பிரமுக் ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

196372 காலகட்டத்தில், விவேகானந்தர் பாறை நினைவுச்சின்னத்தை நிர்மாணிப்பதில் ரானடே ஒரு கருவியாகப் பங்களித்ததாகக் கருதப்படுகிறது .

1972 ஆம் ஆண்டில், கன்னியாகுமரியை மையமாகக் கொண்ட விவேகானந்த கேந்திரத்தை ரானடே நிறுவினார் , இது " துறத்தல் மற்றும் சேவை " கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு இந்து ஆன்மீக அமைப்பாகும் .
இந்த கேந்திரா ஒரு குரு அல்லது " குரு கலாச்சாரத்தின் " பிரச்சாரம் இல்லாத ஒரு "சாதாரண சேவை அமைப்பு" ஆகும் , இருப்பினும் இது விவேகானந்தரின் போதனைகளால் பாதிக்கப்பட்டது . இது இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் 206 கிளைகளைக் கொண்டுள்ளது. அவர் கேந்திராவிற்கு " அவதார-ஹூட் " (கடவுள் அவதாரம்) என்ற நிலையை அங்கீகரிக்கவில்லை. அவர் தன்னையோ அல்லது விவேகானந்தரையோ மையத்தில் வழிபாட்டு நிலைக்கு உயர்த்திக் கொள்ளவில்லை, ஆனால் ஓம்காரத்தை அதன் வழிகாட்டும் கொள்கையாகப் பயன்படுத்துவதை ஊக்குவித்தார். ஓம்காரத்தை குருவாக ஏற்றுக்கொள்வதன் மூலம், இந்தியாவில் உள்ள அனைத்து குருக்களும் கௌரவிக்கப்படுவார்கள் என்று அவர் நம்பினார். விவேகானந்தா கேந்திராவின் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய பிறகு, ரானடே 1978 இல் அதன் தலைவரானார்.

விவேகானந்தர் நினைவு மையம் மற்றும் மையம்
மேலும் காண்க: விவேகானந்தா ராக் மெமோரியல் ஏக்நாத் ரானடேவின் பங்கு

ரானடே விவேகானந்தர் ராக் நினைவுக் குழுவின் அமைப்புச் செயலாளராக இருந்தார் . விவேகானந்தரின் போதனைகள் ரானடேவை ஆழமாக பாதித்தன. 1963 ஆம் ஆண்டு, அவரது பிறந்த நூற்றாண்டு விழாவில், விவேகானந்தரின் எழுத்துக்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றை " இந்து தேசத்திற்கான எழுச்சி அழைப்பு" என்ற தலைப்பில் தனிப்பட்ட அஞ்சலியாக வெளியிட்டார். அதே ஆண்டு, கன்னியாகுமரிக்கு அருகிலுள்ள நடுக்கடல் பாறை இடத்தில் விவேகானந்தரின் நினைவாக ஒரு நினைவுச்சின்னத்தை கட்டும் யோசனையை ரானடே உருவாக்கினார் , அங்கு விவேகானந்தர் 1892 டிசம்பரில் மூன்று நாட்கள் தியானம் செய்தார்.

ஆர்.எஸ்.எஸ் தலைவர் எம். எஸ். கோல்வால்கர் மற்றும் பிறரிடமிருந்து இந்தத் திட்டத்திற்கு நேர்மறையான பதில்களைப் பெற்ற பிறகு , ரானடே விவேகானந்தர் பாறை நினைவு ஏற்பாட்டுக் குழுவை நிறுவி அதன் அமைப்புச் செயலாளரானார் . ஆதரவை உருவாக்கவும் பின்னர் நினைவுச்சின்னத்திற்கான நிதி திரட்டவும் நாடு முழுவதும் பல்வேறு குழு கிளைகள் நிறுவப்பட்டன ( பாரதிய ஜனதா கட்சித் தலைவர் எல்.கே. அத்வானி டெல்லி கிளையின் அமைப்புச் செயலாளராகப் பணியாற்றினார் ).

இந்த யோசனையை முதலில் கல்வி மற்றும் கலாச்சார அமைச்சராக இருந்த ஹுமாயூன் கபீர் நிராகரித்த பிறகு , ரானடே இந்திய நாடாளுமன்றத்தின் 300க்கும் மேற்பட்ட உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றார் . இதன் மூலம் இந்த திட்டம் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியிடமிருந்து ஒப்புதல் பெற வழிவகுத்தது . பாரம்பரியமாக ஆர்எஸ்எஸ்-க்கு எதிரான பிரிவுகள் உட்பட அரசியல் மற்றும் ஆன்மீக சமூகத்தின் சில பகுதிகளிடமிருந்தும் ரானடே இந்த திட்டத்திற்கான ஒப்புதலைப் பெற முடிந்தது.

இந்த திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பிறகு, நாடு முழுவதும் உள்ள நன்கொடையாளர்களிடமிருந்து விவேகானந்தர் பாறை நினைவுச்சின்னத்தை நிர்மாணிப்பதற்கான நிதி திரட்ட தன்னார்வலர்களை ரானடே வழிநடத்தினார். மேலும் , ஜன்-பாகிதாரி (மக்கள் பங்கேற்பு) திட்டமாக ஒவ்வொரு குடிமகனும் குறைந்தது 1 ரூபாயை நன்கொடையாக வழங்க ஊக்குவித்தார்.
இறப்பு மற்றும் மரபு
ரானடே 1982 ஆகஸ்ட் 22 அன்று மாரடைப்பால் சென்னையில் இறந்தார் . மறுநாள் கன்னியாகுமரியின் விவேகானந்தபுரத்தில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது . அவரது மரணத்திற்குப் பிறகு, ஆர்எஸ்எஸ் வெளியீடான ஆர்கனைசரால் அவர் கர்மயோகி ( கர்மயோகத்தின் பின்பற்றுபவர்/ மாஸ்டர்) என்று கௌரவிக்கப்பட்டார்.

அதே ஆண்டில், ரானடேவின் வாழ்க்கையைப் பற்றி விவேகானந்த கேந்திராவால் "ஏக்நாத்ஜி: ஒரு வாழ்க்கை - ஒரு பணி" என்ற ஆவணப்படம் தயாரிக்கப்பட்டது.

நடிகை பூனம் பஜ்வா 2005ல் நடிகையாக அறிமுகமாகி தெலுங்கு, தமிழில் ஏராளமான படங்களில் நடித்தவர். பல முக்கிய ஹீரோக்களுக்கு ஜோடியாக அவர் நடித்து இருக்கிறார்.

ஒருகட்டத்திற்கு பிறகு ஹீரோயின் வாய்ப்புகள் குறைந்ததால் சின்ன சின்ன ரோல்களிலும் அவர் நடிக்க தொடங்கினார். தற்போது அந்த வாய்ப்புகளும் குறைந்துவிட்டதால் அவரை படங்களில் பார்க்க முடிவதில்லை.

பூனம் பஜ்வா இன்ஸ்டாகிராமில் அவ்வப்போது வெளியிடும் கவர்ச்சி போட்டோக்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது. தற்போது கடற்கரையில் ஷார்ட் உடையில் மிக மிக கவர்ச்சியாக பூனம் பஜ்வா போஸ் கொடுத்திருக்கும் ஸ்டில்கள் வைரலாகி இருக்கிறது. இதோ பாருங்க.

# திரிஷாவிடம் மன்னிப்பு கேட்டது தவறு- பார்த்திபன் கருத்தால் மீண்டும் சர்ச்சை

நடிகர் பார்த்திபன் சில தினங்களுக்கு முன்பு திரிஷா குறித்து கூறிய கருத்துக்கள் சர்ச்சையானதால் திரிஷா அவருக்கு கண்டனம் தெரிவித்தார். தனது கருத்துக்களுக்கு மன்னிப்பு கேட்டு பார்த்திபன் வீடியோ வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்று பார்த்திபன் வெளியிட்டு உள்ள வீடியோவில் கூறியதாவது:-

திரிஷாவை நான் பாராட்ட வேண்டும் என்று நினைத்தேன். இந்த நேரத்தில் ஒரு திரைப்பட நட்சத்திரம் என்பதை மீறி வந்திருக்கிற திரிஷாவுக்கு என் மனப்பூர்வமான வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

என்னதான் நாம் ஷார்ப்பா... புத்தி கூர்மையாக பேசினால் கூட மைக்கில் பேசி விட்டதால் புத்திசாலிதனம் ஆகி விடாது என்ற பழி நம் மீது இருக்கிறது. அதனால் நான்கூட முட்டாள் தனமா பேசினால் கூட புத்திசாலிதனமா டிரான்ஸ்லேட் பன்னிக்கொடுக்க வேண்டியது உன்னுடைய பொறுப்பு. ஓகே.

ஹாய் பிரெண்ட்ஸ் நல்லா இருக்கிங்களா? தவறு என்பது தவறி செய்வது, தப்பு என்பது தெரிந்து செய்வது. தவறு செய்பவன் திருந்த பார்க்கணும். தப்பு செய்தவன் வருந்தி ஆகணும்.

அதே மாதிரிதான் நான் வருத்தம் தெரிவிக்கிறேன் என்பது ஒரு விதம். மன்னிப்பு கேட்கிறேன் என்பது இன்னொரு விஷயம். ஒரு நிகழ்ச்சியை தவறு நடந்து விட்டதாக உணர்கிறேன். உண்மையில் அது தவறிதான் நடந்தது.

நான் மேடையில் விஜய், அஜித்தை பற்றி பேசும்போது வேறு ஒரு புகைப்படம் வந்தது. அதை பார்த்ததும் உண்மையில் நான் திகைத்து போய் விட்டேன். ஆனால் வேண்டுமென்றே அந்த போட்டோவை நான் போட சொல்லி பேச ஆசைப்பட்டேன் என்று சொல்வது 100 சதவீதம் பொய்.

ஏனெனில் மகளிர் தினம் அன்று. நான் யாரை பற்றி பேசுவேன் என்றால் அன்னை தெரசா, வேலு நாச்சியாரை பற்றி பேச ஆசைப்படுறேன். அதை விடுத்து நான் இப்படி பேச ஆசைப்பட்டேன் என்று சொல்வது சரியில்லை.

இந்த விவகாரம் குறித்து நான் மன்னிப்பு கேட்ட பிறகு திரிஷா ஒரு டுவிட் போடுகிறார். அதில் நானே விரும்பி அந்த போட்டோவை போட சொன்னதாக குறிப்பிட்டு இருந்தார். இப்படி ஒரு டுவிட் வரும் என்று தெரிந்திருந்தால் நான் வருத்தம் தெரிவித்திருக்கவே மாட்டேன்.

அது ஒரு மூன்றாவது மனுஷியின் ஒரு மூன்றாம் தரமான டுவிட். சமீப காலமாக அவர் குறித்து வந்த கொச்சையான கருத்துக்கள் பொதுவெளியில் இருக்கிறது. அவை அனைத்துக்கும் அவர் பதில் சொல்லியிருந்தார் என்றால் நான் இதை வரவேற்று இருப்பேன்.

ஆனால் அது எதற்குமே பதில் சொல்லாமல் எனக்கு மட்டுமே கண்டனம் தெரிவித்த காரணத்தால் நான் வருத்தம் தெரிவித்ததே தவறு என நிறைய பேர் கண்டனம் தெரிவித்து உள்ளனர். வி ஸ்டாண்ட் வித் பார்த்திபன் என்று நிறைய பேர் குரூப் ஆரம்பித்து இருக்கின்றனர். அந்த நண்பர்களுக்கு நன்றி"

இவ்வாறு பார்த்திபன் வீடியோவில் கூறியுள்ளார்.

# "யூத்" பட தலைப்பு குறித்து கென் கருணாஸ் விளக்கம்

'அசுரன்', 'விடுதலை 2' திரைப்படங்களின் மூலம் தமிழ் சினிமாவில் நடிகராக அறிமுகமானவர் கென் கருணாஸ். நடிப்பு மட்டுமின்றி சில திரைப்படங்களில் கென் உதவி இயக்குநராக பணியாற்றி இருக்கிறார். இந்த நிலையில் கென் கருணாஸ் "யூத்" திரைப்படம் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார்.

இந்தப் படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். இந்தப் படம் மார்ச் 19-ஆம் தேதி வெளியாகிறது. 'யூத்' திரைப்படத்தை பார்வதா என்டர்மெய்ன்மெண்ட் நிறுவனம் சார்பில் கருப்பையா சி. ராம் தயாரித்துள்ளார். தேவதர்ஷினி மற்றும் சுராஜ் வெஞ்சாரமூடு ஆகியோர் இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்தப் படம், பள்ளிக்கூட பின்னணியில் உருவாகியுள்ளது.

யூத் திரைப்படத்தின் ரிலீசை ஒட்டி இயக்குநரும், நடிகருமான கென் கருணாஸ் அளித்த பேட்டி ஒன்றில் விஜய் பட தலைப்பை தேர்வு செய்தது பற்றிய கேள்விக்கு பதில் அளித்தார். அப்போது அவர், "படத்தின் தலைப்புக்கு பெரும்பாலானோர் வாழ்த்து தெரிவித்தனர். எனினும், எனது தந்தை கருணாஸ் மற்றும் நடிகர் விஜய் என இருவரின் அரசியல் முற்றிலும் முரணாக இருக்கிறதே என்று எனது தாய் கேட்டார்.

எனக்கு இந்தப் படத்தின் தலைப்பு கிடைத்தது சிறப்பான விஷயம். மேலும், இந்த தலைப்பை வாங்கியது எனக்கு நானே கொடுத்துக் கொண்ட அழுத்தம் தான். இந்த தலைப்புக்கு நியாயம் செய்ய வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. படம் வெளியாகும் போது பட தலைப்பு குறித்து அப்படி யோசிக்க மாட்டார்கள்," என்றார்.

நடிகை ராசி கண்ணா தமிழ், தெலுங்கில் முக்கிய நடிகையாக இருந்து வருகிறார். சமீபகாலமாக ஹிந்தியிலும் அவருக்கு அதிகம் வாய்ப்புகள் வர தொடங்கி இருக்கிறது. தற்போது இன்ஸ்டாக்ராமில் ராசி கண்ணாவுக்கு 11.8 மில்லியன் ரசிகர்கள் இருக்கிறார்கள். அவர் தொடர்ந்து வெளியிடும் கவர்ச்சி போட்டோக்களுக்கு லைக்குகளை குவிகிறது. ராசி கண்ணா அழகிய சேலையில் எடுத்த போட்டோஷூட் ஸ்டில்களை தற்போது வெளியிட்டு உள்ளார். எப்படி இருக்கிறார் என நீங்களே பாருங்க.

# திரிஷா பற்றி அப்படி சொன்னேனா லட்சுமி ராமகிருஷ்ணன் விளக்கம்



கடந்த சில நாட்களாகவே விஜய்-திரிஷா விவகாரம், ஒட்டுமொத்த அரசியல் மற்றும் சினிமா களத்தை பரபரப்பாக்கி வருகிறது. இதற்கிடையில் விஜய் குறித்து நடிகையும், இயக்குனருமான லட்சுமி ராமகிருஷ்ணன் விமர்சித்ததாக, சில தகவல்கள் சமூக வலைத்தளங்களில் வைரலானது. இதனை லட்சுமி ராமகிருஷ்ணன் மறுத்துள்ளார். அவர் அளித்துள்ள விளக்கத்தில், "விஜய்யின் தனிப்பட்ட விஷயங்கள் பற்றியும், அவருடைய அரசியல் வருகை பற்றியும் நான் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. மரியாதையான, அமைதியான, மென்மையான இணை நடிகராக மட்டுமே அவரை அறிந்துள்ளேன். அவருடைய தாயார் மீது மிகுந்த மரியாதை உள்ளது.

சமீபத்தில் நான் ஒரு மேடையில் பேசிய சில வார்த்தைகள் தவறாக புரிந்து கொள்ளப்பட்டு, விஜய்யின் அரசியல் வருகைக்கும் இப்போது பேசப்படும் தனிப்பட்ட விஷயங்களுக்கும் தவறாக இணைக்கப்பட்டு உள்ளன. இது தேர்தல் காலம் என்பதால் இந்த விஷயம் அளவுக்கு மீறி பெரிதாக்கப்படுகிறது. என் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவும், ஏற்பட்ட தவறான புரிதலை சரி செய்யவும் இதை சொல்கிறேன்" என்றார்.

# 14 நாட்கள் நடிக்க இவ்வளவு சம்பளமா? கல்கி-2 படத்துக்கு எகிறும் எதிர்பார்ப்பு

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான கமல்ஹாசன், 2024-ம் ஆண்டு பான் இந்தியா படமாக வெளியாகி 'ஹிட்' அடித்த 'கல்கி 2898 ஏ.டி.' படத்தில் வில்லனாக நடித்து கலக்கி இருந்தார். அவரது வித்தியாசமான கதாபாத்திரம் ரசிகர்களால் பெரிதும் கொண்டாடப்பட்டது.

இதற்கிடையில் 'கல்கி' படத்தின் இரண்டாம் பாகம் பிரமாண்டமாக தயாராகி வருகிறது. இதில் கமல்ஹாசன் கதாபாத்திரம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்கிடையில் இந்த படத்துக்காக கமல்ஹாசன் வாங்கிய சம்பளம் குறித்து தகவல் வெளியாகி இருக்கிறது. அதன்படி இந்த படத்தில் 10 முதல் 14 நாட்கள் வரை நடித்ததற்காக கமல்ஹாசன் ரூ.150 கோடி சம்பளம் வாங்கியுள்ளதாக பேசப்படுகிறது.



இந்திய சினிமாவில் குறைந்த நாட்களுக்கு கமல்ஹாசன் வாங்கியுள்ள சம்பளம் அனைவரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது. இது கமல்ஹாசனின் மிரட்டல் நடிப்புக்கான எதிர்பார்ப்பை இன்னும் அதிகப்படுத்தி உள்ளது.

WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588



திருப்புமுனையில்
விரக்தியாகிதோற்றுப்போகும்
சலனங்களுக்குக்
குடைபிடிக்கின்றது
மௌனம் .....!

விடை தெரிந்தும்
என்னால் சொல்ல
முடியவில்லை
உன் மௌனத்தால்

**கடவுளின் அறிவிப்பு...**

உன் வேண்டுதல்கள்
என் செவிகளுக்கு
எட்டவில்லை..... எனக்கு
தெரியும் உனக்கு எது
தேவை உனக்கு எது

தேவையில்லை
என....

வேண்டுதலின
உச்சமே
வேண்டாமல்
இருத்தலே..

**கவிஞர்**
**பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

மேகம் குளிர்ந்து மழையாய்
கொட்டியது...
அவள் மேனி நனைந்து
மோகம் முட்டியது....!
இவளின் அழகு
இயற்க்கையை மிஞ்சியது
கல்லில் செதுக்கினாலும்
இவள் அழகே மிஞ்சியது..!

தேவதையாய் அவளிருக்க...
மற்றது தேவையில்லையென
தோணியது...!
ஆணுக்கு அளவோடு
அழகை கொடுத்தான்...
பெண்ணே உனக்கு மட்டும்
அள்ளி அள்ளி கொட்டி
கொட்டி ஏன் கொடுத்தான்...!

பிரமன் ஒரு வஞ்சகன்...
அவனே உன் அழகில்
மயங்கி செத்தவன்...!!

**பொன்.கருணா,**நவி மும்பை



1. வயிற்றுப் பாட்டை கழுவ
மூச்சுக்காற்றை விற்கிறார்
பலூன் காரர்

2. சாதனைகளை
செய்வதற்கு ஏளனம் எதிர்ப்பு
அங்கீகாரம் இவற்றை கடக்க
வேண்டும்

3.திருமணம் சொர்க்கத்தில்
நிச்சயிக்கப்பட்டு
வாழ்க்கை நரகத்தில்
ஆரம்பம் ஆகிறது

3.நான் தூங்கும் போது
எனக்காக பாட்டு பாடும்
ஒரே ஜீவன் எவ்வளவு
துரத்தினாலும்
என்னை மீண்டும் தேடி
வந்து முத்தமிடும் ஒரே
ஜீவன்
எங்க வீட்டு கொசு

4. தூங்கும் போது மட்டும்
மனிதனாக வாழ்கிறோம்
பொழுது விடிந்தால் 1008
வேஷங்கள் சமாளிக்க
வேண்டும்

5. குறைகளை மட்டும் சுட்டிக்
காட்டுவதை விட உற்சாகம்

அளித்து
பாருங்கள்
முடியாது
என்று
சொல்பவர்கள்
கூட
முயற்சி
செய்வார்கள்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

1. விதி வந்த போது
சதி செய்கிறது வாழ்க்கை

2. எல்லாம் தொலைத்த
பிறகும் தொலைந்து
கடப்பது வாழ்க்கை

3. உளி படாத கல்
சிலையாவதில்லை
வலி படாத காதல்
வரலாறாகுவதில்லை !

4 ஓடும் நதி ஒருபோதும்
தன் உழைப்பை
பேசுவதில்லை !

5. குடிப்பழக்கம் சுடுகாடு
வரை உணரவில்லை

ஐந்தறிவு
மனிதன்

6. படிப்பினை
பூட்டி
வைக்கிறது
சிறைக் கதவுகளை!

**லி .நௌஷாத் கான்**

தரையில் நின்று
கையசைத்த சிறுமிக்கு
இறக்கைகள்
முளைத்திருந்தன.
'கும்மானிங் ஸார்'
சொல்லும்போது
ஆங்கிலம் அழகாகிறது.

அப்பா என்னென்ன
வாங்கித் தருவாரென்று
பட்டியலிடும்போது
நிறைவேறாத அத்தனையும்
இடம் பெறுகின்றன..
செய்யாத அப்பாவின் மீது
விமர்சனமே இல்லாமல்.

வாங்கிக் கொடுத்து
விடலாமா என்கிற
யோசனையைத்
தள்ளிப் போடுகிறேன்..

அப்பா..மகள்
வாத்சல்ய
அழகைச்
சிதைக்க
விரும்பாமல்.

**ரிஷபன்**

**காற்றைப் போற்றி வாழ்.!**

காற்றைப் போற்ற வா..
காற்றைப் போற்ற வா..
காற்றடைத்தப் பந்து நமது
உடம்பு அல்லவா!
காற்றில்லாமல் வாழுவது
கடினமல்லவா.!

தெற்குத் திசை வீசும் காற்று
தென்றல் காற்றுதான்..
வடக்குத் திசை காற்று வீச..
வாடைக் காற்றுதான்!
கிழக்குத் திசை வீசி
வந்தால்.. கொண்டல்க்
காற்றுதான்.. மேற்கிலிருந்து
வீசும் போது மேலைக்
காற்றுதான்.!

கற்று அல்லவா.. அதைப்
போற்றிப் பாட வா..
காற்றில்லாது மனித வாழ்வு
இல்லையல்லவா!

***

பூங்காற்று இளந் தென்றல்
ஆகுமல்லவா
புயற்க்காற்று சூறாவளி
சுழலுமல்லவா..
ஆடிக்காற்றில் அம்மிக்கூடப்
பறக்குமல்லவா!ஆசைக்காற்றில்
அடித்துச் செல்லும்
மனிதனல்லவா!

காற்றிலாமலே நாம் தூங்க
முடியுமா..? காற்றைப் போற்ற
வில்லையெனில் பாட்டு
ஆகுமா?

***

குளிர்க் காற்று வீசும் போது
போர்வை தேடுவோம்..
பனிக்காற்று மூடும் போது
மலர்கள் தேடுவோம்..
மென்காற்றைப் பாடும் போது
தென்றலாகுவோம்!
காதலர்கள் தழுவும் போது
பாதை மூடுவோம்.!

காற்று இல்லையே..நம் மூச்சு

இல்லையே..
காற்று நின்று
போனதென்றால்..
உயிரு
மில்லையே.!

**வே.கல்யாண்**
**குமார்.**

**மரணவலி....**

அரவமில்லா பனங்காடு
பொட்டல் வெயில்
உச்சியை பிளக்கிறது...

குடிநீரற்று நா வறல்கிறது
இப்போது இந்த நிமிடம்
வாழ்தல்
நிமித்தமாயிருக்கிறது...

நோயுற்றவன் வாழ்வு நரகம்
கடன்பட்டவன் நிலை
தெருவில் இரண்டும்
ஒருசேர்தல் பிணம்...

வெயிலில் வியர்வை வரணும்
மழைக்கு முன் சேமிப்பு
இரண்டுமற்றானுக்கு
வாழ்வறிது...

லட்சியங்களை நாடி
ஓடுகிறவன் லட்சங்களை
இழந்து வாடுகிறான்
மிச்சமாயிருப்பது மரணவலி...

சுற்றங்கள் துணை இருக்க
லட்சங்கள் இல்லாவிடினும்
லட்சியத்தில் வெற்றி
உண்டு...

வெள்ளை வேட்டிக்காரணும்
கவிதை பேசித்திரிந்தவனும்
நோயோடு கடனும்
வரப்பெரின்...

வாழ்வென்பது திரிசங்குதான்
கடனுக்கு பயந்தோடி ஒளிந்து
நோய்க்கு மருந்து
தேடித்திரிந்து...

எதுவும் இயலாது போகும்
போது இன்னல்வந்து
கண்ணைக்கட்டும்
மரணம் கூட வர மறுக்கும்...

அரவமில்லா பனங்காடு
உச்சி வெயில் பிளக்கிறது
கண்கள்செருகி
தலைகவிழ...

குடிநீரற்று
நான்
வறல்கிறது
இப்போது
இந்த நிமிடம்
வாழ்தல்

நிமித்தமாயிருக்கிறது...

**முத்தையா மோகன்...**
கோவை

**புத்தரும் சிறுவனும்**

ஒருசமயம் புத்தரவர் மரத்தின் கீழே
ஒருமனமாய்த் தியானத்தில் அமர்ந்திருந்தார்
தருநிழல்தான் என்றாலும் கோடைக் காலம்
தந்தவெப்பம் தாளாமல் உயிரினங்கள்
பெருந்தணலில் இருப்பதுபோல் தவித்த போது
பெருந்தவத்து ஞானியுமே தாங்கி டாமல்
திருவுடல்தான் சோர்வடைய வியர்வை கொட்ட
திறந்தவெளி மண்மீது மயங்கி வீழ்ந்தார் !

ஆடுமேய்க்கும் சிறுவனவன் அந்தப் பக்கம்
ஆடுகளை மேய்த்தபடி வந்தபோது
நாடுபோற்றும் புத்தரவர் மயங்கிருந்த
நலிந்தகாட்சி கண்டருகில் சென்று பார்த்தான்
காடுவாழும் கீழ்ச்சாதிக்காரன் நானோ
கண்ணியவான் உடல்தொட்டுப் பார்த்தல் தீட்டு
ஈடுயிணை அற்றவரின் தூய்மை கெட்டே
இங்குள்ளோர் ஏசுவரென் றஞ்சி நின்றான் !

மயங்கிருக்கும் அவரைவிட்டுப் போவதற்கும்
மனமின்றி ஏதுசெய்தால் தெளிவாரென்றே
அயல்நின்று சிந்தித்து நீர்தெளித்தால்
அவர்மயக்கம் தெளியுமென்றே முடிவு செய்து
இயல்பான தாழ்ந்தமனப் பான்மையாலே
இனியஉடல் தொட்டிடாமல் செய்ய எண்ணி
முயன்றாட்டை இழுத்துவந்து முகத்தின் நேரே
முன்நிறுத்திக் காம்பில்பால் கறந்து விட்டான் !

புத்தர்தாம் கண்விழிக்கக் கரங்கள் கட்டிப்
புறமொதுங்கி அச்சிறுவன் எதிரே நின்றான்
சத்தியத்துப் புத்தரவர் எழுந்தமர்ந்து
சாந்தமாகத் தாகத்தைத் தணிப்பதற்கே
உத்தமனாம் சிறுவன்நீ பால்கறந்தே
உன்கரத்தால் எனக்களிப்பாய் என்று கேட்க
இத்தரையில் கீழ்ச்சாதிச் சிறுவன் நானோ
இனியபாலைத் தருவதுதீட் டென்று ரைத்தான் !

உயர்சாதிக் காரரான உங்களுக்கே
ஊரில்கீழ்ச் சாதியென்றன் கையால் தந்தால்
உயர்ந்தவுங்கள் தூய்மைக்கே களங்கம் சேர்க்கும்
உலுத்தனென்ற பாவமுமே சேரும் என்றே
அயல்நின்று சிறுவனவன் சொன்ன சொல்லை
அமைதியாகக் கேட்டபுத்தர் சிரித்த வாறு
மயல்நெஞ்சில் கொண்டுள்ளாய் அறியா மையால்
மதியற்றார் உரைத்தசொற்கள் இவைக ளென்றார் !

கீழ்ச்சாதி மேல்சாதி என்ப தெல்லாம்
கீழோர்கள் கட்டிவைத்த பொய்யின் மூட்டை
ஊழ்வினையால் வந்ததன்று அறிவிருந்தும்
உய்த்துணரா அறிவிலிகள் உதிர்த்த சொற்கள்
ஆழ்ந்திங்கே சிந்தித்தால் அனைவருக்கும்
அவர்தம்மின் உடல்ரத்தம் சிவப்பு ஒன்றே
வாழ்கின்ற வாழ்க்கைதான் உயர்வு தாழ்வை
வழங்குகின்ற உண்மையினை அறிவாய் என்றார் !

அறநெறியை நீதியினைப் கடைப்பிடித்தே
அதன்வழியில் நடப்பவனே உயர்ந்த சாதி
மறநெறியை விட்டன்பும் கருணை யோடும்
மற்றவரை அணைப்பவனே உயர்ந்த சாதி
பிறப்புதனில் உயர்வென்றும் தாழ்வு என்றும்
பிரிவொன்றும் இல்லையிதை உணர்தல் வேண்டும்
புறத்தினிலே நாம்சூட்டி வைத்திருக்கும்
புரையிதனை அறுத்தெறிய வேண்டுமென்றார் !

உணர்விழந்த போதெனக்கே கருணையோடே
உதவியநீ உண்மையிலே உயர்ந்த சாதி
உணவுதனை நீதந்தால் அமுதமாகும்
உன்கரத்தால் பால்கறந்து தருவாய் என்றார்
மனவிருள்தான் அகன்றிடவே மகிழ்ச்சியோடு
மறுப்பின்றிப் பால்கறந்து சிறுவன் தந்தான்
தனதுதாகம் தீரப்பால் குடித்த புத்தர்
தலைதடவிச் சிறுவனையே வாழ்த்திச் சென்றார் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

# நூல் விமர்சனம்

**அமிழ்தினும் இனிது!**
**நூல் ஆசிரியர் :**
**கவிஞர் புலவர் இராம. வேதநாயகம்**
**வனிதா பதிப்பகம் : 11, நானா தெரு, பாண்டி பஜார், தியாகராய நகர், சென்னை 600 017.**
**பேச : 044 42070663**
**விலை : ரூ. 80**
**நூல் மதிப்புரை :**
**கவிஞர் இரா. இரவி**

மிழ்தினும் இனிது நூல் பெயர் பொருத்தம் மிக நன்று. அமிழ்தினும் இனிய கவிதைகளை குழந்தைப் பாடல்களை வடித்துள்ளார். பாராட்டுக்கள். தமிழன்னைக்கு அணி செய்யும் விதமாக படைத்துள்ளார். தமிழே அறியாமல் இன்றைய குழந்தைகள் வளர்ந்து வருகின்றன. தமிழ்மொழி பற்றியும் பண்பாடு பற்றியும் நமது குழந்தைகளுக்கு கற்பிக்க உதவிடும் நூல். ஒவ்வொரு தமிழரின் இல்லத்திலும் இருக்க வேண்டிய நூல். மிக எளிமையாகவும், இனிமையாகவும் பாடல்களை செதுக்கி உள்ளார்கள். படித்ததும் குழந்தைகள் மனதில் பதியும்படியாக செதுக்க உள்ளார்கள்.

முதல் கவிதை புதிய ஆத்திசூடி படித்தால் போதும் வாழ்க்கையில் கடைபிடித்தால் வாழ்க்கை சிறக்கும். புதிய ஆத்திச்சூடி! அனுதினம் பள்ளி செல்ஆசு நீக்கு இனிக்கப் பேசு ஈதல் சிறப்பு உள்ளம் தூய்மை செய் ஊக்கம் கொடு எண்ணித் துணிக ஏணி போல உதவு ஐயம் போக்கு ஒற்றுமையே உயர்வு ஓதுதல் விலக்கேல் ஔவை வழி செல்.

குழந்தகளுக்கு அறிவு புகட்டும் விதமாகவும், சொற்களையும் அதற்குரியனவற்றையும் அறிமுகப்படுத்தும் விதமாகவும் பாடல் புனைந்து உள்ளார்கள்

எறும்பைப் போல ... கரும்பைப் போல நீயும் / இனித்திட வேணும் பாப்பா எறும்பைப் போல நீயும் / உழைத்திட வேணும் பாப்பா மானைப் போல நீயும்/ துள்ளிட வேணும் பாப்பா தேனைப் போல நீயும்/ சுவைத்திட வேணும் பாப்பா இன்றைய குழந்தைகள் பள்ளி செல்கின்றனர். பள்ளி முடிந்து வந்து விளையாடுவதற்கு நேரமே இல்லை. தனிப்பயிற்சி வகுப்பிற்கு அனுப்பி விடுகின்றனர். இரவாகி விடுகின்றது. உறங்கி விடுகின்றனர். வெளிஉலகமே தெரியாத கிணற்றுத் தவளையாகவே வளர்ந்து வருகின்றனர். அவர்களுக்கு விளையாடுக என்று அறிவுறுத்தும் விதமாக வடித்த பாடல் மிக நன்று. முன்னின்று விளையாட்டை நடத்து! மாலையில் விளையாடு தம்பி நீ / மகிழ்வாக ஓடியாடு தம்பி! வேளையில் பள்ளி செல் தம்பி உனக்கு / வெறும் படிப்பு போதாது தம்பி காலையில் கடமைகள் தம்பி நீ/ கனிவாகச் செய்திடுவாய் தம்பி வாழைபோல நன்மைகள் தம்பி நீ/ வளமாக செய்திடுவாய் தம்பி.! மகாகவி பாரதியார் பற்றி குழந்தைகளுக்கு அறிவிக்கும் விதமாக வடித்த பாடல் ஒன்று மிக நன்று.பாரதியாரின் கதை கேளு! எட்டையபுரத்தில் பிறந்தவர்/ எளிமை வாழ்வில் சிறந்தவர் எட்டாவளர்ச்சி கவிதையில் ஏழு வயதில் பாடினார். குழந்தைப்பாடல் இசைத்தவர் / குயிலின் பாட்டில் மகிழ்ந்தவர்பழகும் பொருளை எல்லாமே / பாட்டில் கொண்டு வந்தவர்.

பாரதியாரின் இயல்பையும், பாடிய வரிகளையும் கண்முன் கொண்டு வந்து வெற்றி பெறுகின்றார் நூலாசிரியர் புலவர் இராம. வேத நாயகம். அறிவியல் அறிவும் குழந்தைகளுக்கு அவசியம் தேவை. எதையும் ஏன்? எதற்கு? எப்படி? எதனால் என்று யோசிக்க வைக்க உதவுவது அறிவியல். எனவே அறிவியல் குறித்தும் பாடியது சிறப்பு. அறிவியலைப் படி! அறிவியலைப் படி தம்பி நீ/ ஆற்றலையே பெறு தம்பி! கருவிகளைப் பயன்படுத்தி நீ / காரியங்கள் செய் தம்பி! ஏவுகணை பார் தம்பி நல் / ஏற்றம் தரும் தம்பி! பாய்ந்து வரும் அணுகுண்டு/ நம் பாரதத்தில் உண்டு தம்பி! அறுவடைத் திருநாள் உழைப்பைப் போற்றும் திருநாள் இயற்கைக்கு நன்றி சொல்லும் தமிழர் திருநாள் பொங்கல் பற்றிய பாடல் நன்று. பொங்கல் நல்ல பொங்கலாம்! பொங்கல் நல்ல பொங்கலாம்/ புதுமையான பொங்கலாம்! எங்கும் உள்ள தமிழரும் /

ஏற்றிப்போற்றும்பொங்கலாம்! புதிய பானை வைத்தே தான்/ புதிய அரிசி போடுவர்! விதமாய் மஞ்சள் சேர்த்தே தான் / வெற்றி கீதம் பாடுவர்! ஒரு நூலகம் திறக்கும் போது நூறு சிறைச்சாலைகள் மூடப்படும் என்று பொன்மொழி உண்டு. ஊடகங்களின் வருகையின் காரணமாக வாசிக்கும் பழக்கம் வழக்கொழிந்து நூலகத்திற்கு வருவோர் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. குழந்தைகளுக்கு நூலகம் செல்லும் பழக்கத்தை பெற்றோர்கள் பழக்கி விட வேண்டும். நூலகம் பற்றிய கவிதை நன்று. நூலகமே வழிகாட்டி!

நூலகமே வழிகாட்டி நல்ல நூல்களே நூலகமே மதியூட்டி நல்ல நூல்களே கைகாட்டி. மரபுக்கவிதையின் தனிச்சிறப்பு என்னவென்றால் எதுகை, மோனை, இயைபுடன் ஓசை நயத்துடன் படித்தால் மனதில் பதிந்து விடும். மரபுக் கவிதை விரும்பிகளுக்கு நல்விருந்தாக உள்ளது நூல். தமிழுக்கு அமுதென்று பேர் என்றார் புரட்சிக்கவிஞர் நூலாசிரியர் புலவர் இராம. வேதநாயகம் அவர்கள். அமிழ்தினும் இனிது எம் தமிழ் என்று பறைசாற்றி உள்ளார்.

நாளந்தா பல்கலைக்கழகம் என்பது 'நாளும் தா' என்ற தமிழ்சொல்லில் இருந்து வந்தது. காளி கோட்டம் என்ற தமிழ்ச்சொல்லே கல்கத்தா என்றாகி தற்போது கொல்கத்தா ஆனது. பட்டினம் என்ற தமிழ்ச் சொல்லே பாட்னா ஆனது. இப்படி பல தகவல் அடங்கிய ஆங்கில ஒளிக்காட்சி கண்டேன். தமிழன் என்று சொல்லுவோம், தலை நிமிர்ந்து நிற்போம் என்று சொல்லத் தோன்றியது. இந்த நூல் படித்து முடித்த போதும் அந்த உணர்வே தோன்றியது. குழந்தைப்பாடல்கள் மூலம் குழந்தைகளுக்கு தமிழ்மொழி அறிவையும் பொது அறிவையும் வளர்த்து உள்ளார்.

மிதிவண்டி! மிதிவண்டி நல்ல மிதிவண்டி / மிதமாய்ச் செல்லும் மிதிவண்டி புதுவண்டி நல்ல புதுவண்டி / போகும் விரைந்தே புதுவண்டி

சிறுவர்கள் எல்லாம் ஓட்டிடலாம்/ சிறுமிகளும் நன்றாய் ஓட்டிடலாம் பெரியவர்கள் எல்லாம் ஓட்டிடலாம்/புதுமை யான மிதி வண்டி. இந்தப் பாடல் படிக்கும் குழந்தைகளுக்கு மிதிவண்டி பற்றிய அறிவு மனதில் பதிந்து விடும். மிதிவண்டியை மறக்க மாட்டார்கள்.

நூலாசிரியர் கவிஞர் புலவர் இராம. வேதநாயகம் அவர்களுக்கு பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்.

**இல்லாரை எல்லாரும் எள்ளுவர்!**

அறுசீர் மண்டிலம்.

பொருளால்
அமையும் வாழ்வு
பொருளே
இல்லையேல் தாழ்வு
அருளால் அமைந்த உலகம்
அருளே
இல்லையேல் கலகம்!
கருணை இருந்தால் கனிவு
கருணை இல்லையேல் இழிவு
திருவே இருந்தால் மதிப்பு
திருவே இல்லையேல் மிதிப்பு!

செல்வம் தானே சிறப்பு
செல்வம் இல்லையேல் சிரிப்பு
சொல்லும் பொருளோசெழிப்பு
சொல்லே
இல்லையேல் அழிப்பு!
வெல்லப் பொருளே தேவை
வெற்றி இல்லையேல் பாவி
உள்ளம் பொருளில்
வேண்டாம் உள்ளப் பொருளது
போதும்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

**காலத்தை விற்பவன்**

என் நண்பன் ஒருவன்
இருக்கிறான் அவன் ஒரு
கைக்கடிகார ப்ரியன்

நாங்கள் எங்கள் பதின்
வயதுகளாக இருக்கும் போதே
கைகளில் வித விதமாக
கடிகாரம் கட்டி வருவான்

தன் இளம் வயதில் எ
கடிகாரக்கடை மாடசாமியிடம்
வித விதமான கடிகாரங்களை
ஆர்டர் செய்து கட்டிவருவான்

இந்த கடிகாரக் காதலால்
மாடசாமியின் மகளையே
காதலித்து திருமணம் செய்து
கொண்டான்

இப்போது அவன்
மாமனார் கடையில் அமர்ந்து
ஒரு அரும்பெரும் கடிகார
வியாபாரி ஆகிவிட்டான்
காலத்தை விற்பவன் என்று
பெயர்பெற்ற சமயத்தில்
ஆண்ட்ராய்டு மொபைல்
போன் வர காலத்தை விற்பது
கடினமாக...

மகனுக்கு ஃபோன்
கடை வைத்துக்
கொடுத்துவிட்டான்..
அவன் கைகளில் இப்போது
எந்த கைக்கடிகாரமும் இல்லை
ஆனால் அவன் ஃபோனில்

எடுத்ததும்
ஒளிர்கிறது
டிஜிட்டல்
கடிகாரம்

**ஜவஹர்**
**பிரேம்குமார்**
பெரியகுளம்

## பொறாமை !

உங்களுடன் பணி புரியும்
உற்ற நண்பர் ... உங்களைவிட
திறம்பட பணிபுரிந்து
வாழ்கையில் முன்னேறிக்
கொண்டிருக்கிறாரே ....
அவரது முன்னேற்றம்
உங்களை பொறாமைப்பட
வைக்கிறதா... அதற்கு
வடிகால் போட மந்திரமோ,
செய்வினையோ,
கூலிப்படையோ
தேவையில்லை...

'நண்பர்கள் குழு... '
' 24x7 அரட்டை ஸ்பெஷல்...!'
'சண்டேனா ' ரெண்டு... !
" ஜாலியா பேசலாம் வாங்க... '
'அடல்ஸ் ஒன்லி ஜோக்
குரூப்... !'

இது போன்ற வாட்ஸப்
குழுக்களின் லிங்குகளை
நண்பருக்கு அனுப்பி அவரை
அதில் இணைத்து விடுங்கள்!

பிறகு.....பாருங்கள்.....
இருபத்தி நான்கு மணி
நேரமும் செல்ஃபோனும்
கையுமாக இருந்து கொண்டு
அவர் நாசமாகபோவதை
உங்கள் கண் முன்னால்
பார்க்கலாம் !

**எம்.பி.தினேஷ்** கோவை



## புத்தரும் சிறுவனும்

ஒருசமயம் புத்தரவர் மரத்தின் கீழே
ஒருமனமாய்த் தியானத்தில் அமர்ந்திருந்தார்
தருநிழல்தான் என்றாலும் கோடைக் காலம்
தந்தவெப்பம் தாளாமல் உயிரினங்கள்
பெருந்தணலில் இருப்பதுபோல் தவித்த போது
பெருந்தவத்து ஞானியுமே தாங்கி டாமல்
திருவுடல்தான் சோர்வடைய வியர்வை கொட்ட
திறந்தவெளி மண்மீது மயங்கி வீழ்ந்தார் !

ஆடுமேய்க்கும் சிறுவனவன் அந்தப் பக்கம்
ஆடுகளை மேய்த்தபடி வந்த போது
நாடுபோற்றும் புத்தரவர் மயங்கி ருந்த
நலிந்தகாட்சி கண்டருகில் சென்று பார்த்தான்
காடுவாழும் கீழ்ச்சாதிக் காரன் நானோ
கண்ணியவான் உடல்தொட்டுப் பார்த்தல் தீட்டு
ஈடுயிணை அற்றவரின் தூய்மை கெட்டே
இங்குள்ளோர் ஏசுவரென் றஞ்சி நின்றான் !

மயங்கிருக்கும் அவரைவிட்டுப் போவதற்கும்
மனமின்றி ஏதுசெய்தால் தெளிவாரென்றே
அயல்நின்று சிந்தித்து நீர்தெ ளித்தால்
அவர்மயக்கம் தெளியுமென்றே முடிவு செய்து
இயல்பான தாழ்ந்தமனப் பான்மை யாலே
இனியஉடல் தொட்டிடாமல் செய்ய எண்ணி
முயன்றாட்டை இழுத்துவந்து முகத்தின் நேரே
முன்நிறுத்திக் காம்பில்பால் கறந்து விட்டான் !

புத்தர்தாம் கண்விழிக்கக் கரங்கள் கட்டிப்
புறமொதுங்கி அச்சிறுவன் எதிரே நின்றான்
சத்தியத்துப் புத்தரவர் எழுந்த மர்ந்து
சாந்தமாகத் தாகத்தைத் தணிப்ப தற்கே
உத்தமனாம் சிறுவன் நீ பால்கறந்தே
உன்கரத்தால் எனக்களிப்பாய் என்று கேட்க
இத்தரையில் கீழ்ச்சாதிச் சிறுவன் நானோ
இனியபாலைத் தருவதுதீட் டென்று ரைத்தான் !

உயர்சாதிக் காரரான உங்களுக்கே
ஊரில்கீழ்ச் சாதியென்றன் கையால் தந்தால்
உயர்ந்தவுங்கள் தூய்மைக்கே களங்கம் சேர்க்கும்
உலுத்தனென்ற பாவமுமே சேரும் என்றே
அயல்நின்று சிறுவனவன் சொன்ன சொல்லை
அமைதியாகக் கேட்டபுத்தர் சிரித்தவாறு
மயல்நெஞ்சில் கொண்டுள்ளாய் அறியா மையால்
மதியற்றார் உரைத்தசொற்கள் இவைக ளென்றார் !

கீழ்ச்சாதி மேல்சாதி என்பதெல்லாம்
கீழோர்கள் கட்டிவைத்த பொய்யின் மூட்டை
ஊழ்வினையால் வந்ததன்று அறிவி ருந்தும்
உய்த்துணரா அறிவிலிகள் உதிர்த்த சொற்கள்
ஆழ்ந்திங்கே சிந்தித்தால் அனைவ ருக்கும்
அவர்தம்மின் உடல்ரத்தம் சிவப்பு ஒன்றே
வாழ்கின்ற வாழ்க்கைதான் உயர்வு தாழ்வை
வழங்குகின்ற உண்மையினை அறிவாய் என்றார் !

அறநெறியை நீதியினைப் கடைப்பி டித்தே
அதன்வழியில் நடப்பவனே உயர்ந்த சாதி
மறநெறியை விட்டன்பும் கருணை யோடும்
மற்றவரை அணைப்பவனே உயர்ந்த சாதி
பிறப்புதனில் உயர்வென்றும் தாழ்வு என்றும்
பிரிவொன்றும் இல்லையிதை உணர்தல் வேண்டும்
புறத்தினிலே நாம்சூட்டி வைத்திருக்கும்
புரையிதனை அறுத்தெறிய வேண்டுமென்றார் !

உணர்விழந்த போதெனக்கே கருணை யோடே
உதவியநீ உண்மையிலே உயர்ந்த சாதி
உணவுதனை நீதந்தால் அமுத மாகும்
உன்கரத்தால் பால்கறந்து தருவாய் என்றார்
மனவிருள்தான் அகன்றிடவே மகிழ்ச்சி யோடு
மறுப்பின்றிப் பால்கறந்து சிறுவன் தந்தான்
தனதுதாகம் தீரப்பால் குடித்த புத்தர்
தலைதடவிச் சிறுவனையே வாழ்த்திச் சென்றார் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

அறிவியல் அற்புதங்கள்!
நேரிசை வெண்பா!

அறிவியல் இன்றி
அமையா(து) உலகே
சிறந்த கருவிகள்
சீர்மைச்... செறிவுடன்
காணுமே எங்கும்
கலைநயம் யாதும்
பேணுமே நன்கறி பீடு!

கணினி இணையம்
கனிவாய் விளக்கு
அணுசக்தி ஆற்றல்
இசைமை.. மணக்கும்
சமையல் அடுப்பு
சரிநிகராய்ப் பாரே
கமழும் கருவிகள் காண்!

பொத்தான் அழுத்தினால்
பீடுறுகாசுதான்
வித்தகமாய்ப் பல்வேறு
வீறுடைத்... தொத்திடும்
எத்திக்கும் நல்லதான
ஏற்ற கருவிகள்
தித்திக்கும்சூழ்ந்திடத்தேர்!

## மண்ணின் புகழும்....!

அறுசீர் மண்டிலம்.

மண்ணின் புகழை
வளர்த்துவிடு மாண்பாய்த்
தகவாய்த்திகழ்ந்துவிடு!
கண்ணாய் உழைப்பைத்
தந்துவிடு கனிவாய்
வேர்வை சிந்திவிடு!
எண்ணும் சிந்தை
ஏற்றிவிடு எழிலாய்ச்
செயலை ஆக்கிவிடு!
திண்ணம் கொண்டே
வாழ்ந்துவிடு தேர்ந்து
வாழ்வில் சூழ்ந்துவிடு!

உன்னை வளர்த்தால்
போதாதே உடம்பை
வளர்த்தால் போதாதே!
அன்பை விதைத்தே
அறுவடைசெய் அன்பே
பலவாய்க்கிடைத்திடுமே!
உன்னை வளர்த்தே
நாட்டினையும் உயிராய்

எண்ணி
உழைத்துவிடு!
என்றும்
நாட்டை
உயிராக
ஏற்ற மாக
வளர்த்துவிடு!

**முனைவர் இராம.வேதநாயகம்.**

ஊரும் சதமல்ல
உற்றார் சதமல்ல!

ஊரும் நிரந்தர மில்லை
உறவும் நிரந்தர மில்லை
யாரும் நிரந்தர மில்லை
எதுவும் நிரந்தர மில்லை!

சுற்றம் நிரந்தர மில்லை
சூழ்வார் நிரந்தர மில்லை
உற்றார் நிரந்தர மில்லை
உயிரும் நிரந்தர மில்லை!

பேரும் நிரந்தர மில்லை
புகழும் நிரந்தர மில்லை
சீரும் நிரந்தர மில்லை
செழிப்பும் நிரந்தர மில்லை!

பணமும் நிரந்தர மில்லை
பாசம் நிரந்தர மில்லை
குணமும் நிரந்தர மில்லை
கூற்றே நிரந்தரமே!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## மனித நேயம்.

மனித நேயம் மலர்ந்தால்
உலகம் மலரும்.
மனங்கள் இணைந்தால்
மலர்ச்சி துளிர்க்கும்.
பிறர் துயர் கண்டால் நம்
கரம் கொடுத்து உதவுவோம்.
அதுவே மனிதத்தின்
உண்மையான நிறம்.
பசி கொண்டோர்க்கு உணவு
அளித்து பகிர்ந்திடும்
செயலில் ஈடுபடுவோம்.
துயர் கொண்டோர்க்கு
ஆறுதல் கூறி தேற்றுவோம்.
அன்பும் கருணையும் நம்
வாழ்வின் செல்வம்.
அவைதான் மனிதர்களின்
உயர்ந்த நல்வளம்.
மனித நேயம் வாழும் இடம்
எல்லாம் மகிழ்ச்சி தழைக்கும்.

அமெரிக்கா,
இஸ்ரேல்,
ஈரான்
போன்ற
நாடுகளுக்கு
மனித நேயம்
இல்லையா
அல்லது பொருந்தாதா?

**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.

## ஒரு கோடி பெறும்..!

கண்ணீரில் மகிழ்ச்சிதனில்.. கவிதைகளில் வாழுவோருக்கு..
பொன்னல்ல.. பூமாலையல்ல. பொன்னாடையல்ல..
இன்னொமொரு முறை என்று.. தனைமறந்து அன்பர்கள்
தருகின்ற ஊக்கமாம் ஒரு வார்த்தை கோடி பெறும்.!

பிஞ்சுக் கரத்தாலே.. பிசைந்து வைத்தப் பால் சோற்றை..
கொஞ்சியும்.. கெஞ்சியும் தாயூட்ட.. தன்னன்பைப்
பொழிந்திருக்க.. நெஞ்சிலிருந்தே நினைத்தாலே மெய்சிலிர்க்க..
பிஞ்சுக் குழந்தை..ஒன்று அம்மா ! என்று மொழி பேச.. அதுவும்
ஒரு கோடி பெறும்.!

இடையில்லை.. மெல்லிடையாள் இறுக அணைத்தாளே
இடைவெளியே இல்லை! தடையில்லை நழுவுகிற உடையிருக்க
கடைவிரித்தக் கண்ணழகி.. என் காதலி.. காதருகே வந்து
அத்தான் என்றாளே.! அச் சொல்லே ஒரு கோடி பெறுமே.!

**வே.கல்யாண்குமார்.**

## இப்பிறப்பு.

தன்னந் தனியாக வந்து
பிறந்தோமே.!
தாய் மடி சுமக்கத்
தவமிருந்தோமே..
எண்ணியேப் பாருங்கள்..
எத்தனை இன்பங்கள்..!
பிறந்ததை நினைத்தால்...
மனம் மகிழ்கின்றது..!

புல்லின் பிறப்பும்.. பூக்களின்
பிறப்பும்.. எல்லோருக்குமாய்
பூமழைப் பிறப்பும்.. நல்லோர்
ஒருவராய் நம் இப்பிறப்பும்..
நினைக்கும் போதே..
இனிமை தவழுதே..! நெஞ்சம்
வாழ்த்திக் கவிதைகள்
பாடுதே..! (தன்னந்
தனியாக..)

கம்பனைக் கேட்டால்
காவியம் பாடுவான்..!
வள்ளுவன் வந்தே..
வாழ்த்தினைக் கூறுவான்!
பிறந்தவன் இறப்பதும்..
இறந்தவன் பிறப்பதும்..
இறைவன் கொடுத்து..
என்றிவன் பாடுவான்.!
(தன்னந் தனியாக..)

இத்தரைப் பிறப்பு ..
தித்திப்பதன்றோ!
எவ்வுயிரும் நமக்கு
உடன் பிறப்பன்றோ!
அரிது.. அரிது தான்
மனிதப் பிறப்பாம்..!
அதன் சிறப்பென்பது..
அன்புடன் இருப்பதாம்!
(தன்னந் தனியாக..)

ஈ..எறும்பெல்லாம்..
ஓர் அறிவென்பார்..!
ஆறறிவு என்பதோ..
மனிதனுக் கென்பார்.!

ஆறாம் அறிவை..
தேறா தறிவாய்..
மாற்றாதிருப்பது..
மனிதனுக்
கழகன்றோ!
(தன்னந் தனியாக..)

**வே.கல்யாண்குமார்.**

## வாழ்த்திடும் நட்பு

நினைவுகள் இனிமைகள்
என்றால், இனிமைகள்
கனவுகளாகும். நட்பில்
இனிமை கண்டால்,
கனவுகள் நினைவுகளாகும்.
கண்கள் காட்சிகள்
கண்டால், இமைகள்
சாட்சிகளாகும். கண்ணில்
ஈரம் என்றால், இமைகள்
பாரம் தாங்கும். கண்ணாய்
நீயும் நின்றால், இமையாய்
நட்பும் கூடும். உள்மனம்
சொல்வதை உணர்ந்து,
துன்பத்தில் உன்னுடன்
இணைந்து, இன்பத்தில்
உன்னுடன் நனைந்து,
உணர்வுகளோடு எழுந்து,
மலர்ந்திடும் உன்னத அன்பு,

நீ வாழ்ந்திட
வாழ்த்திடும்
நட்பு.

**எஸ். தயாளன்**
காட்பாடி
சேவூர்

## கடவுளின் அறிவிப்பு...

உன் வேண்டுதல்கள்
என் செவிகளுக்கு
எட்டவில்லை.... எனக்கு
தெரியும் உனக்கு எது
தேவைஉனக்கு எது
தேவையில்லை என....
வேண்டுதலின உச்சமே
வேண்டாமல் இருத்தலே..

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

## மனமும்,நிலமும்ஒன்று

நிலமது மலர்வது
பசுமையிலே, பசுமைகள்
எழுவது விதையினிலே,
விதையது விழுவது
நிலத்தினிலே, நிலமதில்
இருப்பது நீர்த்துளியே,
நீர்த்துளி ஈர்ப்பது
விதைகளையே விதையது
தருவது பசுமைகளே,
பசுமைகள் என்பது
பெரும்பயனே! மனமது
மலர்வது மகிழ்ச்சியிலே,
மகிழ்ச்சியைத் தருவது
நற்செயலே, நற்செயல்
பிறப்பது குணத்தினிலே,
நற்குணம் உதிப்பது
இதயத்திலே, இதயத்தில்
இருப்பது இரக்கங்களே,
இரக்கத்தில் எழுவது
நற்செயலே, நற்செயல்
தருவது நற்பெயரே,
நற்பெயர் என்பது
பெரும்பயனே! நிலமென

மனமதைக்
கொள்வோம்
மனதினில்
பசுமைகள்
காண்போம்!

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சி கோட்டை

அவளின் சங்கேத
வார்த்தையும்
என் காதில் சங்கீதமாய்
ஒலித்தது....

**ஸ்ரீகாந்த்** திருச்சி

## அயராத உழைப்பில்

கரங்கள் இல்லை
கவலை இல்லை
உரமே நெஞ்சத்தில்
உள்ளம் முழுவதும்
சுமக்கும் சுமையோ
துயர்தர வில்லை
அமையும் தோள்கள்
ஆதர வுடனே!
அருகில் காணும்
அவலமே பிச்சை
வருவதைப் புரிவது
வாழ்க்கைக்கு நல்லது!!

அருமை
பெருமை
அயராத
உழைப்பில்!!

**வைரமணி**
சென்னை

## மேன்மை

ஆபீசோ மாலோ
அடுக்குமாடியோ
படிக்கட்டுக்களே
உன்னதமானவை
மின்தூக்கி பாசமாய்
அழைக்கும்

எது மேன்மையென
கணக்கிடாதீர் படிகளே
இதயத்துடிப்புக்கான பயிற்சி
இறப்புக்கான விகிதத்தைக்
குறைக்கும் இருநூறு
தசைகள் வலிமையாகும்

மலையைப் பார்த்து
மலைக்காதே எட்டியதும்
அது உனக்கும் கீழே

உழைப்பே உயர்வு வெற்றி
நிச்சயம் ஆரோக்கியத்தை
நோக்கி ஏறுமுகம்
தன்னம்பிக்கையே வாழ்வின்
கம்பீரம் உன்னையே நீ
உணர்ந்தறிவாய்
அதை எந்நாளும்
மறந்திடாதே

முயற்சிகளை ஒத்திப்
போடாதே நிகழ்காலத்தை
பயன்படுத்திடு
எதிர்காலம் வாழ்த்தி
வரவேற்கும் மனதில்

புத்துணர்ச்சி
பொங்கும்
மன அழுத்தம்
பறந்து
போகும்

**பி. பழனி,**
சென்னை.

## பக்தி

காற்றின் மூலம்
பூக்களை உதிர்த்து

இறைவனுக்கு
பூஜை
செய்கிறது
மரம்.

**ஜயந்தி சிவக்குமார்.**
திருச்சி

## மகிழ்ச்சியான வாழ்வு

சந்தோஷ பூ பூத்தால்
வாழ்க்கை ஒரு தோட்டம்,
உள்ளத்தில் நம்பிக்கை
இருந்தால் அது நம்மை
உற்சாகமாக்கும்.
சின்ன புன்னகை பெரிய
மகிழ்ச்சியின் அஸ்திவாரம்
பிரேமம் நிறைந்த
வார்த்தைகள் மகிழ்ச்சிக்கு
அஸ்திவாரம் செய்த
உதவிக்கு நன்றி நிழல்
சந்தோஷத்தின் அஸ்திவாரம்
நேர்மறையான நினைவுகள்
நல்ல பாதைக்கு
அஸ்திவாரம்
எத்துன்பமும் தூசி போல
நினைத்து விட்டால்
மகிழ்ச்சிக்கு அஸ்திவாரம்
தளரா உள்ளத்துடன்
முன்னேறி நடப்பதே

மகிழ்ச்சிக்கு
அஸ்திவாரம்
புன்னகைத்த
வதனங்கள்
மகிழ்ச்சிக்கு
அஸ்திவாரம்
மகிழ்ச்சி
ஆராதிப்போம்
மகிழ்ச்சியோடு வாழ்வோம்

**உஷா முத்துராமன்**

## கோபுர தரிசனம்

கோபுர தரிசனம் கோடி
புண்ணியம் என்றால்
என் கோகிலம் உன்
தரிசனம் எனக்கு வாழ்நாள்
வரம்! நீ
நவக்கிரகம் சுற்றி வருவதை
ரசிக்கையில்
எனக்குள்ளே(யே)
இறங்குகிறது ஒரு காதல்
கிரகம்! நீ என்னைப்
பிடிப்பதென்றால்
ஏழரை என்ன
எழுபது ஆண்டுகளும் கூட
எனக்குச் சம்மதம் தான்!
நு ஒஸ்த்தானன்ட்டே
நேனு ஒத்தென்ட்டாவா?!
என்று நீ எழுதி
வைத்திருக்கும்
வரிகளும் கூடக்
கவிதையாகத் தெரிகிறது
எனக்கு! உன்னைப் பற்றித்
தமிழ்நாடு இ

செய்தித்தாளில்
ஓர்
அன்லிமிடெட்
காதல்
கவிதை
எழுத ஆசை
எனக்கு!
வந்து வந்து போவதை
விட்டு விட்டு
நீ என்னுடனேயே
வாழப் போகும் அந்த
பாடல்களுக்காகத்தான்
காத்திருக்கிறேன்!

**முத்து ஆனந்த்** வேலூர்

## உறவுகள் பலவிதம்

உறவுக்கு உறுதுணை உறவுகளே, அவை கனவுக்கு வழிவிடும் நினைவுகளே, பிரிவினை தருவதும் உறவுகளே, அன்பினை நிறைப்பதும் அதன்செயலே, மண்ணில் குழந்தை பிறக்கையிலே, உலகம் முழுதும் அதற்குறவு. பாதம் பதித்து நடக்கையிலே, காண்பவை எல்லாம் அதற்குறவு. மொழியை நாவில் கொள்கையிலே, உறவுகள் நுழையும் வாய்வழியே, அன்னையும், தந்தையும் முதல்உறவு, அன்பில் நிறைந்தது அவர்மனது. அவர்களைச் சுற்றிடும் ஆயிரம் உறவுகள்,

உன்னையும் பற்றி சுற்றிவரும். உயர்வினை எண்ணும் உன் உள்ளம், உறவுகளுடனே சேர்ந்துவரும். நீ எழுந்திடும்பொழுது ஆயிரம் உறவுகள், உன்னைப் போற்றிப் பாடி வரும்.

நீ விழுந்திடும் பொழுது வருந்திடும் உறவுகள், வாழ்நாள் வரையில் கூடவரும்.

**மீனாட்சி பாண்டியன்** திருவண்ணாமலை

## கேவலப்படுத்தாதீர்கள்

இன்றுதொட்டவர்களெல்லாம்
நேற்று~ அதற்காக
முயற்சி செய்தவர்கள்தான்,
இனப்பேதத்தை முறியடிக்க
இருபத்தேழு ஆண்டுகள்
சிறையில்வாடி
ஆட்சியில் அமர்ந்தவர்தான்
நெல்சன்மண்டேலா,

சுறாமீன் சாப்பிட்டால்
மட்டும்போதாது
சுறாப்போல தாவுவது
எப்படியென ஆராய்ந்துதான்
விஞ்ஞானியானார்
அப்துல்கலாம்,

அடிமை இனமும்
செருப்பு தைப்பவன் மகனும்
அமெரிக்காவை ஆளும்
தகுதி படைத்தார்கள்,

உடைக்குறைந்தாலும்
உறுதிக்குறையாமல்
குருதி சிந்தாமல்
விடுதலை
வாங்கித்தந்தார்
காந்தியடிகள்,

நூறுப்பொருள்களின்
தோல்விக்குப் பிறகே
மின் விளக்கை
கண்டுப்பிடித்தார்
எடிசன்,
பண்ணைவீட்டில்
வேலை செய்தப்படியேப்
படித்து உயிர்காக்கும்
பென்சிலினை
கண்டுப்பிடித்தார்
அலெக்சாண்டர் பிளமிங்,

அவமானங்களை எல்லாம்
சகித்துக்கொண்டு
இந்திய மக்களின்
இன்னல்போக்க
ஆட்சிக்கட்டிலுக்கே
அடித்தளமான சட்டம்
இயற்றினார்
அண்ணல் அம்பேத்கார்

விளையாட்டாய் உருவாக்கிய
தொலைப்பேசிதான்
இன்று உங்களையும்,
என்னையும்
இணைக்கிறது,

எல்லோரும் முயற்சிசெய்தே
முன்னுக்கு வந்துள்ளனர்
முயற்சி செய்பவர்களை
பாராட்டாவிட்டாலும்
பரவாயில்லை
கேவலப்படுத்தாதீர்கள்,

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

## ஏழு கிழமைகள்..!

திங்கள் என்பது..
தேனைப் பேன்றது..
தேடித்தேடி உழைக்கச்
சொல்ல இங்கு வந்தது!

செவ்வாய் என்பது..
சிறப்பு வாய்ந்தது..
மங்களமாய் நமது
வாழ்வில் வந்து நின்றது!

புதன் என்பது..
புனிதமானது.. பொன்
கிடைக்கும் பெருமை இங்கு
புதனுக்குரியது.!

வியாழன் என்பது..
வெளிச்சம் தருவது..!
விடியற் காலை யாக வந்து
வெற்றி தந்தது!
வெள்ளியென்பது..
விடியல் தருவது..
வேதனைகள் தீர்வதற்கே
வெள்ளி முளைத்தது!

சனி என்பது.. அள்ளித்
தருவது.. காரிக் கிழமை
என்று ஆன்றோர்.. போற்றிப்
புகழ்வது.!

ஞாயிறென்பது.. ஒய்வுத்
தருவது.. சூரியனைப் போலத்
தெம்பு நமக்குத் தருவது!

கிழமைகள் ஏழு..
தமிழன் தந்தது..!
பழமையிலும் புதுமைக்
தந்துப் பண்பாடானது.!

**வே.கல்யாண்குமார்.**

FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889

ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901

Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Warehouses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005

SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
We Build Perfection
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009

தெய்வம்
அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

MLMPERFECT.COM
Start Any MLM Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by 1000+ satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247

We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfollo to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்

WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756

**WANTED**

Needed female staff to look after children, patients.

Contact

9150989424

**WANTED**

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

**WANTED**

Site Supervisor required for construction work in Ambattur

Contact:

8428872887

**keerthi foundation**

De Addiction Cum Rehabilitation Centre

**INTERNSHIP & JOB OPPORTUNITIES**

**MSW & M.Sc Psychology – Freshers**

**Internship:**
- Clinical Training
- Counseling Practice
- Case Work

**Jobs:**
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care

Call: 9841945060 | 7845027710

www.keerthifoundation.com

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

**அனைத்து பிரிவினருக்கும்**

**என் துணை**

திருமண தகவல் மையம்

உங்கள் மணமகனை/ மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.

www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை

**ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்**

ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.

ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com

முனீஸ்வர் துணை
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget ⇨ We Show Your Home
Call:7871617005

just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY AT ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250–Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 – Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

ANY MLM PLAN
INR PLAN RS.20000
CRYPTO PLAN RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஜஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

# பல்சுவை களஞ்சியம்

## தீர்த்தம் எப்படி வாங்க வேண்டும்?

பெருமாள் கோவிலில் 3 முறை தீர்த்தம் வாங்க வேண்டும் கேட்டு கூட வாங்கலாம்

1)முதல் முறை தீர்த்தம் : ப்ரதமம் கார்ய சித்யர்த்தம் நம் செயல்களில் வெற்றி பெற வேண்டி வழங்கப்படுகிறது.

2)இரண்டாம் முறை தீர்த்தம் : த்விதீயம் தர்மஸ்தாபனம் நாம் வாழ்க்கையில் தர்ம நெறிகளை கடைபிடித்து வாழவேண்டும் என்பதற்காக வழங்கப்படுகிறது.

3) மூன்றாம் முறை தீர்த்தம் : த்ரிதீயம் மோக்ஷ.ப்ரோக்தம் குணார்னவம் மெய்ப்பொருளான பகவானை உணர வேண்டும் என்பதற்காக வழங்கப்படுகிறது.

மூன்று முறையும் பருங்க வேண்டும் தலையில் . தடவ கூடாது

கண்ணிலும் ஒத்தி கொள்ள கூடாது அங்கவஸ்திரத்திலோ அல்லது வேட்டி நுனியோ வாங்க வேண்டும் பெண்கள் புடவை தலைப்பில் வாங்க வேண்டும்.

கீழே சிந்தாமல் இருக்கவேண்டும் பருகிய உடன் "நாராயணா" என்று 3 முறை சொல்லவேண்டும்...

## உலகம் போற்றும் கணியன் பூங்குன்றனார்

இவரை கணிதமேதையர் என்பர், கணியர் குலத்தில் சமன மத்தத்தைச்சேர்ந்தவர், அவர்பெயரின் அடைமொழி கொண்டு அறியலாம், இவர் ஒரு சோதிடர் என்பதால் தொழிலையும் குறிக்கும் பெயராக இவரது பெயர் அமைந்திருக்கிறது. இவர் சில சங்கமருவிய நூல்களில் பாடல்களை இயற்றியுள்ளார். இவர் புறநானூறு பாடலில் பெரியோர் சிறியோர் என்ற தலைப்பிட்டு எழுதிய பாடல் இன்று உலகம் முழுவதும் பேசப்படுகிறது.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரை அடுத்த மகிபாலன் பட்டி என்ற அழகிய சிற்றூரில் பிறந்து வாழ்ந்தவர். கணியன் பூங்குன்றனார் பரந்த மனப்பான்மை உடையவர்; இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதியவர். மக்கள் அனைவரையும் தமது உறவினராகக் கருதியவர்.

பரிசில் பெறுவதற்காக எந்த ஒரு மன்னரையோ அல்லது வள்ளலையோ புகழ்ந்து பாடாமல், இவர் உலக இயல்பைப்பற்றிய தம் கருத்தை இப்பாடலில் கூறியுள்ளார்.

பாடலின் பின்னணி: திணை: பொதுவியல். துறை: பொருண்மொழிக்காஞ்சி

எல்லாத் திணைகளுக்கும் பொதுவான செய்திகளைத் தொகுத்துக் கூறுதல். துறை: பொருண்மொழிக் காஞ்சி. உயிருக்கு உறுதியளிக்கும் இம்மை மறுமைக் கடன்களை எடுத்துக் கூறுதல்.

யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
இன்னா தென்றலும் இலமே
மின்னொடு
வானம் தண்துளி தலைஇ, ஆனாது
கல்பொருது இரங்கும்
மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம்
புணைபோல், ஆருயிர்
முறைவழிப் படூஉம்
என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம்
ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல்
அதனினும் இலமே.

உரை: எல்லா ஊரும் எமக்குச் சொந்த ஊர்தான். எல்லோரும் எமக்கு உறவினர்தான். தீமையும் நன்மையும் பிறரால் வருவன அல்ல. அவை தாமே வருவன. துன்புறுவதும் துன்பம் தவிர்தலும் (மகிழ்தலும்) அதைப் போன்றவை தான். அதாவது துன்பமும் இன்பமும் பிறரால் வருவன அல்ல.

அவையும் தாமே வருவனதான். சாதல் என்பது புதியது இல்லை; வாழ்தல் இனிமையானது என்று மகிழ்வதும் இல்லை. (உலகின் மேலுள்ள) வெறுப்பால் வாழ்வு இனியதல்ல என்று கூறுவதும் இல்லை.

மின்னலுடன் வானத்திலிருந்து விழும் குளிர்ந்த நீர்த்துளிகள் மழையாகப் பெய்து, அளவிலடங்காது மலையில் உள்ள கற்களை அலைத்தொலிக்கும் மிகப்பெரிய ஆற்று நீராகச் செல்லும் வழியில் மிதந்து போகும் தெப்பம் போல், நமது (அரிய உயிர்) வாழ்க்கை, முறைப்படி அமையும் என்பதை அறிஞர்களின் அறிவுரைகளின் வழியே அறிந்தோம். ஆதலால், பெருமைக்குரிய பெரியோரைக் கண்டு ஆச்சரியப்படுவதும் இல்லை; சிறியோரை இகழ்தலும் இல்லை. என்பதே இப்பாடலின் விளக்கம். எழுத்தும், ஓவியமும் அணு

# மீம்ஸ்

## விடுகதை

| | |
|---|---|
| 100க்கும் 105க்கும் நடுவுல என்ன இருக்கு? | 0 தான் இருக்கு. |
| ஒருத்தன் பொண்டாட்டி சமையல வாயில வைக்க முடியலன்னு பேங்க் மேனேஜர் கிட்ட போய் சொன்னாலும் ஏன்? | ஏன்னா நம்ம கஷ்டத்தை சொன்னாதான் லோன் கிடைக்கும்னு சொன்னாங்களாம். |
| ஒரு அம்மா எப்போதும் தூங்கும் போது கண்ணாடி போட்டுக்கிட்டு தான் தூங்குமாம் ஏன்? | என அப்பதான் தூக்கத்தில் வரும் கனவு தெளிவா தெரியுமாம். |
| ஒருத்தன் விநாயகர் படத்தின் மேல நடிகர் ராதிகா போட்டோ ஒட்டிட்டு போனானாம் ஏன்? | ஏன்னா அது சித்தி விநாயகர் ஆம். |
| ஒருத்தன் துணி கடைல போய் சேலை கேட்டான் அதுக்கு அவன் கோயில்ல போய் வாங்க என்று சொன்னாலும் ஏன்? | ஏன்னா அவங்க பூ சேரி கேட்டாங்களாம். |



# ஜோக்ஸ்

பிரியா ஒரு உணவ சாப்பிடும்போது மட்டும் காத மூடிக்கிட்டே சாப்பிடுவாளாம், ஏன்?
ஏன்னா அது 'இடி'யாப்பமா?
ஹாஹாஹா!
==========
சர்க்கிளுக்கும், ட்ரையாங்கிளுக்கும் டெஸ்ட் வெச்சா யாரு ஃபெயில் ஆவாங்க?
சர்க்கிள் தான்.
ஏன்னா அதுக்குத்தான் மூளையே இல்லையே. ட்ரையாங்கிளுக்குத்தான் 3 மூளை இருக்கே.
ஹாஹாஹா!
==========
தினேசுக்கு கல்யாணமாம்.
ஆனா அவன மண்டபத்துக்கு கூட்டிக்கிட்டு போகாம, சுடுகாட்டுக்கு கூட்டிக்கிட்டு போறாங்களாம். ஏன்?
ஏன்னா? தினேஷ் அடக்கமான பொண்ணு வேணும்னு கேட்டானாம். அப்போ கரெக்ட்டாதான் கூட்டிக்கிட்டு போயிருக்காங்க.
ஹாஹாஹா!
==========
ஆகாஷ் அவனோட அப்பா பேர எழுதி ஃபிரிட்ஜ்குள்ள வெச்சுட்டானாம். ஏன்?
ஏன்னா, அவனோட அப்பா பேர கெட்டுப்போகாம பாத்துக்கிறானாம்.
ஹாஹாஹா!
==========
ஒரு ஸ்கூல்ல எக்ஸாம் அன்னிக்கு எல்லாரும் கலர் டிரஸ் போட்டுட்டு போனாங்களாம்.
ஏன்னா அது மாடல் எக்ஸாமாம்.
ஹாஹாஹா!
==========
ரம்யா, நகை கடையில போய் மோதிரம் வாங்கி. அதை காலில் அணிந்து கொண்டாராம் ஏன்?
ஏன்னா, அது 'கால்' பவுன் மோதிரமாம். அப்போ ரம்யா செஞ்சசு சரிதானே? ஹாஹாஹா!
==========
ராகுல் தினமும் ஸ்கூலுக்கு மெதுவாத்தான் போவானாம், ஏன்?
ஏன்னா, அவன் போற வழில ஸ்கூல் உள்ளது. மெதுவாகச் செல்லவும்னு போர்ட் வெச்சு இருக்காங்களாம். அப்போ மெதுவாத்தானே போக முடியும். ஹாஹாஹா!
==========
சூர்யா காய்கறிகளுக்கு கிச்சுகிச்சு மூட்டிக்கிட்டு இருந்தானாம். ஏன்?
ஏன்னா, அவங்க அப்பா காய்கறியெல்லாம் அழுகாம பாத்துக்க சொன்னாராம்.
==========
100க்கும் 105க்கும் நடுவுல என்ன இருக்கு?
வேற என்ன? 0 தான் இருக்கு.

ருத்ரேஷ்
3 ம்வகுப்பு



மிந்ரேஷ்
7 ம்வகுப்பு

Padmini Prasanna
9 th Standard
Phoenix USA

# சிங்கத்தை வெற்றி கொண்ட கொசு

காட்டில் படுத்திருந்த சிங்கத்திடம் போய் ஒரு கொசு பேசத் தொடங்கியது.

"என்னைவிட நீ பலசாலி என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் அல்லவா? அது மிகவும் தவறு.

"உன் வலிமை எப்படிப்பட்டது? பற்களை நறநற என்று கடித்து, நகங்களால் பிறாண்டுகிறாய், இது எப்படி இருக்கிறது என்றால், ஏழைப் பெண் தன் கணவனுடன் சண்டையிடுவதைப் போலத்தான் இருக்கிறது. சரி, வா, நாம் இருவரும் சண்டை போட்டுப் பார்ப்போம்" என்றது உடனே இது 'ங்ஙொய்' என்று ரீங்காரம் செய்து கொண்டு சிங்கத்தின் மீது பறந்து, அதன் நாசியிலும், தாடையிலும் கடிக்கத் தொடங்கியது.

சிங்கம் கொசுவை விரட்ட, தன் நகங்களால் முகத்தைப் பிறாண்டியும், தட்டியும் தோலைக் கிழித்துக் கொண்டதில், இரத்தம் வழிந்ததோடு, களைத்தும் போய் விட்டது.

வெற்றி முழக்கத்தோடு கொசு பறந்து சென்றது. சிறிது நேரத்தில் அந்த கொசு ஒரு சிலந்தி வலையில் சிக்கிக் கொண்டது. சிலந்தி கொசுவின் இரத்தத்தை உறிஞ்சியது.

"வலிமை மிகுந்த சிங்கத்தையே வெற்றி கொண்டு, இப்போது ஓர் சிறிய சிலந்தி என்னை வதைத்துக் கொண்டிருக்கிறதே" என்று கொசு வருந்தியது.

# தெரிந்து கொள்வோம்

1.உலகின் முதல் பெண் விண்வெளி வீராங்கனையான தெரஷ்கோவா பயணம் செய்த விண்கலத்தின் பெயர் என்ன? வோஸ்டாக் - 6

2.விண்வெளிக்கு வெற்றிகரமாக பயணித்த முதல் விண்வெளி வீரர் யார்? யூரி ககாரின்

3.அரிசி நாடு என்று அழைக்கப்படுவது எது? தாய்லாந்து

4.உலகின் நீளமான மண் அணை எது? ஹிராகுட் அணை

5.2026 சர்வதேச மகளிர் தினத்தின் கரு (campaign Theme) என்ன? "ஆதாயத்திற்கு கொடுங்கள்"

6.தேசிய பாதுகாப்பு தினம் (National Safety Day) 2026 ஆம் ஆண்டின் கருப்பொருள் என்ன? "பாதுகாப்பை மேம்படுத்த மக்களை ஈடுபடுத்துதல், கல்வி கற்பித்தல் மற்றும் மேம்படுத்துதல்"

7.சாகித்ய விருது பெற்ற முதல் தமிழ் நூல் எது? தமிழின்பம்

8.2026 ரஞ்சி கோப்பை இறுதிப் போட்டியை வென்றது யார்? ஜம்மு காஷ்மீர்

9.உலக கடற்புல் தினம் எப்போது கடைபிடிக்கப்படுகிறது? மார்ச் 1

10.தமிழ்நாட்டில் உள்ள உயரமான நீர்வீழ்ச்சி எது ? தலையார் நீர்வீழ்ச்சி

தொகுப்பு:
**T.P.குமரன்**
மகர்நோம்புச்சாவடி,
தஞ்சாவூர்

## கடிகாரம்

காலம் காட்டும்
கடிகாரம்
கடமை தவறாக்
கடிகாரம்
ஞாலம் போற்றும்
கடிகாரம்
நல்ல நேரக்
கடிகாரம்!

மணியைக் காட்டும்
கடிகாரம்
மணியே அடிக்கும்
கடிகாரம்
வனப்பாய் விளங்கும்
கடிகாரம்
வண்ண வண்ணக்
கடிகாரம்!

கையில் கட்டும்
கடிகாரம்
கனிவாய் விளங்கும்
கடிகாரம்
சுவரில் மாட்டும்
கடிகாரம்
சோர்வே இல்லாக்
கடிகாரம்!

## மிதிவண்டி

காலை மாலை வேளையில்
பள்ளி தினமும் செல்லவே
அப்பா வாங்கித் தந்தது!
அழகாய்ச் சாலையில் செல்லுது!

சாலை விதிகளை மதித்தே
மகிழ்வாய்த் தினமும் மிதித்தே
நண்பர் கூட்டம் செல்லுமே!
நன்மை பெற்றதைச் சொல்லுமே!

ஆள்கள் ஒதுங்கிச் சென்றிட
அழகாய் மணியும் அடிக்கலாம்!
நாள்கள் தினமும் ஓட்டித்தான்
நாமும் நன்கு படிக்கலாம்!

வண்டிச் சக்கரம் போலவே
வாழ்க்கைச் சக்கரம் ஓடுது!
வண்டி ஓட்டும் காலமே
வசந்தம் என்று பாடுது!

உடலும் வலிமை பெற்றிடும்!
உள்ளம் நல்லதைக் கற்றிடும்!
புதிய வாகனம் வந்தாலும்
மிதி வண்டிதான்
நண்பனே!

**மு.மகேந்திர பாபு,**
தமிழாசிரியர்,
இளமனூர், மதுரை.

# பொதுஅறிவு இல்லாதவன்

ஒரு ஊரில் ஒரு பண்ணையார் இருந்தார். அவருக்குச் சொத்துக்கள் ஏராளமாக இருந்தன.

பண்ணையாருக்கு ஒரே ஒரு பெண்தான்! ஆனால், அந்தப் பெண் ஆணைப் போலவே வளர்ந்தாள். கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றாள். மேலும், கலை, இலக்கியம், இசை ஆகிய வற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்தாள். பெண்ணுக்குத் தகுந்த மாப்பிள்ளை தேட முயற்சி எடுத்தார் பண்ணையார். வரக் கூடிய மாப்பிள்ளை தன் வீட்டோடு இருக்கக் கூடியவனாகப் பார்த்தார். பல மாதங்களாக, பல ஊர்களில் பார்த்தும், எதுவும் பொருத்தமாக அமையவில்லை. எவனுமே மாமனார் வீட்டில் தங்கும் மாப்பிள்ளையாக வர விரும்பவில்லை.

பக்கத்தூரில் பையன் ஒருவன் இருந்தான். அவனுக்கு தாய், தகப்பன் இல்லை. கல்லூரியில் படிக்க வசதி இல்லை. சிற்றப்பன் வீட்டில் தங்கி இருந்தான். அவன் வேலை தேடியும், விண்ணப்பம் போட்டுக் கொண்டும் இருந்தான். பண்ணையார் அவனைப் பற்றி விசாரித்தார். "அவன் ஏழையாக இருந்தாலும், பரவாயில்லை, அவனையே ஏற்பாடு செய்து, பெண்ணை திருமணம் செய்து கொடுத்து அவனை வீட்டோடு வைத்துக் கொள்ளலாம்" என்று சிலர் கூறினார்கள்.

அந்த ஏழை இளைஞனுக்கு தன் பெண்ணை திருமணம் செய்து வைத்தார் பண்ணையார்.

அந்த இளைஞனும் மாமனார் வீட்டில், மனைவி சொல்வதைக் கேட்டுக் கொண்டு அமைதியாக இருந்து வந்தான்.

பண்ணையார் காசிக்கு யாத்திரை சென்றார். ஒரு நாள், பாடகர் ஒருவர், தம் குழுவினருடன் பண்ணையார் வீட்டுக்கு வந்தார். "ஊர்தோறும், செல்வந்தர் வீடுகளில் பாடுவது வழக்கம்" என்றார். "பண்ணையார் யாத்திரை சென்றுள்ளார், எனக்கு இசையில் விருப்பம் இல்லை. நீங்கள் பண்ணையார் வந்த பிறகு வரலாம்" என்றார் மாப்பிள்ளை.

பாடகர் வருத்தத்தோடு, புறப்படத் தயாரானார். அப்போது குளித்து விட்டு வந்த பண்ணையார் மகள், "வந்தவர் யார் எதற்காக வந்தார்?" என்று கேட்டாள்.

"பாடகராம், பாடினால், சன்மானம் பெறலாம் என்று வந்தார், பண்ணையார் யாத்திரை போயிருக்கிறார். அவர் வந்த பிறகு வரலாம் என்று கூறி அனுப்பினேன்" என்றான் மாப்பிள்ளை. "நம்பிக்கையோடு வந்தவரை வெறுமனே போகச் சொல்வது முறையல்ல, என்று கூறி, பாடகரை வரவழைத்து இசை நிகழ்ச்சி நடத்தும்படி ஏற்பாடு செய்தாள் பண்ணையார் மகள்.

"எனக்கு இசையே தெரியாது, நான் எப்படி சபையில் இருந்து ரசிப்பது?" என்றான் மாப்பிள்ளை.

"அதை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று கூறிவிட்டு, அவன் குடுமியில் ஒரு நூலைக் கட்டி, அதை தன்கையில் பிடித்துக் கொண்டு, பின்வரிசையில் அவள் இருந்தாள். பாடகர் பாடத் தொடங்கினார். உள்ளூர் மக்கள் கூடி இருந்தனர். பாடகர் உற்சாகமாகப் பாடிக் கொண்டிருந்தார்.

பாட்டுக்கு ஏற்றப்படி நூலை ஆட்டிக் கொண்டிருந்தாள் பண்ணையார் மகள்.

அவ்வப்போது, மாப்பிள்ளையின் தலை அசைந்து ஆடியது. 'மாப்பிள்ளை நல்ல ரசிகராக இருக்கிறாரே' என்று பாடகர் நினைத்து, மேலும் சிறப்பாகப் பாடிக் கொண்டிருந்தார். திடீரென்று பாடகரைப் பார்த்து, "உம்முடைய பாட்டை நிறுத்தும்!" என்றார் மாப்பிள்ளை. பாடகர் திடுக்கிட்டார். பாட்டில் - ராகத்தில் ஏதேனும் தவறு நேர்ந்து விட்டதோ என்று குழப்பத்தில் ஆழ்ந்து, பாட்டை நிறுத்தி விட்டு, மாப்பிள்ளையைப் பார்த்தார். "என் குடுமியில் கட்டியிருந்த நூல் அறுந்து விட்டது" என்றான் மாப்பிள்ளை. பாடகர் உள்பட அனைவருக்கும் சிரிப்புத் தாங்க முடியவில்லை. அதன்பின் ஒரு பாடகரைக் கொண்டு, மாப்பிள்ளைக்கு இசைப்பயிற்சி கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தனர்.

ஏழையாக இருப்பது குற்றம் இல்லை, ஆனால் முட்டாளாக இருக்கக் கூடாது.

# காகம் அண்ணா...

பசுமை எழில் சூழ்ந்த சொரத்தூர் கிராமத்தின் நடுவில் பெரிய ஆலமரம் இருந்தது. ஆலமரத்தின் நிழலில் பெரியவர்கள் அமர்ந்து பேசிக் கொண்டும் , சிறியவர்கள் விளையாடிக் கொண்டும் இருந்தார்கள். அந்த வழியாக பறந்து வந்த சுபி என்னும் குருவி தான் தங்குவதற்கு இதுதான் சரியான இடம் என்று நினைத்து அந்த ஆலமரத்தில் கூடு கட்ட ஆரம்பித்தது. ஆனால் இந்த குருவியின் கூடு .... சில நேரம் காற்றாலும் சில நேரம் மழையாலும் சேதம் ஆகவிடும். மீண்டும் மீண்டும் கூடு கட்டி சோர்ந்து போயிருந்தது சுபி குருவி.

அப்பொழுது அந்த வழியாக வந்த காகம்.. குருவியின் சோகத்தை பார்த்து... நீ ஏன் சோகமாக இருக்கிறாய் என்று கேட்டது. அதற்கு குருவி நான் பலமுறை முயற்சி செய்து கூடு கட்டுகிறேன்....ஆனால் ஏதாவது ஒரு அசம்பாவிதம் ஏற்பட்டு கொண்டே இருக்கிறது என்ன செய்வது என்று தெரியவில்லை என நடந்தவற்றையெல்லாம் வருத்தமாக கூறியது.

அதனைக் கேட்ட காகம், முதலில் நீ கூடு கட்ட ஆரம்பிக்கும்போது பலரின் ஆலோசனையை கேட்டு தெரிந்து கொண்டாயா ..? என்று கேட்டது.

இல்லை.. நான் ஏற்கனவே கூடு கட்டி இருப்பதால் நான் யாரிடமும் ஆலோசனை கேட்கவில்லை என்று குருவி கூறியது.

அதற்கு காகம் , பிறகு எப்படி உன்னுடைய கூடு சேதமடைகிறது. அதுதான் எனக்கும் தெரியவில்லை காகம் அண்ணா... என்னுடைய முயற்சியும் கடின உழைப்பும் வீணாகிக்கொண்டே இருக்கிறது என்று கூறி அழுதது.

அழாதே குருவி நான் சொல்வதைக் கேள். நீ பலமுறை முயற்சித்தும் தோல்வி அடைகிறது என்றால் நீ எங்கு தவறு செய்கிறாய் என்பதை தெரிந்து கொள். அது தெரியாமலேயே நீ முயற்சி செய்தால் வெற்றி கிடைக்காது. எந்த ஒரு செயலை செய்தாலும் அதற்கு முன் வெற்றி பெற்றவர்களையும், தோல்வி அடைந்தவர்களையும் சந்தித்து ஆலோசனை பெற வேண்டும்.அது உன்னுடைய முயற்சிக்கு விரைவில் வெற்றியைத் தேடித் தரும். தூக்கணாங்குருவி... காகம்... சிட்டுக்குருவி... போன்ற அனைத்து பறவைகளிடமும் நீ சென்று கூடு கட்டும் ஆலோசனையை கேட்டு தெரிந்து... அதன் பின் உன்னுடைய முழு முயற்சியையும் செய்து கூடு கட்டினால் நீ நினைத்ததை விட பாதி நேரத்தில் சிறப்பான கூடு கட்ட முடியும் என்று கூறியது.

அப்படின்னா நிறைய பேரோட ஆலோசனையை கேட்டு தான் கூடு கட்ட வேண்டுமா அண்ணா ? என்று கேட்டது சுபி குருவி.

ஆமாம்... உன்னால் முடிந்த அளவுக்கு பல பேரின் ஆலோசனையை கேட்டு, அதில் சிறப்பான ஆலோசனைகளை எல்லாம் தேர்ந்தெடுத்து செயல்படுத்த வேண்டும். அப்பொழுதுதான்.. என்ன செய்ய வேண்டும் என்ன செய்யக்கூடாது என்ற தெளிவு நமக்கு கிடைக்கும். நாம் எந்த ஒரு செயலிலும் வெற்றி அடைய மூன்று விஷயங்களை கடைபிடிக்க வேண்டும்.

1. விடாமுயற்சி.
2. கடின உழைப்பு.
3. இதற்கு முன் இத்துறையில் வெற்றி பெற்றவர்கள் மற்றும் தோல்வி அடைந்தவர்களின் அனுபவங்கள்.

புரிந்ததா குருவி என்று பாசமாக கேட்டது காகம்.

காகத்தின் அறிவுரையை கேட்ட சுபி குருவி.. நன்றாக புரிந்தது அண்ணா... நானும் பலமுறை முயற்சி செய்தேன். ஏன் என்னால் சிறப்பான கூடு கட்ட முடியவில்லை என்பதை இப்போதுதான் புரிந்து கொண்டேன். விடாமுயற்சியும் கடின உழைப்பும் மட்டுமே வெற்றியை தராது. ஆழ்ந்த அனுபவ அறிவும் தேவை என்பதை தெரிந்து கொண்டேன். நன்றி அண்ணா . நான் சென்று பலரின் கூடுகளை பார்த்து ஆலோசனை கேட்டு வருகிறேன் என்று கூறி சுபி குருவி பறந்து மகிழ்ச்சியாய் சென்றது.

திருக்குறள் :
செய்வினை
செய்வான்
செயன்முறை
அவ்வினை
உள்ளறிவான்
உள்ளம்
கொளல்.

இந்த பகுதியில்
உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## பர்வதவரத்தினி அம்மன் தரிசனம்



ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலுக்கு எதிரே உள்ள அக்னி தீர்த்தம் கடலில் நீராடி விட்டு பின்பு கோவிலுக்குள் உள்ள 22 புனித தீர்த்தங்களிலும் நீராடிய பின் ராமநாதசுவாமி - பர்வதவரத்தினி அம்மனை தரிசனம் செய்வது வழக்கமாக உள்ளது.

## மாணவர்கள் 21 பேர் முதல்முறையாக விமானத்தில் பயணம்

தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம் கொண்டலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 107 மாணவர்கள் படித்து வருகின்றனர். இப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் 21 பேர் முதல்முறையாக விமானத்தில் பயணம் செய்தார்கள். இவர்களுடன் ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் உட்பட தூத்துக்குடியில் இருந்து சென்னைக்கு இண்டிகோ விமானத்தில் பயணம் செய்தனர்.

## சர்வதேச விமான நிலையமாக அறிவிக்க ஒப்புதல்

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் கூடிய மத்திய அமைச்சரவை, தமிழ்நாட்டின் மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவிக்க ஒப்புதல் அளித்துள்ளது.

## வீட்டு உபயோக சிலிண்டர்களுக்கே முன்னுரிமை

நாடு முழுவதும் சிலிண்டர் விநியோகத்தில் தட்டுப்பாடு இருந்துவரும் சூழலில், பெங்களூருவில் ஓட்டல்கள் மூடப்பட்டுள்ளன. வீட்டு உபயோக சிலிண்டர்களுக்கே முன்னுரிமை என மத்திய அரசு அறிவித்துள்ளது.

இஸ்ரேல் ஈரான் அமெரிக்கா இடையேயான போரால் இந்தியாவில் கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வணிக சிலிண்டர் விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால் ஹோட்டல்களை உணவு மெனுவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் கொரோனா காலத்தில் கூட இப்படி ஒரு நெருக்கடியை எதிர்கொண்டதில்லை என கூறுகின்றனர் திண்டுக்கல் ஹோட்டல் உரிமையாளர்கள்.

# தீயணைப்பு துறை சார்பில் அரசு கல்லூரியில் பேரிடர் மேலாண்மை பயிற்சி..!

**வந்தவாசி, மார்ச் 11:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தீயணைப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் முனைவர் சித.ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். முனைவர் ர.மணி முருகன் வணிகவியல் துறைத்தலைவர் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலைய சிறப்பு அலுவலர் மு.பிரபாகரன் பங்கேற்று, தீவிபத்துகளில் இருந்து தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது மற்றும் விபத்தில் சிக்கிய நபர்களை எவ்வாறு பாதுகாப்பாக வெளிக் கொணர்வது என்பது குறித்தும், பாம்பு கடித்தால் எவ்வாறு முதலுதவி செய்வது என்பது குறித்தும் விரிவான தகவல்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் முனைவர் நா.மனோகரன் கணினி அறிவியல் துறைத் தலைவர், இரா.சுமதி ஆங்கில துறைத் தலைவர், முனைவர் ப.மோகனவள்ளி விலங்கியல் துறைத் தலைவர்(பொ), முனைவர் இரா.பெரியசாமி, இயற்பியல் துறைத் தலைவர் (பொ), முனைவர் ஏ.எழில் வசந்தன் தமிழ் துறைத் தலைவர், முனைவர் தா.சுகந்தி உயிர் வேதியியல் துறைத்தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர். கணிதத் துறை தலைவர் முனைவர் வ.சந்திரசேகரன் நன்றி கூறினார்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## சிறப்பு அலங்காரத்தில் ஸ்ரீமுத்துமாரியம்மன்.

திருமயம் அருகே உள்ள இளஞ்சாவூர் ஸ்ரீ முத்து மாரியம்மன் பூச்சொரிதல் விழாவை முன்னிட்டு நேற்று சிறப்பு அலங்காரத்தில் ஸ்ரீமுத்துமாரியம்மன்.

தென் தமிழக பகுதி களிலிருந்து கடலோர கர்நாடகா வரை வளிமண்டலத்தின் கீழடுக்கு பகுதியில் சுழற்சி நிலவி வருவதால், தமிழகத்தின் சில பகுதிகளில் வானிலையில் மாற்றம் ஏற்படக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## நெய்தீபம் ஏற்றி வேண்டுதல்

திருவள்ளூர் மாவட்டம் சிறுவாபுரியில் பிரசித்தி பெற்ற பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அமைந்துள்ளது. தொடர்ச்சியாக 6வாரங்கள் இங்கு வந்து நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் வேண்டுதல் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக இருந்து வருகிறது.

## விருதுநகர் தொகுதியில் விஜய பிரபாகரன்

விருதுநகர்: தேர்தல் பரபரப்பின் உச்சத்தை நோக்கி தமிழக அரசியல் களம் நகர்ந்து கொண்டிருக்கும் நிலையில், திமுக கூட்டணியில் ஐக்கியமாகியிருக்கும் தேமுதிக தான் எதிர்பார்க்கும் தொகுதிகளில் விருதுநகர் தொகுதியையும் லிஸ்டில் சேர்த்து இருக்கிறது. அதிலும் குறிப்பாக விருதுநகர் தொகுதியில் தேமுதிகவின் மாநில இளைஞரணி செயலாளர் விஜய பிரபாகரன் களமிறங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு வணிகர் சங்க பேரவை கோரிக்கை

தமிழகத்தில் உணவகம் மற்றும் தேநீர் கடை உள்ளிட்ட வணிக நிறுவனங்களுக்கு அனுப்பப்படும் 19 கிலோ உருளை சிலிண்டர் தட்டுப்பாடை போக்குவதற்கு மத்திய மாநில அரசுகள் உடனடியாக தலையிட்டு தீர்வு காண வேண்டும் என தமிழ்நாடு வணிகர் சங்க பேரவை தலைவர் டைமன் ராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

## சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

தமிழகம் முழுவதும் கொசுக்கள் உற்பத்தியை தடுக்க நடவடிக்கை எடுக்கக் கோரிய வழக்கில், தமிழக அரசு பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கியூ ஆர் கோடு

தமிழகம் உள்ளிட்ட 5 மாநிலங்களில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், கணக்கில் வராத பணப் புழக்கத்தைத் தடுக்க இந்தியத் தேர்தல் ஆணையம் புதிய டிஜிட்டல் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

தேர்தல் நடைபெறவுள்ள தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, அசாம் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில், வங்கிப் பணத்தைக் கொண்டு செல்லும் அனைத்து வாகனங்களிலும் இனி 'கியூஆர் கோடு' இருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பறிமுதல் மேலாண்மை அமைப்பின் மூலம் இந்த கியூஆர் கோடு உருவாக்கப்படும்.

## கேமராக்கள் அமைக்கும் பணி

ராமேஸ்வரத்தில் குற்றச் சம்பவங்களை தடுக்கும் விதமாக ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் ராமேஸ்வரம் தீவு முழுவதும் சுமார் 150க்கும் மேற்பட்ட கேமராக்கள் அமைக்கும் பணியினை ராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்திஷ் நேற்று துவக்கி வைத்தார். மேலும் ராமநாதபுரம் மாவட்டத்தில் கடத்தல் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் அவர்களை பிடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட எஸ்பி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## ஜெயலலிதாவின் 78-வது பிறந்தநாள் நிகழ்ச்சி

ராணிப்பேட்டை மாவட்டம் திருப்பாற்கடல் பகுதியில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78-வது பிறந்தநாள் நிகழ்ச்சி மாவட்ட அம்மா பேரவை பொருளாளர் மற்றும் தனஞ்செழியன் தலைமையில் திருப்பாற்கடல் ஊராட்சி மன்ற தலைவர் பிரியா தனஞ்செழியன் முன்னிலையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு அருகே முத்து கிருஷ்ணா புரம் கிராமத்தில் நெய்வேலி என்எல்சி நிறுவனம் தனது சுரங்கம் இரண்டு விரிவாக்க பணிகளை மேற்கொண்டு வருகிறது இந்த நிலையில் பல்வேறு கிராமங்களுக்கு முழுமையாக இழப்பீட்டுத் தொகையை என்எல்சி நிறுவனம் வழங்கி இருக்கும் நிலையில்.

இந்தியாவில் எரிபொருள் விநியோக நிறுவனங்கள் வணிக பயன்பாட்டிற்கான எரிவாயு சிலிண்டர் விநியோகங்களை நிறுத்தியுள்ளன. தமிழகத்தைப் பொறுத்தவரை பல்வேறு மாவட்டங்களில் வணிக பயன்பாட்டிற்கான எரிவாயு சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் உணவகங்கள் மூடப்படும் சூழ்நிலை இருப்பதாக ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## ரவுசு மணி

சரிக்கு சரி நிற்பதை விட சரி சரி என்றால் வாழ்க்கை வசந்தம் தான்

ராஜகோபாலன்.J
பெங்களூரு

# மண்டபம் முகாம் ஸ்ரீசித்தி விநாயகர் மாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம்

**மண்டபம், மார்ச். 10:** ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் முகாமில் அமைந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ சித்தி விநாயகர் மாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் கடந்த 5-ம் மாலை 6:30 மணியளவில் விக்னேஸ்வர, தன பூஜையுடன் தொடங்கியது.

6-ம் தேதி காலை 7:35 மணியளவில் கணபதி, நவக்கிரக ஹோமம், மாலை 5 மணியளவில் கும்ப அலங்காரம், முதல் கால யாக பூஜை நடந்தது. 7-ம் தேதி காலை 8:30 மணியளவில் 2 ஆம் கால யாக பூஜை, மாலை 6 மணியளவில் 3 ஆம் கால யாக பூஜை நடந்தது. நேற்று காலை 8 மணியளவில் 4 ஆம் கால யாக பூஜையும், அதனைத் தொடர்ந்து பூர்ணாஹீதி, தீபாராதனைகளும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து காலை 10:15 மணியளவில் கடங்கள் புறப்பாடாகி, காலை 11:15 மணியளவில் கோபுரக் கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதை தொடர்ந்து அம்பாள் டிரஸ்ட் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. சிவகங்கை மாவட்டம் பிள்ளையார்பட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் தலைமை அர்ச்சகர் பிச்சை சிவாச்சாரியார் தலைமையில் வேத விற்பனர்கள் கும்பாபிஷேகத்தை நடத்தினர்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் லட்சுமி மாலா, ஆய்வாளர் மணிவண்ணன், மண்டபம் முகாம் மறுவாழ்வு துறை தனித் துணை ஆட்சியர் சாந்தி, மண்டபம் பேரூராட்சித் தலைவர் ராஜா, துணைத் தலைவர் நம்புராஜன், அறங்காவலர் மோகன்ராஜ் சந்திரன், இறையருட்பணி சேவகர் கணேசன், நகர் திமுக., செயலர் அப்துல் ரஹ்மான் மரைக்காயர், திமுக., மீனவரணி துணை செயலர் ரவிச்சந்திர ராமவன்னி, இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் சம்பத்ராஜா, கல்வி புரவலர் சைவ. சரவணன், கவுன்சிலர்கள் சாதிக்பாட்ஷா, வாசிம் அக்ரம், முஹமது மீரா சாகிப், அதிமுக., தகவல் தொழில்நுட்ப அணி விருதுநகர் மண்டல துணை செயலர் எஸ்ஸார் அரவிந்த், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் மருதுபாண்டியன் உள்பட பலர் பங்கேற்றனர்.

லண்டன் ஆனந்த சேகர் குடும்பத்தார் கும்பாபிஷேகம், யாகசாலை திருப்பணி ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# சுற்றுலா: தமிழ்நாட்டில் பார்க்க வேண்டிய இடங்கள்

தமிழ்நாட்டில் உள்ள 15 பிரபலமான இடங்களின் சுருக்கமான பட்டியலைக் காணலாம் .

1. சென்னை

தென்னிந்தியாவின் அனைத்து சமூக, கலாச்சார, பொருளாதார, தொழில்துறை மற்றும் வணிக வளர்ச்சியின் மையமாக சென்னை எப்போதும் இருந்து வருகிறது. அருங்காட்சியகங்கள், கோயில்கள், கடற்கரைகள் மற்றும் பூங்காக்கள் போன்றபலசுவாரஸ்யமானஇடங்களைக் கொண்ட சென்னை, தமிழ்நாட்டில் அதிகம் பார்வையிடப்படும் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும்.

பார்க்க வேண்டிய இடங்கள்: விஜிபி கோல்டன் பீச், முட்டுக்காடு, எலியட் கடற்கரை, புலிகாட் ஏரி, அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா போன்றவை.

சென்னையில் செய்ய வேண்டியவை: புகைப்படம் எடுத்தல், ஷாப்பிங் செய்தல் மற்றும் உள்ளூர் உணவுகளில் ஈடுபடுதல்.

பார்வையிட ஏற்ற நேரம்: அக்டோபர் முதல் பிப்ரவரி வரை

சிறந்த விடுமுறை காலம்: 3-4 நாட்கள்

2. காஞ்சிபுரம்

காஞ்சிபுரத்தின் கோயில்கள் இந்த நகரத்தின் மீது திராவிட சகாப்தத்தின் வலுவான ஆதிக்கத்தை வெளிப்படுத்துகின்றன. இது விஷ்ணுவின் 14 புனித கோயில்களின் தாயகமாகும். கோயில்களைத் தவிர, காஞ்சிபுரம் அதன் கையால் நெய்யப்பட்ட பட்டு மற்றும் பாரம்பரிய கர்நாடக இசைக்கும் பெயர் பெற்றது.

பார்க்க வேண்டிய இடங்கள்: ஏகாம்பரேஸ்வரர் கோவில், திரு ஏகாம்பரநாதர் கோவில், கைலாசநாதர் கோவில், திருபரமேஸ்வர விண்ணகரம், மற்றும் காமாட்சி அம்மன் கோவில்

செய்ய வேண்டியவை: ஆராய்தல், ஷாப்பிங் செய்தல், பாரம்பரிய இசை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது போன்றவை.

பார்வையிட ஏற்ற நேரம்: அக்டோபர் முதல் மார்ச் வரை

சிறந்த விடுமுறை காலம்: 2 நாட்கள்

3. கன்னியாகுமரி

இந்திய தீபகற்பத்தின் முனையில் அமைந்துள்ள கன்னியாகுமரி, தமிழ்நாட்டில் பார்வையிட சிறந்த இடங்களில் ஒன்றாகும். இந்த நகரம் அரபிக் கடல், இந்தியப் பெருங்கடல் மற்றும் வங்காள விரிகுடா ஆகிய மூன்று நீர்நிலைகளுக்கு இடையில் அமைந்துள்ளது. ஒரே கடற்கரையில் சூரிய உதயம் மற்றும் சூரிய அஸ்தமனத்தின் அற்புதமான காட்சியை நீங்கள் காணலாம்.

பார்க்க வேண்டிய இடங்கள்: திருவள்ளுவர் சிலை, காந்தி நினைவிடம், பத்மநாபபுரம் அரண்மனை, உதயகிரி கோட்டை, விவேகானந்தர் பாறை நினைவகம்

செய்ய வேண்டியவை: புகைப்படம் எடுத்தல், இயற்கையை ஆராய்தல், முதலியன.

பார்வையிட ஏற்ற நேரம்: அக்டோபர் முதல் மார்ச் வரை

சிறந்த விடுமுறை காலம்: 2 நாட்கள்

4. கொடைக்கானல்

தமிழ்நாட்டின் பல நகரங்களை விட கொடைக்கானல் ஒப்பீட்டளவில் வணிகமயமாக்கப்படவில்லை. அதன் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்க ஏராளமான அழகிய இயற்கை ஈர்ப்புகளைக் கொண்டுள்ளது. மேல் பழனிமலைகளின் தெற்கு முனையில் 7000 அடி உயரத்தில் அமைந்துள்ள கொடைக்கானல், புதுமணத் தம்பதிகளுக்கு தமிழ்நாட்டில் ஒரு பிரபலமான சுற்றுலாத் தலமாகும்.

பார்க்க வேண்டிய இடங்கள்: கோக்கர்ஸ் வாக், சில்வர் கேஸ்கேட் நீர்வீழ்ச்சி, கொடைக்கானல் ஏரி, கரடி ஷோலா நீர்வீழ்ச்சி, குறிஞ்சி ஆண்டவர் கோயில்.

பார்வையிட ஏற்ற நேரம்: அக்டோபர் முதல் ஜூன் வரை

5. மதுரை

மதுரைக்கு வரும் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் நகரம் முழுவதும் காணப்படும் பழங்கால கோயில்களைப் பார்வையிட இங்கு வருகிறார்கள். வைகை நதியின் வளமான நிலங்களைச் சுற்றிகட்டப்பட்ட மதுரை, விவசாய நடவடிக்கைகளுக்கு ஒரு சிறந்த இடமாக செயல்படுகிறது. மதுரை கோயில்களில், நீங்கள் அதிர்ச்சியூட்டும் கட்டிடக்கலை மற்றும் சிக்கலான சிற்பங்களைக் காணலாம்.

பார்க்க வேண்டிய இடங்கள்: மீனாட்சி கோயில், திருமலை நாயக்கர் மஹால், மேகமலை, சமணர் மலைகள் மற்றும் கூடல் அழகர் கோயில்

6. ஊட்டி

தமிழ்நாட்டின் சிறந்த சுற்றுலா தலங்களில் ஒன்றான ஊட்டி, நீலகிரி மலைகளில் அமைந்துள்ளது. மலைகள் மற்றும் பசுமையின் மூச்சடைக்கக்கூடிய காட்சி ஊட்டியை "மலைவாசஸ்தலங்களின் ராணி" ஆக்குகிறது. விரைவான வார இறுதிப் பயணம் அல்லது காதல் விடுமுறைக்கு இது ஒரு சரியான இடமாகும்.

ஊட்டியை சுற்றிப் பார்க்க, நீங்கள் ஒரு பொம்மை ரயில் பயணத்தைத் தேர்வுசெய்யலாம். இந்த ரயில் மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்கு இயக்கப்படுகிறது.

பார்க்க வேண்டிய இடங்கள்: ஊட்டி ஏரி, ரோஜா தோட்டம், டைகர் ஹில், தாவரவியல் பூங்கா மற்றும் செயிண்ட் ஸ்டீபன் தேவாலயம்.

7. சிதம்பரம்

சிதம்பரம் வரலாற்று மற்றும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களைக் கொண்டுள்ளது. சிதம்பரத்தில் உள்ள பஞ்சபூத ஸ்தலங்கள் இந்தியாவின் மிகப்பெரிய கோயில் வளாகங்களில் ஒன்றாகும். இந்த கோயிலில் இந்த பிரபஞ்சத்தின் ஐந்து முக்கிய கூறுகளான நீர் (திருவணைக்கா), விண்வெளி (சிதம்பரம்), காற்று (காளஹஸ்தி), பூமி (காஞ்சிபுரம்) மற்றும் நெருப்பு (திருவண்ணாமலை) ஆகியவற்றைக் குறிக்கும் பிரமாண்டமான கோபுரங்கள் உள்ளன.

பார்க்க வேண்டிய இடங்கள்: திருக்கழிப்பாலை பால்வண்ணநாதர் கோயில், கோவிந்தராஜப் பெருமாள் கோயில், தில்லை நடராஜர் கோயில், பசுபதேஸ்வரர் கோயில், பிச்சாவரம் காயல் செய்ய வேண்டியவை: புகைப்படம் எடுத்தல், இயற்கை ஆய்வு, சுற்றிப் பார்ப்பது.

# வேலைவாய்ப்பு கார்னர்

## வங்கியில் 1100 பணியிடங்கள்

ஐ. டி.பி.ஐ., வங்கியில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'அசிஸ்டெண்ட் மேனேஜர்' பிரிவில் டில்லி 130, மும்பை 130, லக்னோ 85, பெங்களூரு 75, சென்னை 70 உட்பட மொத்தம் 1100 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பட்டப்படிப்பு

வயது: 20-25 (1.3.2026ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1050. எஸ்.சி.,/எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 250

கடைசிநாள்: 19.3.2026

விவரங்களுக்கு: idbi.bank.in

## உலோகவியல் நிறுவனத்தில் வேலை

உலோகவியல் இன்ஜினியரிங் கன்சல்டன்ட்ஸ் நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஜூனியர் இன்ஜினியர் மெக்கானிக்கல் 8, சிவில் 30, எலக்ட்ரிக்கல் 2, ஜூனியர் ஆபிசர் பிரிவில் எச்.ஆர்., 2, அட்மின் 2 என மொத்தம் 44 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: டிப்ளமோ / பட்டப்படிப்பு

வயது: 18-50 (5.4.2026ன் படி)

தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1000. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 31.3.2026

விவரங்களுக்கு: meconlimited.co.in

# சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு உரிமம் பெற்ற 2,364 துப்பாக்கிகளை திரும்ப ஒப்படைக்க வேண்டும்: காவல் ஆணையர் உத்தரவு

**சென்னை, மார்ச் 11:**

சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, உரிமம் பெற்ற 2,364 துப்பாக்கிகளை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என, காவல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, சென்னை காவல் ஆணையர் அருண் செய்தியாளர்களிடம் கூறியதாவது: சட்டப்பேரவை தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. அதற்கு முன்னரே தேர்தல் பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளில் சென்னை காவல்துறை ஈடுபட்டுள்ளது.

அனுமதி பெற்று வைத்துள்ள 2,364 துப்பாக்கிகளை உடனடியாக திரும்ப ஒப்படைக்க சம்மந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிட்டுள்ளோம். காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உட்பட சென்னை காவல் எல்லைக் குட்பட்ட பகுதிகளில் 24 சட்டப்பேரவை தொகுதிகள் வருகிறது. அவற்றில் 5,445 வாக்குச்சாவடிகள் உள்ளன. இவற்றில் 1,077 பதற்றமானவை. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிசிடிவி கேமரா பொருத்தப்பட உள்ளது. சென்னையில் 5,055 ரவுடிகள் உள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் சிறையில் உள்ளனர். இவர்களில் 2,300 ரவுடிகளிடம் எந்த குற்றமும் செய்ய மாட்டோம் என எழுதி வாங்கி உள்ளோம். இந்த உறுதிமொழியை மீறினால் பிணையில் வெளிவர முடியாதபடி சிறையில் அடைக்கப்படுவர். பல ரவுடிகள் சென்னைக்குள் நுழையாதபடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வதந்தி, அவதூறு, உண்மைக்கு புறம்பான தகவல்கள் பரப்பப்படுவதை தடுக்க சமூக வலைதளங்களை உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம். ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்படும் பணத்தை பறிமுதல் செய்ய 56 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளது. அவர்களுடன் ஒருங்கிணைந்து போலீஸார் பணியாற்று வார்கள். சென்னையில், இதுவரை 7 இடங்களில் மட்டுமே போராட்டம் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# எழும்பூர் நிலையத்தில் நவீன அடுக்குமாடி வாகன நிறுத்துமிடத்தை நிர்வகிக்க மின் ஏலம்: சென்னை ரயில்வே கோட்டம் அறிவிப்பு

**சேலம், மார்ச் 11:**

எழும்பூர் ரயில் நிலைய வளாகத்தில், நவீன அடுக்கு மாடி வாகன நிறுத்துமிடத்தை நிர்வகிப்பதற்கும், இயக்குவதற்குமான மின் ஏல அறிவிப்பை சென்னை ரயில்வே கோட்டம் வெளியிட்டுள்ளது.

எழும்பூர் ரயில் நிலையத்தின் மறுசீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பயணிகளின் வசதிக்காக இரண்டு பிரம்மாண்டமான பல்நோக்கு வணிக வளாக கட்டிடங்கள்கட்டப்பட்டுள்ளன.

காந்தி - இர்வின் சாலை மற்றும் பூந்தமல்லி சாலை ஆகிய இரு புறங்களிலும் அமைந்துள்ள இந்தக் கட்டிடங்களில் வணிக அங்காடிகள் மற்றும் நவீன அடுக்கு மாடி வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது, காந்தி-இர்வின் சாலைப் பகுதியில் உள்ள அடுக்கு மாடி கட்டிடத்தின் 2-வது, 3-வது மற்றும் 4-வது தளங்களில் வாகன நிறுத்துமிட வசதிகள் முழுமையாகத் தயார் நிலையில் உள்ளன.

இந்த நவீன வாகன நிறுத்துமிடத்தை நிர்வகிப்பதற்கும், இயக்குவதற்கும் தகுதியான நிறுவனங்களைத் தேர்வு செய்ய மின் ஏலம் மூலமாக விண்ணப்பங்களை வரவேற்கிறது.

ஒப்பந்தத்தைப் பெறும் நிறுவனம், வாகனங்களின் நுழைவு மற்றும் வெளியேற்றத்தை முறைப்படுத்துதல், வாகனங்களை வரிசையாக நிறுத்துவதை உறுதி செய்தல் மற்றும் அப்பகுதியைத் தூய்மையாகப் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த ஏல நடைமுறை அதிக அளவிலான நிறுவனங்கள் பங்கேற்பதை உறுதி செய்யவும் மற்றும் வெளிப்படைத்தன்மையைப் பேணவும் 'இ-ஏல' (e-auction) முறையில் நடைபெறவுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தகுதியுள்ள அதிகபட்ச ஏலத்தொகை கோரும் விண்ணப்பதாரருக்கு இந்த ஒப்பந்தம் வழங்கப்படும்.

இந்த ஏல நடைமுறை, முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் www.ireps.gov.in என்ற இணையதளம் வாயிலாக மார்ச் 20-ம் தேதி மாலை 03.30 மணிக்கு நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் இது குறித்த விரிவான விவரங்கள் மற்றும் தகுதி வரம்புகளை மேற்கண்ட இணையதளத்தில் அல்லது கோட்ட ரயில்வே மேலாளர் அலுவலகம், வணிகப் பிரிவு, 2-வது தளம், என் ஜிஒ அனெக்ஸ், பார்க் டவுன், சென்னை - 600003 என்ற முகவரியில் நேரில் தொடர்புகொண்டு தெரிந்துகொள்ளலாம்.

# விளையாட்டு விடுதி மாணவர்கள் 2,600 பேருக்கு உபகரணங்கள்: துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்

**சென்னை, மார்ச் 11:**

பயிற்சியின்போது காயம் ஏற்படும் அபாயத்தை குறைக்கும் வகையில் ரூ.39.59 லட்சம் செலவில் 2,600 விடுதி மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று நடைபெற்ற விழாவில், விளையாட்டு விடுதிகளில் டிஜிட்டல் சாதனங்கள் மூலம் பயிற்றுநர்கள் மற்றும் வீரர், வீராங்கனைகள் மேலாண்மை அமைப்பை உபயோகித்தல் மற்றும் வலுப்படுத்துதல் தொடர்பான பயிற்சியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

மேலும், விளையாட்டு வீரர் களின் தினசரி பயிற்சி தேவைகள், மறு சீராக்கம் மற்றும் முழுமையான உடல் நலத்தை மேம்படுத்தும் வகையில் விளையாட்டு விடுதிகளில் தங்கி பயிற்சி பெற்றுவரும் 2,600 மாணவர்களுக்கு ரூ.71.15 லட்சம் மதிப்பில் சாம்பியன்ஸ் கிட்களையும் துணை முதல்வர் வழங்கினார். அதோடு இந்த ஆண்டு புதிதாக விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்பட்டுள்ள 950 பேருக்கு ரூ.20.10 லட்சம் மதிப்பில் ஸ்மார்ட் வாட்சுகளையும் வழங்கினார். இந்த ஸ்மார்ட் வாட்ச் மூலம் மாணவர்கள் தங்கள் பயிற்சியின் அளவுகள், மறு சீராக்க நிலை மற்றும் தினசரி செயல்பாடுகளைக் கண்காணிக்க முடியும்.

மேலும், விளையாட்டு வீரர்கள் கடுமையான பயிற்சி மேற்கொள்ளும்போது காயம் ஏற்படும் அபாயத்தை குறைக்கும் வகையில் ரூ.39.59 லட்சம் செலவில் 2,600 விடுதி மாணவர்களுக்கு ஸ்போர்ட்ஸ் சயின்ஸ் உபகரணங்களை துணை முதல்வர் வழங்கினார்.

# ரயில்களில் காணாமல் போன ரூ.62.91 லட்சம் மதிப்புள்ள 205 செல்போன்கள் பயணிகளிடம் ஒப்படைப்பு

**சென்னை, மார்ச் 11:**

ரயில் பயணிகளிடம் காணாமல் போன ரூ.62.91 லட்சம் மதிப்புள்ள 205 செல்போன்களை, ரயில்வே பாதுகாப்பு படை ஒப்படைத்துள்ளது. மத்திய தொலை தொடர்பு துறையில், ரயில்வே பாதுகாப்பு படைக்கு (ஆர்பிஎஃப்) சில அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, ரயில்களில் காணாமல் போகும் பயணிகளின் செல்போன்களை உடனுக்குடன் மீட்டு, ஒப்படைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. பயணிகளிடம் திருடு அல்லது காணாமல் போன செல்போன்கள் குறித்து, ரயில்வே பாதுகாப்பு படை உரிய புகார்களை பெறும்.

இதையடுத்து, சென்ட்ரல் எக்யுப்மென்ட் ஐடென்டிட்டி ரிஜிஸ்டர் என்ற சிஇஐஆர் செயலியில், ரயில்வே பாதுகாப்பு படையினர் ஒருங்கிணைந்து செயல்பட்டு, காணாமல் போன செல்போன்களை மீட்டு பயணிகளிடம் ஒப்படைத்து வருகின்றனர்.

சென்னையில் திருடுபோன செல்போன்கள் புதுடெல்லி, ராஜஸ்தான் மேற்கு வங்கம், தெலங்கானா, ஆந்திரா மாநிலங்களில் இருந்து மீட்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், சமீபத்தில் மீட்கப்பட்ட 8 செல்போன்களை சம்பந்தப்பட்ட பயணிகளிடம், தெற்கு ரயில்வே ஆர்பிஎஃப் ஐஜி அருள்ஜோதி சென்னையில் நேற்று வழங்கினார்.

அதன்படி, கடந்த ஏப்ரல் முதல் தற்போது வரையில், ரூ.62.91 லட்சம் மதிப்புள்ள 205 செல்போன்கள் உரியவரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# தே.ஜ. கூட்டணிக்கு விஜய் வந்தால் 100% வெற்றி: ஜெகன்மூர்த்தி நம்பிக்கை

**திருவள்ளூர், மார்ச் 11:**

புரட்சி பாரதம் கட்சி தலைவர் ஜெகன்மூர்த்தி திருவள்ளூரில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: திமுகவின் பேச்சு, எதிர்க்கட்சியாக இருக்கும் போது ஒரு பேச்சாகவும், ஆளுங்கட்சியாக இருக்கும் போது ஒரு பேச்சாகவும் இருக்கிறது.கடந்த தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக கூட்டணியில் 4 தொகுதிகளை கேட்டு இறுதியாக 2 தொகுதிகளை கொடுங்கள் என்று கேட்டிருந்தோம். ஆனால் ஒரு தொகுதி தான் கொடுத்தார்கள். இந்த முறை 6 தொகுதிகளை கேட்டுள்ளோம். அதில், வேலூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய 4 மாவட்டங்களில் 4 தொகுதிகள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். பொதுத் தொகுதிகளை நாங்கள் கேட்கவில்லை. அத்தொகுதிகளை கொடுத்தால் போட்டியிடுவோம். அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளை மட்டுமே மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். யார் வந்தால் சரியாக இருக்கும் என்று மக்கள் தீர்மானிப்பார்கள். தேசிய ஜனநாயக கூட்டணிக்கு தமிழக வெற்றிக் கழகம் வந்தால், தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 100 சதவீதம் வெற்றி பெறும். தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு தமிழகவெற்றிக் கழகம் வரவில்லை என்றாலும், ஆட்சி அமைக்கும் அளவுக்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி கண்டிப்பாக வெற்றி பெறும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு இபேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# 6,689 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.215 கோடி ஊக்கத்தொகை: தமிழக அரசு

**சென்னை, மார்ச் 11:**

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது,

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் இளைஞர்களை ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுத்திடவும், சிதறிக் கிடக்கும் இளைஞர்களின் ஆற்றல்களை திரட்டிடவும், அவர்களை மனஉறுதி படைத்தவர்களாகவும், எதிர்கால வாழ்வை நம்பிக் கையோடு எதிர்கொள்பவர்களாகவும், உருவாக்கும் பெரும் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சிறப்பான பணிகளுக்கு ஊக்கமளித்து வருகிறார்கள்.

கடந்த 5 ஆண்டுகளில் விளையாட்டு மேம்பாட்டுத்துறை பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. செஸ் ஒலிம்பியாட், சென்னை பார்முலா4 கார்பந்தயம், சர்வதேச பெண்கள் டென்னிஸ், உலகக் கோப்பை ஸ்கு வாஷ், ஆசிய ஆக்கி சாம்பியன்ஷிப், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு, சர்வதேச அலைச்சறுக்கு, முதல்-அமைச்சர் கோப்பை உள்ளிட்ட போட்டிகளை நடத்தி உலக அளவில் விளையாட்டு ஆர்வலர்களிடையே தமிழ்நாடு ஒரு முக்கிய விளையாட்டு

களமாக மதிக்கப்படுகிறது.

போட்டிகளில் ஆர்வமுடன் பங்கேற்கும் வீரர்களுக்கு பயிற்சிகள் பெற உதவித் தொகை, தங்குமிடம் வசதி, போட்டிகளில் பங்கேற்க வெளியூர்களுக்கு சென்று வரும் பயணச் செலவுகள், வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பரிசுகள், ஊக்கத்தொகைகள் அனைத்தும் போட்டிகளுக்கு ஏற்ப வழங்கப்படுகிறது.

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டு போட்டிகளில் பதக்கம் வென்ற மாற்றுத்திறனாளி வீரர்கள் உள்பட 6,689 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.215.78 கோடி ஊக்கத்தொகையாக வழங்கி பாராட்டப்பட்டுள்ளது.

மேலும் விளையாட்டு வீரர்களுக்கு அரசு வழங்கும் 3 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ் 70 மாற்றுத்திறனாளி உள்ளிட்ட 301 வீரர்களுக்கு அரசு, பொதுத்துறை நிறுவனங்களில் பணிநியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. வேறு எந்த மாநிலத்திலும் நடைபெறாத வகையில் கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் திராவிட மாடல் அரசின் முனைப்பால் 40 சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டதன் மூலம் இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழ்நாடு திகழ்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### டி20 உலகக் கோப்பை பட்டம் வென்ற இந்திய அணிக்கு ரூ.131 கோடி பரிசு: பிசிசிஐ அறிவிப்பு

**மும்பை, மார்ச் 11:**

கடந்த 8-ம் தேதி அன்று அகமதாபாத் நகரில் உள்ள நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்தில் நியூஸிலாந்து அணியை இறுதிப் போட்டியில் 96 ரன்களில் வீழ்த்தியது சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்திய அணி. இதன் மூலம் டி20 உலகக் கோப்பையை மூன்றாவது முறையாக வென்ற முதல் அணி, கோப்பையை அடுத்தடுத்த தொடர்களில் தக்கவைத்த முதல் அணி, சொந்த மண்ணில் பட்டம் வென்ற முதல் அணி என்ற வரலாற்று சாதனையை இந்தியா படைத்தது.

"இந்த வெற்றியின் மூலம் ஐசிசி ஆடவர் டி20 உலகக் கோப்பையை மூன்று முறை வென்ற முதல் அணியாக இந்தியா அறியப்படுகிறது. இதன் மூலம் டி20 கிரிக்கெட் பார்மெட்டில் வெற்றிகரமான அணி என்பதை இந்தியா நிரூபித்துள்ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் தரப்பில் அணி வீரர்கள், பயிற்சியாளர் என அனைவருக்கும் வாழ்த்துகள்" என பிசிசிஐ செயலாளர் தேவஜித் சைகியா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அதில் தான் ரூ.131 கோடி பரிசுத் தொகை குறித்த அறிவிப்பு இடம்பெற்றுள்ளது. முன்னதாக, பிசிசிஐ தலைவர் மிதுன் மனாஸ் அணிக்கு வாழ்த்து தெரிவித்திருந்தார். இந்த ரூ.131 கோடியை உலகக் கோப்பை வென்ற அணியில் இடம்பெற்ற 15 வீரர்கள் ஒவ்வொருக்கும் தலா ரூ.6 கோடி கிடைக்கும். அது போக மீதமுள்ள ரூ.41 கோடி பயிற்சியாளர் குழு மற்றும் அணியின் இதர குழுவினருக்கு வழங்கப்படும். கடந்த 2024-ல் ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி டி20 உலகக் கோப்பை சாம்பியன் பட்டம் வென்றது. அப்போது அணிக்கு ரூ.125 கோடி பரிசுத் தொகை வழங்கப்பட்டது. அந்த தொகையை கொண்டு அணியில் இடம்பெற்ற வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.5 கோடி வழங்கப்பட்டது.

### சஞ்சு சாம்சன் அதிரடிக்காக கடை ஊழியர்களுக்கு ரூ.1.64 லட்சம் வழங்கிய கேரள தொழிலதிபர்

**கொச்சி, மார்ச் 11:**

ஐசிசி டி20 உலகக் கோப்பை தொடரின் இறுதிப் போட்டியில் நேற்று முன்தினம் நியூஸிலாந்து அணியை 96 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தது. இந்திய அணியின் தொடக்க வீரரான சஞ்சு சாம்சன் 46 பந்துகளில் 89 ரன்கள் விளாசி அசத்தினார். இந்நிலையில் கேரள மாநிலம் கோட்டயத்தை சேர்ந்த ஆடை தொழிலதிபரான நித்தின் பாபு என்பவர், சஞ்சு சாம்சனின் ஆட்டத்தால் உற்சாகம் அடைந்ததுடன் அதனை வித்தியாசமான முறையில் கொண்டாடி உள்ளார். அவரது உற்சாகம் விரைவில் தாராள மனப்பான்மையின் செயலாக மாறியது. தனது இரண்டு துணிக்கடைகளில் பணிபுரியும் 82 ஊழியர்களுக்கும் தலா ரூ.2 ஆயிரம் பரிசு வழங்குவதாக அறிவித்தார். இந்த வகையில் அவர், மொத்தம் ரூ.1.64 லட்சம் வழங்கி உள்ளார். சஞ்சு சாம்சன் சூப்பர் 8 சுற்றில் மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிராக 97 ரன்கள் விளாசிய போது நித்தின் பாபு தனது ஊழியர்கள் 62 பேருக்கு தலா ரூ.500 வழங்கி உள்ளார். மேலும் அரை இறுதியில் இங்கிலாந்துக்கு எதிராக சாம்சன் 89 ரன்கள் அடித்த போது தனது ஊழியர்கள் 62 பேருக்கு தலா ரூ.1,000 என ரூ.62 ஆயிரம் வழங்கி உள்ளார்.

# சிலிண்டர் விநியோகத்தில் தட்டுப்பாடு.? - பிபிசிஎல் நிறுவனம் விளக்கம்

**சென்னை, மார்ச் 11:**

இஸ்ரேல் - ஈரான் இடையே நடைபெற்று வரும் போர் காரணமாக சமையல் எரிவாயு விநியோக சங்கிலி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, ஓட்டல் சேவைகள் பெருமளவில் முடங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

பல முன்னணி ஓட்டல்களிலும் இன்று ஒரு நாளைக்கு மட்டுமே கையிருப்பு உள்ளதாக கூறப்படுகிறது. உடனடியாக விநியோகம் சீரடையாவிட்டால், இன்றுடன் கடையை மூட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என அதன் உரிமையாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி பிரதமர் மோடி மற்றும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு சென்னை ஓட்டல்கள் சங்கம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சிலிண்டர் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு குறித்து பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் விளக்கம் அளித்துள்ளது.

அதன் விபரம் பின்வருமாறு;

"தமிழ்நாட்டில் வீட்டுப் பயன்பாட்டு சிலிண்டர் விநியோகத்தில் எந்த சிக்கலும் இல்லை. வணிக சிலிண்டர்களில் மட்டுமே தட்டுப்பாடு நிலவுகிறது. ஒரு முறை பதிவு செய்து, 25 நாட்கள் பிறகே மீண்டும் சிலிண்டருக்கு பதிவு செய்யும் வகையில் நடைமுறை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கையிருப்பு உள்ள சிலிண்டர்களை மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிலையங்களில் உள்ள உணவகங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது."

இவ்வாறு தெரிவித்துள்ளது.

# 7 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள்: முதல்-அமைச்சர் திறந்து வைத்தார்

**சென்னை, மார்ச் 11:**

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

பதிவுத்துறை வாயிலாக மக்கள் தங்கள் சொத்துக்களின் மீதான உரிமையை தமது பெயரில் பதிவு செய்தல், திருமணத்தைப் பதிவு செய்தல், சங்கங்கள், சீட்டுகள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களை பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பதிவுத்துறை செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

வணிகவரி மற்றும் பதிவுத்துறை மானியக் கோரிக்கையில் புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, கோயம்புத்தூர் மாவட்டம் கிணத்துக்கடவு மற்றும் சூலூர், தூத்துக்குடி மாவட்டம் ஏரல், விழுப்புரம் மாவட்டம் -திருவெண்ணைநல்லூர், திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி, திருப்பத்தூர் மாவட்டம் - 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் என மொத்தம் 14 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் பதிவுத்துறைக்கு கட்டடப்பட்டுள்ள 7 புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களை தமிழ்நாடு முதல்-அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

சர்க்கார்சாமக்குளம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய இடங்களில் புதியதாக உருவாக்கப்பட்ட 2 சார்பதிவாளர் அலுவலகங்களை திறந்து வைத்தல், 2025-2026 ஆம் ஆண்டிற்கான வணிகவரி மற்றும் பதிவுத்துறை மானியக் கோரிக்கையின் அறிவிப்பை தொடர்ந்து கோயம்புத்தூர் (வடக்கு) பதிவு மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள 14 கிராமங்களில் 6 கிராமங்களை பிரித்து அந்த 6 கிராமங்களை உள்ளடக்கி கோயம்புத்தூர் (வடக்கு) பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட சர்க்கார்சாமக்குளம் சார்பதிவாளர் அலுவலகம்;

தருமபுரி பதிவு மாவட்டம், பாலக்கோடு சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 12 கிராமங்கள், பென்னாகரம் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2 கிராமங்கள், தருமபுரி (மேற்கு) சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 5 கிராமங்கள் மற்றும் தருமபுரி 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 3 கிராமங்கள் பிரித்து மொத்தம் 22 கிராமங்களை உள்ளடக்கி தருமபுரி பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட பாப்பாரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றினை முதல்-அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படுவதன் மூலம் பொதுமக்களுக்கு விரைவான மற்றும் சிறப்பான சேவைகளை அளிக்க இயலும். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமையல் எரிவாயு சிலிண்டர் வாங்க 25 நாள்கள் கால இடைவேளை!

**சென்னை, மார்ச் 11:**

ஒரு சமையல்எரிவாயு சிலிண்டர் முன்பதிவு செய்வதற்கான கால இடைவெளி, 21 நாள்களிலிருந்து 25 நாள்களாக உயர்த்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மேற்காசிய போர் நிலவரம் காரணமாக கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ள சூழலில், சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவுக்கு கட்டுப்பாடு

உள்ளிட்ட பல்வேறு அவசரகால நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக, மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி தலைமையில் தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்ற உயர்நிலைக் குழு ஆய்வுக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

முன்னதாக, சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவு 21 நாள்கள் இடைவெளியில் அனுமதிக்கப்பட்ட நிலையில், தற்போது 25 நாள்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி, சிலிண்டர் விநியோகிக்கப்பட்ட 25 நாள்களுக்குப் பிறகே அடுத்த முன்பதிவை இனி செய்ய முடியும் என்ற சூழல் உருவாகியுள்ளது.

போர் காரணமாக மேற்காசியாவில் இருந்து கப்பல்கள் மூலம் கச்சா எண்ணெய், எரிவாயு கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் ஹோர்முஸ் நீரிணை கடல் வழித்தடத்தை மூடிவிட்டதால், வேறு வழித்தடங்கள் வழியில் கச்சா எண்ணெய்யை பெறுவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## க்ரைம் கார்னர்

### டெல்லியில் மணிப்பூர் பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு; 7-ம் வகுப்பு மாணவர் உள்பட 4 சிறுவர்கள் கைது

**புதுடெல்லி, மார்ச் 11:**

தலைநகர் டெல்லியில் உள்ள மால்வியா நகர் பகுதியில் உள்ள பூங்காவிற்கு, கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் மணிப்பூரை சென்ற இளம்பெண் ஒருவர் தனது தோழியுடன் சென்றுள்ளார். அவர்கள் இருவரும் தங்கள் செல்போனில் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு நின்றிருந்த சிறுவர்கள் சிலர், மணிப்பூர் பெண்ணை நோக்கி ஆபாசமான வார்த்தைகளை கூறி பாலியல் ரீதியாக தொந்தரவு செய்துள்ளனர். இதனால் அதிர்ச்சியடைந்த அந்த பெண், அந்த சிறுவர்களை தட்டிக் கேட்டுள்ளார். அப்போது அந்த சிறுவர்கள் மணிப்பூர் பெண்ணின் தோற்றத்தை வைத்து இன ரீதியான வசைச் சொற்களை கூறி இழிவுபடுத்தியுள்ளனர். இதையடுத்து இளம்பெண்ணும் அவரது தோழியும் அந்த இடத்தை விட்டு நகர்ந்து செல்ல முயன்றனர். ஆனால் அந்த சிறுவர்கள் இருவரையும் பிடித்து கீழே தள்ளிவிட்டு, அவர்களை தாக்கத் தொடங்கியுள்ளனர். மேலும், அங்கிருந்த ஒரு சிறுவன் தனது இடுப்பில் கட்டியிருந்த பெல்ட்டை கழற்றி, மணிப்பூர் பெண்ணை அடித்துள்ளார். இதில் அந்த பெண்ணின் முகம் மற்றும் காதில் காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்தது. அந்த பெண்கள் இருவரும் தங்களை விட்டுவிடுமாறு சிறுவர்களிடம் கெஞ்சியுள்ளனர். ஆனால் அவர்கள் விடாமல் அப்பெண்களை தாக்கியுள்ளனர். இதற்கிடையில், இந்த சம்பவம் குறித்து அங்கிருந்தவர்கள் காவல்துறைக்கு தகவல் தெரிவித்த நிலையில், போலீசார் அங்கு விரைந்து வந்தனர். அதற்குள் அந்த சிறுவர்கள் அங்கிருந்து தப்பி சென்றுவிட்டனர். பின்னர் காயமடைந்த பெண்களை போலீசார் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அந்த பெண்கள் அழித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திய போலீசார், பெண்களுக்கு பாலியல் தொந்தரவு அளித்த 7-ம் வகுப்பு மாணவர் உள்பட 4 சிறுவர்களை அதிரடியாக கைது செய்தனர். அதில் 3 பேர் பள்ளி படிப்பை பாதியில் விட்டவர்கள் என்று தெரியவந்துள்ளது. மேலும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

### வங்கியில் போலி நகைகளை அடகு வைத்து ரூ.2 கோடி மோசடி: நகை மதிப்பீட்டாளர் கைது

கன்னியாகுமரி மாவட்டம், வடசேரி டென்னிசன் சாலையில் இயங்கி வரும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் முதன்மை மேலாளர் சுப்பிரமணியன் (வயது 46), தனது கண்காணிப்பில் உள்ள வங்கிக் கிளைகளில் ஆய்வு செய்தபோது நகை மோசடி நடந்தது தெரியவந்தது.

இதனை தொடர்ந்து அந்த வங்கியில் தற்காலிக நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்த கீழக்கல்குறிச்சியைச் சேர்ந்த ரகுவரன்(36) என்பவர், மற்றவர்களின் பெயரில் போலி நகைகளை அடகு வைத்து ரூ.2 கோடி வரை மோசடி செய்தது சோதனையில் உறுதி செய்யப்பட்டது. இதுகுறித்து வங்கியின் முதன்மை மேலாளர் அளித்த புகாரின் பேரில், வடசேரி போலீசார் வழக்குப்பதிவு செய்து ரகுவரனைத் தேடி வந்த நிலையில் கைது செய்தனர். மோசடி செய்யப்பட்ட பணத்தை மீட்பதற்கான நடவடிக்கைகளில் காவல்துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

### திருவள்ளூர், செங்குன்றம் பகுதிகளில் சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேசத்தவர் 5 பேர் கைது

திருவள்ளூர்: சென்னை தீவிரவாத தடுப்பு பிரிவு இன்ஸ்பெக்டர் அருண்பாண்டியன் உள்ளிட்ட போலீஸார் நேற்று வேப்பம்பட்டு பகுதியில் வங்க தேசத்தைச் சேர்ந்த வாஸிம் அக்ரம் (24). எம்டி மசரூல்(20) கடந்த சில மாதங்களாக உரிய அனுமதியின்றி, கட்டுமான பணிகளில் ஈடுபட்டு வந்ததும், அவர்கள் உரிய அனுமதியின்றி பெங்களூரு மற்றும் சென்னையில் ஏற்கெனவே பணிபுரிந்து வந்ததும் தெரிந்தது. அதே போல். கிராண்ட்லைன் செல்வவிநாயகர் நகர் பகுதியில் வங்கதேசத்தைச் சேர்ந்த ஜோரூல் இஸ்லாமோ (36), சஹால் இஸ்லாம் (26), ஹேரல் இஸ்லாம்(31) ஆகியோர் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக உரிய அனுமதியின்றி, சட்டவிரோதமாக தங்கி, கட்டுமான பணிகளில் ஈடுபட்டு வந்தது தெரிந்தது. இதையடுத்து வழக்குப் பதிவு செய்த செவ்வாப்பேட்டை மற்றும் செங்குன்றம் போலீஸார், வாஸிம் அக்ரம் உள்ளிட்ட 5 பேரை கைது செய்து சென்னை, புழல் சிறையில் அடைத்தனர்.

## வணிகச் செய்திகள்

### இந்திய ஏற்றுமதி ரூ. 92,300 கோடி வரை சரியும் அபாயம்!

**சென்னை, மார்ச் 11:**

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவிவரும் போர் பதற்றம் காரணமாக, இந்தியாவின் சரக்கு ஏற்றுமதி சுமார் 1,000 கோடி டாலர் (சுமார் ரூ.92,289 கோடி) வரை பாதிக்கப்படக்கூடும் என்று ஏற்றுமதியாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

மேற்கு ஆசியாவில் நிலவும் இந்தச் சூழல், ஏற்கெனவே இந்தியப் பொருள்களுக்கான ஆர்டர் குறைவு, கூடுதல் கப்பல் போக்குவரத்துச் செலவினம் எனப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. மத்திய கிழக்கு நாடுகள் இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி சந்தையாக விளங்கும் நிலையில், தற்போதைய பதற்றத்தால் அங்குள்ள வர்த்தகர்கள் பல ஆர்டர்களை ரத்து செய்து வருகின்றனர். குறிப்பாக, கடல்வழிப் பாதைகளில் நிலவும் நிச்சயமற்ற தன்மை மற்றும் விநியோகக் கால தாமதம் காரணமாக, மார்ச் மாத ஏற்றுமதி மற்றும் அடுத்த 2026-27-ஆம் நிதியாண்டின் ஒட்டுமொத்த வர்த்தக இலக்குகள் பாதிக்கப்படும் என்று தொழில் துறையினர் கவலை தெரிவிக்கின்றனர். சரக்கு போக்குவரத்து செலவினம் கடுமையாக உயர்ந்துள்ளது ஏற்றுமதியாளர்களுக்கு பெரும் சுமையாக மாறியுள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காக கப்பல்கள் மாற்றுப் பாதையில் இயக்கப்படுவதால், ஒவ்வொரு சரக்குப் பரிமாற்றத்துக்கும் 1,500 முதல் 4,000 டாலர் வரை கூடுதல் கட்டணத்தை கப்பல் நிறுவனங்கள் வசூலிக்கின்றன. இந்தக் கூடுதல் சுமையை முழுமையாக ஏற்றுமதியாளர்கள் மீது சுமத்தாமல், கப்பல் நிறுவனங்கள் அதனை முறைப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# நேஷனல் ஹெரால்ட் வழக்கு: அமலாக்கத் துறை மனு மீது ஏப். 20 இல் விசாரணை

**புதுடெல்லி, மார்ச் 11:**

நேஷனல் ஹெரால்ட் வழக்கில் அமலாக்கத்துறையின் மனுவை ஏப்.20-ஆம் தேதி தில்லி உயர்நீதிமன்றம் விசாரிக்க உள்ளது.

நேஷனல் ஹெரால்ட் விவகாரத்தில் அமலாக்கத் துறை தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையை தில்லி விசாரணை நீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது. இதுகுறித்து அந்த நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், 'நேஷனல் ஹெரால்ட் விவகாரம் தொடர்பாக சிபிஐ வழக்குப் பதிவு (எஃப்ஐஆர்) செய்யவில்லை. அவ்வாறு வழக்குப் பதிவு செய்வது பண முறைகேடு நடைபெற்றதா என்ற கோணத்தில் விசாரணை நடத்த வழிவகுக்கும்.

இதுபோல பதிவு செய்யப்பட்ட வழக்கை அடிப்படையாகக் கொள்ளாமல், தனிநபர் (பாஜக மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி) அளித்த புகாரின் அடிப்படையில்தான் அமலாக்கத் துறை விசாரணை நடைபெற்றுள்ளது. எனவே, அதன் குற்றப்பத்திரிகையை சட்டப்படி ஏற்க முடியாது' என்று தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக தில்லி உயர்நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தது.

இந்த மனு தொடர்பாக பதிலளிக்குமாறு காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி உள்ளிட்டோருக்கு ஏற்கெனவே உயர்நீதிமன்றம் நோட்டீஸ் பிறப்பித்தது.

இந்த மனுவை விரைந்து விசாரிக்க வேண்டும் என்று அமலாக்கத் துறை தரப்பில் உயர்நீதிமன்றத்தில் திங்கள்கிழமை கோரிக்கை விடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, அந்த மனு மீதான விசாரணை ஏப். 20-ஆம் தேதி நடைபெறும் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்தது.

## கச்சா எண்ணெய் விலை 130 டாலரை தாண்டாத வரை பெட்ரோல், டீசல் விலை உயராது: அரசு வட்டாரங்கள்

**புதுடெல்லி, மார்ச் 11:**

கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு 130 அமெரிக்க டாலரை தாண்டாத வரை இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயர வாய்ப்பில்லை என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே, ஈரான் போர் காரணமாக கச்சா எண்ணெய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, ஒரு பேரலின் விலை 120 டாலரை எட்டி உள்ளது கவனிக்கத்தக்கது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசு வட்டாரங்கள் கூறியது: இந்தியாவில் போதுமான அளவு இருப்பு இருப்பதால் எரிபொருள் விலை அதிகரிக்க வாய்ப்பில்லை. கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு 100 அமெரிக்க டாலர்களை எட்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இது 130 அமெரிக்க டாலரை எட்டாத வரை இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயர வாய்ப்பில்லை. நாட்டின் எந்த பங்க்கிலும் பெட்ரோல், டீசல் பற்றாக்குறை பிரச்சினை இல்லை. ஈரானின் ஹார்முஸ் ஜலசந்தி பாதையைத் தவிர வேறு இடங்களில் இருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் போதுமான அளவு விமான எரிபொருள் (AVIATION TURBINE FUEL-ATF) இருப்பு உள்ளது. இந்தியா ATF உற்பத்தியாளராகவும் ஏற்றுமதியாளராகவும் உள்ளது. எனவே, ATF குறித்து பீதி அடையத் தேவையில்லை. மற்ற நாடுகளைவிட இந்தியா சிறந்த நிலையில் உள்ளது.

மக்கள் 55 நாட்களுக்கு முன்பாகவே எல்பிஜி சிலிண்டரை முன்பதிவு செய்யும் காலம் இருந்தது. அது 15 நாட்களாக குறைந்த சம்பவங்களும் இருந்தன. எல்பிஜி எரிவாயு முன்பதிவு காலம் 21 நாட்களில் இருந்து 25 நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன. பதுக்கல் மற்றும் கள்ளச் சந்தைப்படுத்தலைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## டிஜிட்டல் கைது மோசடியில் சிக்கிய முன்னாள் நீதிபதி

**ஹைதராபாத், மார்ச் 11:**

தெலங்கானாவில் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி ஒருவர் டிஜிட்டல் கைது மோசடியில் சிக்கி ரூ.1 கோடிக்கு மேல் இழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து தெலங்கானா போலீஸார் நேற்று கூறுகையில், "மல்காங்கிரியை சேர்ந்த 69 வயது, ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி ஒருவருடன் டிஜிட்டல் மோசடி நபர்கள் ஒரு வாரத்திற்கு முன் தொடர்பு கொண்டுள்ளனர். பெண்கள் கடத்தல் மற்ற பிற குற்றச்செயல்களில் அவரது செல்போன் எண்ணுக்கு தொடர்பு இருப்பதாக கூறி அவரை மிரட்டியுள்ளனர். இதையடுத்து அவர்கள் கூறிய வங்கிக் கணக்குகளுக்கு ரூ.1 கோடிக்கு மேல் அந்த நீதிபதி பரிமாற்றம் செய்துள்ளார். பிறகுதான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அவர் 3 நாட்களுக்கு காவல்துறையிடம் புகார் அளித்துள்ளார். இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகிறோம்" என்று தெரிவித்தனர். சட்ட நடவடிக்கைகளை நன்கு அறிந்த ஒருவரே ஏமாறும் அளவுக்கு டிஜிட்டல் மோசடியில் தந்திரங்கள் பயன்படுத்தப்படுவதை இந்த சம்பவம் உணர்த்துகிறது. "பொதுவாக மோசடி நபர்களின் மிரட்டல்களுக்கு மக்கள் பயப்படுகின்றனர். இதுவே இந்த மோசடிகள் தொடர்வதற்கு காரணம்" என்றும் போலீஸார் கூறினர்.

# மாநிலங்களவை எம்.பி.க்களாக 7 மாநிலங்களில் 26 பேர் தேர்வு!

**புதுடெல்லி, மார்ச் 11:**

தேசியவாத காங்கிரஸ் (சரத்சந்திர பவார்) கட்சியின் தலைவர் சரத் பவார், மத்திய சமூக நீதித்துறை இணையமைச்சர் ராமதாஸ் அதாவலே உள்பட ஏழு மாநிலங்களிலிருந்து 26 பேர் மாநிலங்களவை எம்.பி.க்களாக போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மொத்தம் 10 மாநிலங்களில் காலியான 37 மாநிலங்களவை இடங்களில் போட்டியிடுவதற்கு 40 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர். இதில் தமிழகத்தில் 6 பேர், மகாராஷ்டிரத்தில் 7 பேர், மேற்கு வங்கத்தில் 4 பேர், அஸ்ஸாமில் 3 பேர், தெலங்கானாவில் இருவர் என மொத்தம் 26 பேர் போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதையடுத்து 37 இடங்களில் எஞ்சிய 11 இடங்களுக்கு மார்ச் 16-ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இந்த 11 இடங்களில் 5 இடங்கள் பிகாரில் உள்ளன. ஒடிஸாவில் 4 இடங்களும், ஹரியாணாவில் 2 இடங்களும் உள்ளன. இந்தத் தேர்தலில் பிகாரின் நீண்ட கால முதல்வரான நிதீஷ் குமார், பாஜக தேசிய தலைவர் நிதின் நபின் ஆகியோர் மாநிலங்களவை எம்.பி.க்களாக தேர்வு செய்யப்பட வாய்ப்புள்ளது.

பிகாரில் 20 ஆண்டுகளாக முதல்வர் பதவியில் உள்ள நிதீஷ் குமார், மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிட உள்ளதாக கடந்த வாரம் அறிவித்தார்.

பிகாரில் உள்ள இடங்களில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நிதீஷ் குமார், மத்திய விவசாயத் துறை இணையமைச்சர் ராம்நாத் தாக்குர், ராஷ்ட்ரீய லோக் மோர்ச்சா தலைவர் உபேந்திர குஷ்வாஹா, பாஜக மாநில பொதுச் செயலர் ஷிவேஷ் குமார் ஆகியோர் போட்டியிடுகின்றனர். ராஷ்ட்ரீய ஜனதா தளம் சார்பில் அமரேந்திர தாரி சிங் மீண்டும் போட்டியிடுவதால், அங்கு ஒரு மாநிலங்களவை இடத்துக்கு போட்டி இருக்கும் என்று கருதப்படுகிறது. இதேபோல ஒடிஸா மற்றும் ஹரியாணாவில் தலா ஓரிடத்தில் போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழ்நாட்டைப் பின்பற்றி புதுச்சேரியிலும் குடும்ப தலைவிகளுக்கு ரூ.5,000 வரவு வைப்பு

**புதுச்சேரி, மார்ச் 11:**

தமிழக அரசு சமீபத்தில் மகளிர் உரிமைத்தொகை மற்றும் கோடைக்கால நிவாரணமாக ரூ. 5,000 வழங்கியிருந்தது. அதேபோல் புதுச்சேரியிலும் வழங்க வேண்டும் என மக்கள் எதிர்பார்த்து அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இதனைப் பூர்த்தி செய்யும் வகையில், முதல்-மந்திரி ரங்கசாமி கவர்னருக்கு கோரிக்கை வைத்தார். அவரின் கோரிக்கையை ஏற்று ஆளுநர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். அதில்,

சிவப்பு நிற குடும்ப அட்டைகளுக்கு மார்ச், ஏப்ரல் என இரு மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய ரூ.2,500 உதவித் தொகையை சேர்த்து மொத்தமாக பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு நேரடி பணப் பரிமாற்றம் மூலம் செலுத்தப்படும். எந்தத் தடங்கலும் இன்றி, இடைத்தரகர்கள் தலையீடு இல்லாமல் நேரடியாகப் பெண்கள் தங்கள் தேவைகளுக்காக இந்தத் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, புதுச்சேரியில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள மாதாந்திர நிதியுதவித் திட்டத்தின் கீழ் ஒரு மாதத்திற்கு ரூ. 2,500 வழங்கப்படுகிறது. தற்போது தேர்தல் வரவுள்ளதால், அடுத்த இரண்டு மாதங்கள், அதாவது மார்ச் மற்றும் ஏப்ரல் தொகையைச் சேர்த்து மொத்தம் ரூ. 5,000 ஆக ஒரே தவணையில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 63,000 குடும்பத் தலைவிகள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறுவார்கள்.

# 'சர்வதேச கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பால் இந்தியாவில் விலைவாசி உயரவில்லை': நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் விளக்கம்

**புதுடெல்லி, மார்ச் 11:**

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தாலும், இந்தியாவின் பணவீக்கம் கட்டுக்குள்தான் உள்ளது. எனவே, அத்தியாவசியப் பொருள்களின் விலையில் எந்தத் தாக்கமும் ஏற்படாது என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

மக்களவையில் திங்கள்கிழமை இது தொடர்பான கேள்விக்கு எழுத்துமூலம் அளித்த பதிலில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

கடந்த ஓராண்டாக சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை குறைந்துதான் வந்துள்ளது. ஆனால், கடந்த மாத இறுதியில் மேற்காசியாவில் மோதல் தொடங்கியதால் விலை உயர்ந்தது. இந்தியாவில் பணவீக்கம் கட்டுக்குள் உள்ளது. எனவே, தற்போதைய கச்சா எண்ணெய் விலை உயர்வு அத்தியாவசியப் பொருள்களின் விலையில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு, கச்சா எண்ணெய் தேவையில் ஏற்படும் மாற்றம், கச்சா எண்ணெய்யை கொண்டுவருவதில் ஏற்படும் தடைகள், நிதிக் கொள்கை மாற்றங்கள் எனப் பல விஷயங்கள் நீண்டகாலத்தில் கச்சா எண்ணெய் விலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

நுகர்வோர் விலை அடிப்படையிலான பணவீக்கம் கடந்த இரு ஆண்டுகளாக குறைந்தே வந்துள்ளது. விலைவாசியைக் கட்டுக்குள் வைக்க அரசு பல தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதில், அத்தியாவசியப் பொருள்களின் கையிருப்பை அதிகரிப்பது, அரசு கையிருப்பு தானியங்களை பொதுச்சந்தையில் விற்பனைக்கு கொண்டு வருவது, தேவை ஏற்படும்போது இறக்குமதியை அதிகரிப்பது, ஏற்றுமதியை கட்டுப்படுத்துவது, அரசின் பாரத் பிராண்ட் பெயரில் மானிய விலையில் மக்களுக்கு பொருள்களை விற்பனை செய்வது, காய்கறி, வேளாண் பொருள் சந்தையில் அரசு தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்வது, எரிபொருள் வரி குறைப்பு, வேளாண் உற்பத்திப் பொருள்களுக்கான சேமிப்பு வசதிகளை அதிகரிப்பது உள்ளிட்டவை அடங்கும்.

இது தவிர மக்கள் தங்கள் வருமானத்தை முழுமையாகப் பயன்படுத்த வசதியாக வருமான வரி விலக்கு வரம்பு ரூ.₹12 லட்சம் வரை (சம்பளதாரருக்கு ரூ.12.75 லட்சம் நிலையான கழிவுடன்) உயர்த்தப்பட்டுள்ளது. சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) தேவைக்கு ஏற்ப மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## வளைகுடா நாடுகளில் 12-ம் வகுப்பு சி.பி.எஸ்.இ. தேர்வுகள் ஒத்திவைப்பு

**புதுடெல்லி, மார்ச் 11:**

ஈரான் நாட்டுக்கு எதிராக அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கியதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஈரானியர்கள் பலியாகி உள்ளனர். இதனால் மேற்காசியாவில் கடும் பதற்றம் காணப்படுகிறது.

இந்த மோதலை அடுத்து, வளைகுடா நாடுகளில் நடக்க இருந்த 10-ம் வகுப்புகளுக்கான சி.பி.எஸ்.இ. தேர்வுகள் ரத்து செய்யப்பட்டன. இந்த நிலையில், 12-ம் வகுப்புக்கான சி.பி.எஸ்.இ. தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டு உள்ளன என தகவல் வெளியாகி உள்ளது. ஏற்கனவே 12-ம் வகுப்புக்கு கடந்த 7-ந்தேதி நடக்க இருந்த தேர்வு ஒத்திவைக்கப்பட்டது. 7-ந்தேதி நிலைமையை பற்றி மறுஆய்வு செய்யப்படும். அதன்பின்னர் 9-ந்தேதி அன்று, அடுத்து நடைபெறவுள்ள தேர்வு பற்றிய அறிவிப்பு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், 12-ந்தேதி முதல் 16-ந்தேதி வரையிலான 12-ம் வகுப்புகளுக்கான சி.பி.எஸ்.இ. தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டு உள்ளன. 16-ந்தேதி முதல் நடைபெற உள்ள மீதமுள்ள தேர்வுகள் தொடர்பாக முடிவுகள் எடுப்பதற்கு முன், 14-ந்தேதி நிலைமையை மறுஆய்வு செய்வோம் என தேர்வு துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## 40 லட்சம் பெண்களுக்கு தலா ரூ.9 ஆயிரம் நேரடி பண பரிமாற்றம்

**கவுகாத்தி, மார்ச் 11:**

அசாமில் நடப்பு ஆண்டில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. அசாமில் முதல்-மந்திரி ஹிமந்த பிஸ்வா தலைமையில் பா.ஜ.க. ஆட்சி செய்து வருகிறது. இந்த நிலையில், மாநில அரசின் அருணோதய் சிறப்பு திட்டத்தின் கீழ் 4 மாதங்களுக்கு சேர்த்து, 40 லட்சம் பெண்களுக்கு அவர்களுக்கு வங்கி கணக்கிற்கு, தலா ரூ.9 ஆயிரம் வீதம் நேரடி பண பரிமாற்றம் செய்யப்படும் என அசாம் அரசு அறிவிப்பு வெளியிட்டது. பெண்களுக்கு அதிகாரமளித்தலின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது என முதல்-மந்திரி ஹிமந்த பிஸ்வா கூறினார். இதன்படி, மொத்தம் ரூ.3,600 கோடி இந்த திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இந்த திட்டத்தின்படி நாளை மார்ச் 10-ந்தேதி ஒரே நாளில் இந்த பணம் 40 லட்சம் பயனாளிகளை சென்றடைய உள்ளது.

## 'பெண்கள் ஆண்களை விட புத்திசாலிகள், தொலைநோக்குடன் சிந்திப்பார்கள்' - ராகுல் காந்தி

**திருவனந்தபுரம், மார்ச் 11:**

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி சமீபத்தில் கேரளாவில் மாணவிகளுடன் நடத்திய உரையாடலின் வீடியோவை தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார். அதில் ராகுல் காந்தி கூறியிருப்பதாவது:-

"நான் பெண்கள் தலைமை தாங்கிய குடும்பத்தில் வளர்ந்தவன். என் குடும்பத்தின் தலைவர் என் பாட்டி. என் குடும்பத்தில் எப்போதும் பெண்கள் தான் அதிக எண்ணிக்கையில் இருப்பார்கள். பொதுவாக, பெண்கள் ஆண்களை விட புத்திசாலிகள். ஆண்கள் அவசரக்காரர்கள். பெண்கள் தொலைநோக்குடன் சிந்திப்பார்கள். அவர்கள் நேரடி அதிகாரத்துக்கு பதிலாக, மறைமுக அதிகாரத்தை பயன்படுத்துவார்கள். அது பயனுள்ளதாக இருக்கும்."

இவ்வாறு அவர் கூறியுள்ளார். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பொதுச்செயலாளர் பிரியங்கா ஆகியோரும் மகளிர் தின வாழ்த்துசெய்தி வெளியிட்டுள்ளனர்.

## மும்பையில் இசை சாலையால் ஏற்பட்ட சிக்கல்: அமைதியை சீர்குலைப்பதாக பொதுமக்கள் புகார்

**மும்பை, மார்ச் 11:**

மும்பை ஒர்லியில் இருந்து நரிமன் பாயிண்ட் வரையில் செல்லும் கடற்கரை சாலையில் வாகன ஓட்டிகளின் சோர்வை தவிர்க்கவும், பாதுகாப்பான வேகத்தை உறுதிப்படுத்தவும் 'ஜெய் ஹோ' பாடல் இசைக்கும் வகையில் ரூ.6 கோடி செலவில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 'இசை சாலை' கடந்த மாதம் திறக்கப்பட்டது. வாகனங்கள் மணிக்கு 60 முதல் 70 கி.மீ வேகத்தில் செல்லும்போது மட்டுமே இந்த இசை ஒலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதே இசை சாலை ஜப்பான், ஹங்கேரி, தென்கொரியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற வெளிநாடுகளில் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

இந்த இசை சாலை அமைந்துள்ள பிரீச் கேண்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள், இதிலிருந்து வெளிவரும் சத்தம் தங்களுக்கு பெரும் தொந்தரவாக இருப்பதாக புகார் தெரிவித்துள்ளனர். இந்த தொடர் இரைச்சலால் அருகில் உள்ள குடியிருப்புகளில் வசிக்கும் முதியவர்கள், நோயாளிகள் மற்றும் குழந்தைகள் தூக்கமின்மையால் அவதிப்படுவதாக கூறியுள்ளனர். இதையடுத்து மாநகராட்சி கமிஷனர், அந்த பகுதியில் ஒலியின் அளவை ஆய்வு செய்ய நிபுணர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

## சமையல் எரிவாயு சிலிண்டருக்கு தட்டுப்பாடு: பெங்களூருவில் ஓட்டல்கள் வேலை நிறுத்தம்

**பெங்களூரு, மார்ச் 11:**

ஈரான் மீதான அமெரிக்கா-இஸ்ரேல் நாடுகளின் தாக்குதல் நீடித்து வருகிறது. இதனால் அரபு நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் வரத்து தடைபட்டுள்ளது. இந்தநிலையில் பெங்களூருவில் வணிக பயன்பாட்டுக்கான கியாஸ் சிலிண்டர் மற்றும் சமையல் கியாஸ் சிலிண்டர் விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டு உள்ளன. இதனால் சமையல் எரிவாயு சிலிண்டருக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் கர்நாடகா மாநிலம் பெங்களூரு மாநகரில் (செவ்வாய்க்கிழமை) முதல் ஓட்டல்கள் வேலை நிறுத்தம் தொடங்குவதாக பெங்களூரு மாநகர ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

# லெபனானில் தீவிரமடையும் இஸ்ரேலின் தாக்குதல்! மீண்டும் மக்கள் வெளியேற வலியுறுத்தல்!

**நியூயார்க், மார்ச் 11:**

லெபனானின் தெற்கு மாகாணங்களில் வசிக்கும் மக்கள் உடனடியாக வெளியேற வேண்டுமென இஸ்ரேல் ராணுவம் வலியுறுத்தியுள்ளது.

லெபனானின் ஹிஸ்புல்லா கிளர்ச்சிப்படைகளுக்கு எதிரான தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளதால், அந்நாட்டின் தெற்கு மாகாணங்களில் வசிக்கும் மக்கள் உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேல் ராணுவம் செவ்வாய்க்கிழமை (மார்ச் 10) அறிவித்துள்ளது.

இந்த நிலையில், ஹிஸ்புல்லா படைகளுக்கு எதிராக இஸ்ரேல் ராணுவம் வலுவான தாக்குதல்களை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், அங்கு வசிக்கும் லட்சக்கணக்கான மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்களில், கடந்த பிப். 28 அன்று ஈரானின் தலைமை மதகுரு ஆயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார். இதையடுத்து, ஈரானுக்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லா மற்றும் யேமனின் ஹவுதி கிளர்ச்சிப்படைகள் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன.

முன்னதாக, ஹிஸ்புல்லா படைகளுடன் கடந்த 2023 - 24 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற போரின்போது லெபனானில் வசித்த மக்கள் வெளியேற வேண்டுமென இஸ்ரேல் ராணுவம் அழைப்பு விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவுடன் இனி பேச்சுவார்த்தைக்கு இடமில்லை! - ஈரான் அரசு அறிவிப்பு!

**தெஹ்ரான், மார்ச் 11:**

அமெரிக்காவுடன் இனி பேச்சுவார்த்தைகளுக்கு இடமில்லை என ஈரானின் வெளியுறவு அமைச்சர் சையத் அப்பாஸ் அராக்ச்சி அறிவித்துள்ளார்.

ஈரானின் அணுசக்தித் திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, தெஹ்ரான் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் படைகள் கடந்த பிப். 28 முதல் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதனால், மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் உள்ளிட்ட கட்டமைப்புகள் மீது ஈரான் தொடர் தாக்குதல் நடத்துவதால் அங்கு மிகவும் பதற்றமான சூழல் நிலவி வருகின்றது. இந்தப் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென உலக நாடுகள் வலியுறுத்தியுள்ளன. இந்த நிலையில், அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவது இனி தங்களது அஜெண்டாவில் இல்லை எனவும், மேற்காசியாவில் உள்ள அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய தளங்களைக் குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் தொடரும் எனவும் ஈரானின் வெளியுறவு அமைச்சர் சையத் அப்பாஸ் அராக்ச்சி தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் படைகள் இணைந்து நடத்திய கூட்டுத் தாக்குதல்களில் ஈரானின் தலைமை மதகுரு ஆயதுல்லா அலி கமேனி உள்பட 1,300-க்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## எரிவாயு தட்டுப்பாடு! பாகிஸ்தானில் 2 வாரங்களுக்கு பள்ளி, கல்லூரிகள் விடுமுறை!

**இஸ்லாமாபாத், மார்ச் 11:**

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக பாகிஸ்தானில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கு 2 வாரங்கள் விடுமுறை அளித்து அந்நாட்டு பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் உத்தரவிட்டுள்ளார்.

ஈரான் - அமெரிக்கா - இஸ்ரேல் போர் காரணமாக பாரசீக வளைகுடாவை அரபிக் கடலுடன் இணைக்கும் ஹோர்முஸ் நீரிணையை மூடுவதாக ஈரான் அறிவித்திருந்தது.

மேலும், தடையை மீறி எண்ணெய் கொண்டு செல்ல நினைத்தால் கப்பலை தாக்கி அழிப்போம் என்றும் ஈரான் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதன்காரணமாக அமெரிக்கா பாதுகாப்பு கொடுப்பதாக உறுதி அளித்தும் தனியார் சரக்கு கப்பல் நிறுவனங்கள் ஹோர்முஸ் வழியாக கப்பல்களை இயக்க தயக்கம் காட்டுகின்றனர்.

இதனால், சர்வதேச அளவில் பல்வேறு நாடுகளில் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை அரசுகள் மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில், பாகிஸ்தான் பிரதமர் ஷெரீஃப் தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு திங்கள்கிழமை உரையாற்றினார்.

அப்போது எரிவாயு தட்டுப்பாட்டை சமாளிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், பள்ளிகளுக்கு 2 வாரங்கள் விடுமுறை அளிப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை சேர்ந்த மாணவர்களுக்கு ஆன்லைன் வகுப்புகள் எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனிடையே, அரசு அதிகாரிகளுக்கான பெட்ரோல், டீசல் ஒதுக்கீடு 50 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. அமைச்சர்களின் பாதுகாப்பு வாகனங்கள் பாதியாக குறைக்கப்பட்டுள்ளது.

வங்கியைத் தவிர அரசு அலுவலகங்கள் அனைத்தும் வாரத்தில் 4 நாள்கள் மட்டும், 50 சதவீத ஊழியர்களுடன் இயங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

## ஈரான் போர்: ஐக்கிய அரபு அமீரகத்தின் மீது தொடரும் தாக்குதல்!

**நியூயார்க், மார்ச் 11:**

ஐக்கிய அரபு அமீரகத்தின் மீது ஈரான் படைகள் ட்ரோன் மற்றும் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்களைத் தொடர்ந்து, வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் உள்ளிட்ட கட்டமைப்புகள் மீது ஈரானின் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்தின் முக்கிய கட்டமைப்புகளைக் குறிவைத்து செவ்வாய்க்கிழமை (மார்ச் 10) தாக்குதல் நடத்த முயன்ற ஈரானின் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளைத் தகர்த்து வீழ்த்தியுள்ளதாக, அந்நாட்டு பாதுகாப்புப் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும், வான் பாதுகாப்பு அமைப்புகள் தொடர்ந்து செயல்பட்டு வருவதாகவும் அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

இருப்பினும், இந்தத் தாக்குதல்களால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து இதுவரை எந்தவொரு அதிகாரப்பூர்வ தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

ஏற்கெனவே, கடந்த பிப். 28 முதல் நடைபெற்று அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்களால் ஈரானின் தலைமை மதகுரு ஆயதுல்லா அலி கமேனி உள்பட 1,300-க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சவுதி அரேபியா, குவைத் மீது ஈரான் ட்ரோன் தாக்குதல்!

**தெஹ்ரான், மார்ச் 11:**

மத்திய கிழக்கில் போர் குறைவதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லாத நிலையில், (மார்ச் 10) அதிகாலையில் சவுதி அரேபியா மற்றும் குவைத்தை நோக்கி ஈரான் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தியது.

ஈரான் வளைகுடா நாடுகளில் மீண்டும் தாக்குதல் நடத்தியது. அதே நேரத்தில், வடக்கு ஈராக்கில் நடந்த வான்வழித் தாக்குதலில் ஐந்து ஈரானிய ஆதரவு போராளிகள் கொல்லப்பட்டனர். ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள துபாய் மற்றும் பஹ்ரைனில் இன்று அதிகாலையில் ஏவுகணை தாக்குதலுக்கான சைரன்கள் ஒலித்தன. அதே நேரத்தில் சவுதி அரேபியாவின் எண்ணெய் வளம் மிக்க கிழக்குப் பகுதியில் இரண்டு ட்ரோன்களை அழித்ததாகவும், குவைத்தின் ராணுவம் ஆறு ஈரான் ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியதாகவும் கூறியது. இதுகுறித்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "ஈரானில் இருந்து வரும் ஏவுகணை மற்றும் ட்ரோன் அச்சுறுத்தல்களுக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வான் பாதுகாப்பு தற்போது பதிலளித்து வருகிறது" என்று குறிப்பிட்டுள்ளது. இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க தளங்கள் மீது ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை வீசுவதோடு மட்டுமல்லாமல், ஈரான் அந்நாடுகளின் எரிசக்தி உள்கட்டமைப்பையும் குறிவைத்து வருகிறது. ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டுள்ளதாகக் கூறப்படும் நிலையில், கச்சா எண்ணெய் விலை பேரல் ஒன்றுக்கு 100 டாலர் விலையை எட்டியது. எனினும் இன்று அது 90 டாலர் என்ற அளவில் குறைந்துள்ளது. போர் நீண்ட காலம் நீடிக்காது என்றும், ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கச்சா எண்ணெய் போக்குவரத்தை முடக்கினால், அமெரிக்கா ஈரானை மிகவும் கடுமையாகத் தாக்கும் என்றும் ட்ரம்ப் (மார்ச் 9) எச்சரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரான் போர்: டிரம்ப் - புதின் ஒரு மணிநேரம் தொலைபேசியில் ஆலோசனை!

**வாஷிங்டன், மார்ச் 11:**

ஈரான் போர் குறித்து அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் ஆகியோர் முக்கிய ஆலோசனை மேற்கொண்டுள்ளனர்.

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், ஈரானும் இஸ்ரேல் மற்றும் அமெரிக்க படை தளங்கள் இருக்கும் மத்திய கிழக்கு நாடுகளை தாக்கி வருகின்றது.

ஒரு வாரத்துக்கும் மேலாக இந்த தாக்குதல்கள் நடைபெற்று வரும் சூழலில், சர்வதேச அளவில் எண்ணெய் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், புளோரிடாவில் திங்கள்கிழமை செய்தியாளர்களை சந்தித்த டிரம்ப், ரஷிய அதிபர் புதினுடன் தொலைபேசி மூலம் பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரிவித்துள்ளார்.

இந்த ஆலோசனையின் போது, ஈரான் போர், உக்ரைன் போர் மற்றும் மத்திய கிழக்கில் நிலவும் பதட்டமாக சூழல் குறித்து இரு தலைவர்களும் ஒரு மணிநேரத்துக்கும் மேலாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் டிரம்ப் தெரிவித்ததாவது:

"ரஷியா - உக்ரைன் இடையிலான நீண்டகால மோதல் குறித்து பேசினோம். புதினுக்கும் ஜெலென்ஸ்கிக்கும் இடையிலான உறவு தொடர்ந்து பதட்டமானதாகவே இருக்கின்றன.

ஈரான் மோதலை முடிவுக்கு கொண்டுவர புதிய உதவி செய்ய விரும்புகிறார். உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவருவதில் கவனம் செலுத்த புதினிடம் வலியுறுத்தினேன்." எனத் தெரிவித்தார்.

ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்திய பிறகு முதல்முறையாக டிரம்ப்பும் புதினும் பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## "ஹார்முஸ் ஜலசந்தியை மூடக்கினால் ஈரான் மீது இருபது மடங்கு தாக்குதல்" - ட்ரம்ப் எச்சரிக்கை

**வாஷிங்டன், மார்ச் 11:**

ஹார்முஸ் ஜலசந்தியில் எண்ணெய் விநியோகத்தை தடுக்கும் பணியில் ஈடுபட்டால், ஈரான் மீது இன்னும் கடுமையாக தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ஈரான் மீதான அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகளின் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. இதனால், வளைகுடா நாடுகளில் பெரும் பதற்றம் நிலவுகிறது. ஈரானும் அமெரிக்க ராணுவ தளங்கள் அமைந்துள்ள வளைகுடா நாடுகள் மீது பதில் தாக்குதல் மேற்கொண்டுள்ளது. இதனால் வளைகுடா நாடுகளில் கச்சா எண்ணெய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கச்சா எண்ணெய் சரக்கு போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கும் கச்சா எண்ணெய் விநியோகம் தடைபட்டுள்ளது. சர்வதேச நாடுகளில் எரிபொருள் மற்றும் எரிவாயு விலை ஏற்றம் கண்டுள்ளது. கச்சா எண்ணெய் விலையும் அதிகரித்துள்ளது. இந்நிலையில், ஈரானுக்கு புதிய எச்சரிக்கை ஒன்றை ட்ரம்ப் கொடுத்துள்ளார்.

"ஹார்முஸ் ஜலசந்தியில் எண்ணெய் விநியோகத்தை தடுக்கும் பணியை ஈரான் செய்தால், அவர்கள் இதுவரை எதிர்கொண்ட தாக்குதலை காட்டிலும் இருபது மடங்கு கூடுதலாக மிக கடுமையான தாக்குதலை அமெரிக்கா மேற்கொள்ளும்" என ட்ரம்ப் கூறியுள்ளார்.

மேலும், மத்திய கிழக்கு பகுதியில் உள்ள தீமையை அழிப்பதற்கான உலா இது என்று ஈரான் மீதான தாக்குதலை அவர் தெரிவித்துள்ளார். இந்த தாக்குதல் நெடுநாட்கள் தொடராது என்றும் குறிப்பிட்டார்.

## "ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு மக்களுடன் இணையுங்கள்" - ஈரான் படைகளுக்கு பட்டத்து இளவரசர் கோரிக்கை

**வாஷிங்டன், மார்ச் 11:**

"ஈரானின் தற்போதைய ராணுவம் தங்கள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு மக்களுடன் இணைய வேண்டும். அவ்வாறு செய்தால், சுதந்திரமான ஈரானில் அவர்களுக்கு ஒரு இடம் கிடைக்கும்" என்று ஈரானின் நாடுகடத்தப்பட்ட பட்டத்து இளவரசர் ரெஸா பஹ்லவி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள ஈரான் பட்டத்து இளவரசர் ரெஸா பஹ்லவி தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "ஈரானில் மக்களால் நடத்தப்பட்ட லயன் மற்றும் சூரிய புரட்சி ஆகியவை வீரத்தின் உச்சபட்ச பாராட்டுக்குரியது. அப்போது தெருவில் சுடப்பட்டு காயமடைந்த ஒருவரை தீயணைப்பு வீரர் தூக்கிச்

சென்றார். ஆனால், அவரையும் அவர்கள் கொன்றனர். அது எனக்கு மறக்க முடியாதது.

ஈரான் புரட்சிகரப் படைகளை அழித்து இஸ்லாமியக் குடியரசின் பயங்கரவாத உள்கட்டமைப்பை அகற்றுவதற்கான அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தீர்மானத்திற்கு ஈரானிய மக்களின் பரந்த ஆதரவு உள்ளது. தற்போதைய ஆட்சி ஈரானியர்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்துவது மனிதகுலத்திற்கு எதிரான குற்றமாகும். பொதுமக்களின் பாதுகாப்பும், ஈரானின் தேசிய உள்கட்டமைப்பின் பாதுகாப்பும் நமது முன்னுரிமையாக இருக்க வேண்டும்.

ஈரானின் தற்போதைய ராணுவம் தங்கள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு மக்களுடன் இணைய வேண்டும். நீங்கள் அவ்வாறு செய்தால், சுதந்திரமான ஈரானில் உங்களுக்கு ஒரு இடம் கிடைக்கும்" என்றார்

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் உச்சத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் மதகுரு அமைப்பான ஈரானின் நிபுணர்கள் சபை, ஞாயிற்றுக்கிழமை மறைந்த தலைவர் அயத்துல்லா காமேனியின் மகன் மொஜ்தபா காமேனியை (56வயது) அந்தப் பதவிக்கு நியமிப்பதாக அறிவித்ததைத் தொடர்ந்து, அவர் இந்தப் பேட்டியை அளித்துள்ளார்.

தனது தந்தையை விட கடுமையான போக்கைக் கொண்டவர் என்று கூறப்படும் அயத்துல்லா செய்யித் மொஜ்தபா ஹொசைனி காமேனி, 1979 ஆம் ஆண்டு இஸ்லாமியப் புரட்சிக்குப் பிறகு ஈரானின் மூன்றாவது உச்சத் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

# எரிவாயு தட்டுப்பாடு: பெட்ரோலியத்துறை மந்திரியுடன் பிரதமர் மோடி ஆலோசனை

# ‘எரிவாயு தட்டுப்பாடுக்கு மாற்று ஏற்பாடு செய்வீர்’

# அத்தியாவசியத் துறைகளுக்கு சிலிண்டர் முன்னுரிமை!

# மாநிலங்களவை எம்.பி.க்களாக 7 மாநிலங்களில் 26 பேர் தேர்வு!

# ஈரான் மீது இருபது மடங்கு தாக்குதல்’’: ட்ரம்ப் எச்சரிக்கை


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 11.03.2026 புதன்கிழமை இலவச இ–பேப்பர்